உ

கடவுள் துணை.

# வித்தியாதரன்.

## இனிய தமிழ் நாவல்.

சென்னை விஜயவிகடன் பத்திரிகைப்

பிரசாரகன்

4166

மதுரை,

**A. பாண்டியன் அவர்களால்.**

விருதுபட்டி,

சச்சிதானந்தம் பிரஸில்,

பதிப்பிக்கப்பெற்றது.

[இதன் விலை அணா 12]

1913

# முகவுரை.

4166

மனிதசுபாவம் பின்வரும் முன்னேற்றத்தையே குறித்தோடு கின்றதியற்கை. அவ்வாறோடிய வேகத்தில் இகத்தையுங்கடந்து பரத்தையுநாடிப்பறந்துவிட்டன. நம்முன்னோர்களின் கொள்கையுமிவ்வாறேசென்றிருக்கின்றன. தெய்வநிச்சயமும், பரத்தின் காரியமும், நம் முன்னோர்களாலியற்றிய அரியபெரிய நூல்களில், மலியக்கிடப்பினும் நுண்ணிய அறிவுடையாருக்கே எட்டுமாறு அமையப்பெற்றிருக்கின்றன. அற்ப அறிவினர் அந்நூலறியுந்திறமையின்றி, ஆகம இதிகாச புராணங்களையேனும், பார்த்துத் தெளிவோமென்றாராயப்புகின், அறிவுமயக்கமுற்றோன், அவுடதமுண்ணப்போய், அபினையுங் கஞ்சாவையுஞ் சாப்பிட்டது போலாகிவிடுகின்றது. நம்மைப்படைத்த கடவுள், நட்சேத்திரக்கூட்டம்போல், ஒருவராகவேயிருக்கிறாரென்றோதினால் எப்படியாய்ந்து எவ்வாறு தெளிகிறது, உலகப்பிரயோசனமானகாரியம் இன்னதென்றறியு மார்க்கத்தைக் காணவே காணோம். இதுபற்றியே தற்கால அறிவாளிகள், மேலுட்டாராசாரம் பற்றி, புதிது புதிதாக நாவலென்றெழுத முன் வந்தார்கள். அவைகளிலனேகத்தையானும் பார்த்துளேன். என்புத்திக்கு இவ்வித்தியாதர னென்னும் நாவலைப்போல உலக வாழ்க்கைக்கவசியமான ஆராய்ச்சியின் குணம், உதிக்கும்படியாகச்செய்யும், நாவல் இன்னு மொன்றிருப்பது வாசக எட்டவில்லை,

## இந்நாவலின் முக்கிய கருத்தாவது:—

தெய்வ நிச்சயத்தை வெகு தெளிவாய்ச்சொல்லி வணங்குமுறையும், அடையும் பலனும், விளக்கிக் காட்டுகிறது. நிச்சயமறியாரை, ஏமாற்றிப்பொருள்பறிக்கும் ஆரியதந்திரிகளின் மோசத்தை வெளியாக்குகிறது. இதைவாசித்த ஒவ்வொருவருடைய மனதிலும், இராஜவிசுவாசம் வேரூன்றிப்படர்ந்து காய்த்துப் பழுத்தொழுகுமென்றே நினைக்கிறேன். தருமமின்னதென்று தெளிவாய்க் காட்டிச் செய்யுமுறையுமோதுகிறது. உலகப்பிரயோசனமானது இன்ன வஸ்துத்தானென்று

ம், அதைத்தேடுமுறை இவ்விதமென்றும், வீண் செலவொழு விகாரங்கழித்தல், புரு பாரிபரியல்பு. கல்வியின் பெருமை, வத்தின் மகிமை, ஒற்றுமையின் பிரயோசனம், கைத்தொழிலின் சிறப்பு, வியாபாரத்தின் முறை, விவசாயத்தின் பிரயோசனம், எந்திரங்களின் போக்குவரத்து, இனியமொழி, சாலவித்தைகளின் தந்திரம், பாலர் பாலகிகளை வளர்க்குமுறை, விவாகச்சடங்குகளின் ஒழுங்கு, பிரயோசனமில்லாத காரியத்தில், வீணேமயங்கிப் பொருளையழிப்போரைத்திருத்தல், நகைசெய்துபோடுவதால் வருமாபத்து, சோதிடமந்திரமயக்கறுத்தல், சாதிப்பித்தியஞ் சமையப்பயித்தியமொழித்தல், இன்னுமநேக நன்மைகளை யடையவேண்டிய அளவு தெளிவாய்க்காட்டியிருக்கிறது. ஆகையால் உலக வாழ்க்கையை விரும்பிய, ஒவ்வொருவர் கையிலும், இவ்வித்தியாதரனென்னும் நாவலானது டைரிப்புஸ்தகம்போல அவசியமிருக்கவேண்டுமென்றே நினைக்கிறேன்.

பிரமதீச ஹூ வைகாசிமீ 5உ

குணமாலை சுப்பையா,
விருதுபட்டி.

உ

# வித்தியாதரன்.

## 1வது அத்தியாயம்.

4166

ஆ ஹா!! ஆ ஹா!!! என்ன சூடு என்ன வெப்பம், உடம்பெல்லாமெறிகின்றதே, பொறாமைக்கார னுள்ளம்போல வேகின்றதே, யார்செய்த மோசம், எவர்செய்த சூது மகா பாபிகள் என்னமோ ஒரு பொடியைக் கண்ணிற்றூவி விட்டார்களே வர வர இருண்டு போகின்றதே கண் போய்விடும்போ லிருக்கிறதே இக்கொடிய பாலையை யெப்படிக் கடப்பேன் ஒதுங்க நிழலில்லையே அருந்தத் தண்ணீர் கிடையாதே எத்துணை கொண்டு கரை யேறுவேன், ஐயோ முழுதுமிருண்டு விட்டதே கல்லா ரிதயம்போ லானதே உலகமாதாவே உன் றுணையல்லால் வேறெஃதுமில்லையே காலே கண்ணாயிற்றே இதுகொண் டெங்கு செல்வேன் என் கதி தானிவ்வாறாயிற்றே எனதாசைக் கணுவிலாக் கரும்பே சமாதானி? யார் துணைக் கொண் டிருப்பாய் என் பிரிவாற்றாமலிறந்து விடுவாயோ ஐயோ என்ன நேசம்! என்ன அன்பு! சலவிசற்சனம் போய் வருமுன் னிருதர மெட்டிப்பார்ப்பாயே என்ன அழகு! என்னதேசசு! என்ன வசனம்! என்ன இனிமை இன்னுமொருதர முன்னைக்காண்பேனா நான் கண்ணிழந்ததைக் கண்டாற் சகிப்பாயா விவேகசூனியன் ஆனேனே ஆயுதபாணியாய் வெளியேறாமல் வெறுங்கையனாய் வந்தேனே துஷ்டர்களை சம்காரஞ் செய்து என் குழந்தையை மீட்காமல் விட்டு விட்டேனே மகா பாவிகள் எங்குகொண்டேகினரோ என் செய்திடுவரோ குழந்தை எப்படித் தவிக்கின்றானோ பசியால் வருந்துவானோ படுக்கையிற் றாலாட்டுவதாரோ புஷ்பசயனம்கிடைக்குமாபொன் னூஞ்சலாடுமோ ஐயா வென்றோடி வருவையே உலகத்தைஎப்படி ரக்ஷிக்கலா மென்பையே ஸ்திரீகளும் படித்தாலொழிய முன்னேறாதென் றனையே உலகமுன்னேற்றத்திற்கு ஒற்றுமையோர் கருவியென்றனையே உன் வயதுக்குத் தகாத யோசனை செய்யாதே

யென்று உன் தாய் தடுத்தாளே ஜெகரக்ஷகா எங்கிருக்கின்றாய் அப்பா வென்றென்னை இனி யார் கூப்பிடுவர். அருமைக்குழந் தாய் உன்னை இழந்துவிட்ட சமாதானி சகிப்பாளா மகா பாவியா னேனே என்ன துக்கம் என்ன சோகம் எப்படி யாற்றுவேன் ஒற்று மையிலாக் குடும்பம்போ லுலைந்து விட்டதே ஆ ஆ! ஆயாசமாய் வருகின்றதே சற்றயர்கின்றேன் எழுந்துவிட்டேன் இனிமேல் மிஞ் சின காரியங்களை யோசிக்கி லென்ன பயன் எழுந்து நடப்போம், எங்காவது போகுமல்லவா போன வழியே சென்றால்தானே ஏதா கிலுமோரேதுவுண்டாகும் திசை குறிப்பானேன் நடப்பதுதானே கருமம் எவ்வளவு தூரமோ நடந்துவிட்டோம் கால் நோகின்றதே முள் தைக்கின்றதே கல் இடறுகின்றதே இப்பொழுதென்னவோ காலிற்றட்டியதே இஃதென்ன ஒரு கழியல்லவா ஜனசஞ்சாரமில் லாத காட்டிற் கழியேது இதை யோசிக்கப்புகின் நாம்வெகுதூரம் நடந்துவிட்டோம். மனித சஞ்சாரமான காடு அடுத்துவிட்டது இனி எப்படியுமோரேது வுண்டாகும் காலே கண்ணானவனுக்கு கோலே கண்ணானதோரேதுவல்லவா? இத்துணைகொண் டின்னும் செல்வோம். பக்ஷிகள் ஓசை கேட்கின்றதே மிருகத்தொனி யுண் டாகின்றதே இது இடபமுக்காரமல்லவா நல்லது விமோசனமும் நெருங்கிவிட்டது. அத்துன்மார்க்கர் போட்டோடிய சிற்றுண்டிச் சாமான்களும், இதுவரை யிருந்தது. இன்னுமிரண்டொரு திவ சந்தா னிதனாற் கழியும். இப்போது குளிர்ந்த காற்று வீசுகின் றதே சமீபத்திற் றடாகமும் சோலைகளு மிருக்கவேண்டுமே?

இன்னுஞ் செல்வோம் ஈதென்ன கோலிற் றட்டியது. ஓகோ கற்பக விருட்சமல்லவா நல்லது இது ஒரு பலத்த ஆதரவுதான் வேண்டியதெல்லாம் கொடுக்கும். காய்களால் உண்டி குடிநீர்தயி லமும் குரும்பைகளால் ஆடையும், தளைகளால் வசிப்பிடம், படு க்கை யிருப்பு, காற்றாது கருவி, துடப்பம், முறம் இன்னுமொரு குடும்பசச்வரக்ஷணைக்கு வேண்டியதெல்லாம் உண்டு நானிதிலேறு கின்றேன். முற்றினது மிளமையுமாய் சில காய் பறிக்கின்றேன். பறித்தது போதும் இறங்குவோம் சதாகாலமும இதிலேயே வசிக் கலாம். இக்காய்களை எப்படிச் சேதிக்கின்றது, ஆயுதமில்லையே பக்கத்தில் ஏதாகிலும் இருக்குமா இன்னும் சிலதூரம் சென்று பார்ப்போம். இஃதென்ன சமீபத்திலேயே சலசலவென் றோசை

மிடுகிறது, அத்தொனி நோக்கிச் செல்கின்றேன். இதோ தட்டு கின்றதே இதுவும் பஞ்சதருக்களி லொன்றுதான் இதிலாயுதமிரு க்கும்! ஏறுவோமா இதென்ன திடீரென விழுந்தது சரிசரி தேடி யதே கிடைத்தது நல்ல கருக்கான ஆயுதந்தான் செய்கருவி யாக் கிக்கொண்டேன் சேதித்துப் புசிக்கின்றேன் என்ன சுகம் சரீரா தியந்தம் சிலீரென விருக்கின்றதே ஆயாச மெல்லாம் காயாசம் வாங்கிவிட்டதே பசி பரதேசம் போய்விட்டதே ? ருசி நாவைச் சுழற்றுகின்றதே இனி வேண்டியதென்ன ? என் போலியர் ஆயு ளுள்ளவரை இருக்கலாமல்லவா எவர்களையும் எதிர் பார்ப்பதவசி யமா? இதனுற்றான் குடும்பபாரம் தாங்காம லேற்று விழுந்தகதற்கள் தவஞ் செய்கின்றோமென் றிருக்கின்றதெல்லாம் கற்பகவிருட்சத் தின் அடியையே குறிக்கின்றன, தனி யோசனைக்கு ஈதொருநல்ல விடம் கவலைகாற்றாய்ப்பறந்துவிட்டது. கற்பகம்பலன்தாரக்காலமு முண்டோ இருக்கவே மாட்டாது, இருந்தாலப்பெய ரேற்படாது. நாமும் வந்து ஆண்டுக் கணக்காகின்றதே என்னுளில்லாதிருந்தது இன்னுமொரு வேலை செய்வோம் இரண்டாந் தருவிலேறி இளம் பாளையைச் சீவி இங்குள்ள குடுக்கைகளால் கட்டி அமுதெடுத் தருந்துவோமா நல்லது அவ்வாறே செய்கின்றேன்; நன்றா யிருக் கின்றதே லாகிரி யுண்டென்று சாஸ்திரம் கூறிற்றே எவ்வாற்றாலப் படி யோதியது? பழநறை யுண்போற்கா யிருக்கலாம் அளவுக்கு மிஞ்சினால்அமுதமு நஞ்சென்றொரு பழமொழியுமுண்டே அதன் கருத்தென்ன காலதாமதஞ்செய் தருந்துவதால் கெட்ட குணங் களேற்படும்போ லிருக்கின்றது வேறு காரணம் தோன்றவில்லையே நாட்செல நாட்செல கிஞ்சிற்றேதுக்கள் தோன்றுகின்றன. அதிலு மின்றொரு வகையாய்த் தெரிகின்றதே? ரூபங்காண யிபலாமல் கட்டைபோல் அநேகமிருக்கின்றாப்போ லிருக்கின்றது இன்றிரவு கழித்தறிவோம் வரவரச் சுகமாகின்றதே இன்றொருவாறு பூரண சுகம்போலும் தோற்றுகின்றதே இது ஒரு சோலையல்லவா கற்ப கத்தின் றலையிலுள்ள காய்களெல்லாம் தெரிகின்றதே நாமிருப்ப தோர் மலையடிவாரம்போற் றோற்றுகின்றது. நமது கண்ணொளி பழபபடி வந்துவிட்டதோ பின்னையேன் மனிதரூபங்கள் தோன்ற வில்லை அது இவ்விடம் கண்ணின் குற்றமன்று மனிதரிலாக்குறை தான் இப்படியே நம் காலத்தைக் கழித்துவிட்டால் சமாதானி யையும் ஜெக ரக்ஷகனையும் என்னுளில் காண்போம். நமதூர் எத்

திசையி லிருக்குமென்று புலப்படவில்லையே இங்கேயே இருந்தால் எப்படித் தெரியும். ஒரு பக்கமாய் நேரே போய் இக்குன்றை யேறி இரங்குவோம். எவ்வூராவது தென்படாதா நடக்கின்றேன் பசிக்குப் பழவர்க்கங்கள் அகப்படுகின்றன மலையை விட்டிறங்கி னோம்.

இதோ ஒரு கிளைவழி யிருக்கின்றதே இதைப் பின்றாடரு வோம். வெகுதூரம் வந்துவிட்டோம்; அதோ சில மனிதர் வரு கின்றார்களே அவர்கள் என்ன பாஷைக்காரரோ! நமக்கும் பத்துப் பாஷையில் பாண்டித்திய முண்டல்லவா? அது கடந்து பேசினல் பார்த்துக்கொள்வோம்;

## வினு விடை.

வித்தியாதரன்:—வழிப்போக்கன் நம்மை நோக்குகின்றானே ஓகோ இவன் குஜராத்திப்பாஷையன்றோ பேசுகின்றான்? நமக்கும் தெரியுமல்லவா? நாமும் பேசுவோம்; நான் சமீபமுள்ள மலையிலி ருந்து வருகின்றேன் தாங்களெங்கிருந்து வருகின்றீர்கள்?

வழிப்போக்கர்கள்:—ஐயா! நாங்கள் காளிக்கட்டத்திலிரு ந்து வருகின்றோம்,

வித்:—அது இன்னம் எவ்வளவு தூரமிருக்கும்?

வழி:—ஒருநாட் பொழுதி லாறிலொரு பாகம் நடக்க வேண் டும்,

வித்:—சரி! செல்லுங்கள் நடக்கின்றேன்.

வழி:—மணற்காடுகளா யிருக்கின்றதே?

வித்:—ஊர் வந்துவிட்டோம் கடைத்தெரு வழியாய்ச் செல் வோம். இதுவும் நம் பதிக்குக் கொஞ்சம் குறையாய்ச்சரியாயிருக் கும்போ லிருக்கின்றதே! இன்னும் செல்வோம் அதோ ஒரு வியா பாரி நம்மையே கூர்மையாய்ப்பார்க்கிறான்; சமீபத்தில்போவோம்.

வித்:—ஏன் என்னைப் பார்த்தவண்ணமா யிருக்கின்றீர்?

கடைக்காரன்:—உம்மை எங்கேயோ பார்த்தஞாபகமாயிருக்கின்றது. ஆனாலும் நான் பார்த்த பருவம்போ லில்லை. வயதுமுதிர்ந்து காட்டுகின்றது. என் ஞாபகத்திலுள்ள ஆளானால் இப்படி வரமுடியாதே என்று சந்தேகிக்கின்றேன்.

வித்:—நானெப்படி வந்திருக்கின்றேன்?

கடை:—தாழ்ந்த நிலமையும் ஏழமைப் பருவமுமா யிருக்கின்றீர்.

வித்:—தாழ்ந்தோ ருயர்வதும், உயர்ந்தோர் தாழ்வதும் இயற்கைதானே.

கடை:—அப்படியானால் நீரு முயர்ந்த நிலைமையி லிருந்திருப்பீரோ!

வித்:—ஒரு கால மப்படியு மிருந்திருக்கலாம்.

கடை:—ஓகோ! சந்தேகத்தின்மேல் சந்தேகமே உண்டாகின்றது. உம்முடைய சுயபாஷை என்ன?

வித்:—என்னுடைய சுயபாஷை தமிழ்.

கடை:—தமிழா! என்ன இப்படிச் சொல்கின்றீர்! என்உள்ளமெல்லாம் நடுங்குகின்றதே! ஆனாலும், விசாரியாமல் விடப்படாது தாங்கள் யார் வித்தியாதரரா?

வித்:—ஆம் வித்தியாதரன் தான் அதிலென்ன சந்தேகம்.

கடை:—நடுக்குற்றுக் கீழிறங்கி ஆ யென் துரையே! உன் பாத தூளிக்குச் சமானமாகா என் போலியர்பால் நின்றேறுதும் காலமுமா வந்தது? இவ்வழகிய குஞ்சிதபாதம் தரையில் நடக்கவும் கற்றுயிருந்ததுு? உன் அரசெங்கே? செங்கோலெங்கே? படையெங்கே ? திரள் திரளாய்க் குவிந்த செல்வமெங்கே ? வாகனமெங்கே? பலதேச வரசர் திரை கொணர்ந்தளக்கும்மாளிகையெங்கே? திரைகடல் தாண்டியும் செல்லுமாணை எங்கே? பொதிகையிற்கட்

டிய கொடி எங்கே? பராரியாய், பாதசாரியாய் நடந்துவந்தாயோ? உன் பாதத்தை முத்தமிடுகின்றேன்; கண்ணில் ஒத்திக் கொள்ளு கின்றேன்; ஆசனமிடுகின்றேன்; எழுந்தருளுக; போஜனம் தயா ரா யிருக்கின்றதருந்துக; தனியே வந்த காரணமோதுக.

வித்:—எல்லாம் முடிந்தது; உள்ளங் குளிர்ந்தது; என்பா ஷை இங்கு மிருந்ததே என் றானந்தம் மேலாடுகின்றது; உட்கா ருங்கள். கொஞ்சநாளாய் நம் தேசத்தில் ஆரியத்தீப் பூண்டுகள் முளைத்து, ஒற்றுமைப்பயிர் தீய்ந்து, வேளாண்மை குன்றி, எங்கு பார்த்தாலும் பஞ்சம்; எங்குபார்த்தாலும் கொள்ளை; பார்த்தயிட மெல்லாம் ஜாதிச்சண்டை; சமயச் சண்டை; தேசப் பிரிவினை; நாட்டுப்பிரிவினை, ஊர்ப்பிரிவினை, தெருப்பிரிவினை, குடும்பப்பிரிவினை இன்னுமெத்தனை பிளவு, எத்தனையிளவு, கல்வி கடலேறிவிட்டது; பாஷை பாதாளம் போய் விட்டது; இன்னும்கொஞ்சநாளையில் நம் பாஷை யிருந்தவிடமே தெரியாமல் போய்விடும்போலிருக்கின்றது; யாரேனும் தாங்கப்புகின் ஜாதிதடுக்கின்றது; மீறிச்செய்யின் ஆரிய நஞ்சுகொன்றுவிடுகின்றது; நம்தேச மிக்கெதியாய்விட்டது; நானு மிங்கு வந்திருக்கின்றேன்; இஃதொழிக. நும் க்ஷேமமென்ன ?

கடை:-பிரபு! நான் தங்கள் தேசவாசி; இங்குவந்துபல்லாண்டா கின்றது; வெகுதிரவியம் சம்பாதித் திருக்கின்றேன்; பெயர்சண் முகம், மீந்தநிதியால்ஏதாவது தருமம்செய்ய நினைக்கின்றேன்: எவ் வகையான தருமம்இட்டாரையும்; ஏற்றாரையும்கூடுதலுண்டாக்கு மென்றுயோசனையிலிருக்கின்றேன்; என்புத்திக்கொன்று மெட்ட வில்லை; தங்கள் தரிசனமும் கிடைக்கப் பெற்றேன்; உத்தரவான பிரகாரம் செய்கின்றேன்.

வித்:—ஆகா, நும் யோசனையை மெச்சுகின்றேன் !

## குறள் வெண்பா.

"ஆண்டு தருமத்தை யறிபர்தான் செய்தருமம்
மாண்டமரத் திற்கணைத்த மண்."

என்று நம் முன்னோர்களும் கூறியுள்ளார். இக்காலம் நம் தேசாசாரமாய்த் தருமமென்று சொல்லப்படுவன 32. அவை வருமாறு:

ஆதுலர்க்குச்சாலை:—அதாவது ஏழைகளுக்கு வீடு கட்டி வைத்தல். அதன்குணம் நோக்குக அவ்வில்லமைத்துக்கொடுத்த ஊரில் தொழில் நடவாவிட்டால் பிழைப்புக்குச்சங்கட முற்று அவ் வகம் புறம் கிடக்க ஓடி விடுவாருமுளர்.

பசுவுக்கு வாயுறை:—நாதமற்ற மாட்டுக்குப் புற் போடுதல். தீனியிடுவது புண்ணியமாயினும், சில துஷ்டப் பசுக்களுமுள; தின்று கொழுத்துச் சிறுவர் சிறுமிகளை முட்டிக் கொன்றாலும் கொல்லும்.

சிறைச்சோறு:—அரசபந்த முற்றோருக்கன்னமிடல் தற்கால மதுசெய்ய இயலாது. ஒருவாறு செய்தாலும் மகா துஷ்டர்களுமி ருப்பர்.

அறவைச் சோறு:—அனாதர்களுக்கு அன்னமிடுதல். சோம் பேறியா யுடல் வளையாது வேலைக்குப் பயந்து குடும்பத்தில் பெற் றோரைத் தவிக்க விட்டு வருவாருமுளர்.

மகப்பெருவித்தல்:—பிள்ளைப் பேறு பார்த்தல். தற்காலம் வயித்திய சாஸ்திரம் முடிவா யறிந்தாருமிலர். ஒருவாறு அறிந் தாலும் சரீர பேதங்களால் செய்முறை தவறி விடுகின்றது. பார்க் கப்போனதே ! கெடுதலாய் வந்தாலும் வரும்.

மகப்பால் வளர்த்தல்:—இளம்பிள்ளைகளுக்குப் பால்கொடுத் தல். நாம் கொடுக்கும் பாலால் ஒரு சமயம் குழந்தை நோய்கண் டிறந்தாலு மிறக்கும்.

நோய் மருந்து:—வியாதியஸ்தருக்கு மருந்து கொடுத்தல். சரீரபேதங்களால் மருந்தே கொன்றாலும் கொல்லும்.

தலைக்கெண்ணெய்:—தேய்க்க எண்ணெய் கிடையாற் குதல். கலப்பெண்ணெயாயிருந்து சரீரத்துக்கொத்துக் கொள்ளாமல் கண்ணைக் கெடுத்து விட்டாலும் விடும்.

மடம்:—அவ்வார்த்தையின் அர்த்தமே தருமமல்ல வென்று வெளியாகின்றது.

தடம்:—நீர்துற வுண்டாக்கல். சிற்சில சமயங்களில் பாலர் பாலகிகள் தவறி விழுந்திறந்து போகவும் கூடும்.

ஏறு விடுத்தல்:—பொலி எருது வாங்கி விடுதல். அது ஜீவாதாரமா யனேகரிடும் பயிரினையு மழிக்கும்.

விலை கொடுத்துயிர் காத்தல்:—தூக்குத் தண்டனை யடைந்தவனை பணங் கொடுத்துரக்ஷித்தல். அவ்வாறு செய்யின்மீண்டு வந்த பின்னுற் செய்யும் குலைபாதகம் யாரைச்சேருமோவென்று சந்தேகிக்கின்றேன்.

கன்னிகாதானம்:—பிரமசாரிகளுக்கு விவாகம் செய்துவைத்தல். அவ்வாறியற்றில் இருவரும் குடும்ப வாழ்க்கையில் ஒத்துழையாது மாறுபட்டு பல தீமைகளியற்றில் செய்துவைத்தாற் கென் பயனும்.

பூதானம்:—பூமியைத் தானம் செய்தல். தியாகம் பெற்றோன் கடன் கொண்டு பயிரிட்டியும் பருவமழை தாழ்ச்சியால் வேளாண்மை குன்றில் மேலு மேலுங் கடனேறிப் பூர்வசுகத்திலும் குறைந்து கஷ்டப்படுவாருமுளர்.

சொர்னதானம்:—பணத்தைத் தான மிடுதல். சிற்சில சமயம் கொண்டோன ஏகும் நெறியில் திருடரா லடியுண் டிறக்கினு மிறப்பன். அவ்வாருயின் அறமியற்றினோரடையும் பலன் எவ்வாருமோ?

அன்னதானம்:—சோறு போடுதல். உலகத்தில் பிரதான்னமான காரியம். பசி தீர்த்துக் கொள்ளுதலையன்றி வேறொன்றி

ருப்பதுவாய் என் புத்திக் கெட்டவில்லை. மூதுணர்ந்தோர்வாக்கியமு முள அவை வருமாறு:—

## நேரிசை வெண்பா.

"சேவித்துஞ் சென்றிரந்துந் தெண்ணீர்க் கடல் கடந்தும்
பாவித்தும் பாராண்டும் பாட்டிசைத்தும்—போவிப்போம்
பாழி னுடம்பே வயிற்றின் கொடுமையால்
நாழி யரிசிக்கே நாம்."

சோம்பேறியா யிருந்துவிடாது. சகல தொழிலையும் செய்யும்படி ஏவுவது பசியே; ஆனவாற்றால் சகலரும் ஏதாவதொரு தொழிலை நாடுகின்றனர் இவ்வேலைகளால் சங்கடப்படும் சோம்பேறிகள் யாரேனும் அன்னதானம் செய்வதாய்க் கேள்விப்பட்டால் வேண்டிய மட்டும் கிடைக்குமென்று தானுண்டுவிட்டுச் சோம்பேறியாய் மடத்திற் றூங்கி விடுவான். அன்னோன் குடும்பத்துற்ற பெண்டீர் பிள்ளைகள் விருத்த மாதா பிதாக்கள் பசியால் மெலிந்து இறக்கினு மிறப்பர். அப்பாவம் எவரைச் சேருமோவென்ற சந்தேகம்.

இத்தியாதி தருமங்களில் சில தீமைகள் கலந்திருப்பினும் செய்யப்படாதென்றதென் கருத்தன்று. இவ்வாறூன கோதமையாமலும் கொடுத்தாற்கும் குறையாது, பெற்றவர்க்கும் திருப்தியாய், ஆன்றோர் வாக்கியப் பொருத்த முள்ளதாய், என்னறிவிற் கெட்டியது வித்தியாதானமன்றி வேறமையவில்லை. அதுபற்றியே ~~ஔவையார்~~ குமரகுருபர சுவாமிகளும்.

## வெண்பா.

"அறம்பொரு ளின்பம் வீடும் பயக்கும்
புறங்கடையி னல்லிசையு நாட்டும்—உறுங்கவலென்
றுற்றுழியுங் கைகொடுக்குங் கல்வியி னூங்கில்லை
சிற்றுயிர்க் குற்ற துணை.

எனக் கூறினர் அறத்தின் காரிய மிவ்வா றிருக்கின்றன. இன்னும் பெரியோரைக்கலந்து நம் யோசனைக்குத்தகுந்ததைச் செய்யும். யாதாமொருவன் ஓர்தருமகாரியம் செய்யப்புகின் அவ்வறத்தாலடையும்பலன்மற்றேருலகத்திலென்றும், இவ்வுலகத்தில் கஷ்டப்பட வேண்டியதுதானென்று ஓதும் ஆரிய தந்திர நூலின் மயக்கத்தி லிறங்கி விடாமல் செய்தேன்; கண்டேன்; என்றதையே ஆராய்ந்து செய்யும்.

வியாபாரி சற்றுலோசனை செய்து பிரபு! வித்தியாதர்மமே சிறந்ததென்று நிச்சயிக்கின்றேன். அவ்வாறே நம்ஜனன தேசத்திலோர் வித்தியாசாலை வைப்பதா யுத்தேசிக்கின்றேன். அக்காலம் தாங்களுமங்கு எழுந்தருளியாகுமாறு வேண்டுகின்றேன். இங்குள்ள செல்வமெல்லாம் தங்கள்சொந்தமே தேவையானதை எடுத்து உண்டுடுத்தி சுகமா யிருக்குமாறு வேண்டுகின்றேன் இவ்வாறுய்க் காலம் பல நாட் கழிந்தன.

## 2-வது அத்தியாயம்.

ஆ! என்ன விபரீதம்! இன்னுங் காணேமே! எழுநிலைமாடத் துப்பரிகையினின்று பார்க்கின்றேன். எங்கும் தென்படவில்லையே! சொர்னச் சுவர்களும், வயிரத் தூண்களும், கோமேதப் பலகைகளும், சந்திரகாந்தக் கற்களாலமைத்த சயன வரைகளும், பாலைவனமொத் தெரிகின்றதே! என்ன மாறுதல்! வீடு காடாய் விட்டதே! ஆ! பார்த்த விடமெல்லாம் பயங்கரமா யிருக்கின்றதே! தோழியின் றொனி ஊழியினிடிபோற் றொனிக்கின்றதே! ஜெகரக்ஷகன் திருடன் கைப்பட்டான் என்றொரு வார்த்தை கேட்டதே! உல்லாசமாய் உடனிருந்த நாதன் றிடீரென் றோடினரே! எங்கு சென்றனரோ! எவ்விட மேகினரோ! கொடும்போர் விளைந்ததோ! குழவி எக்கதி யாயிற்றோ! ஐயோ! என தன்பே! ஆசைக்கடலே! பாசக் தயிறே! பரம தயாளு பிரியாவுருவே! மரகதவடிவே! எவ்

வுயிர்க்குந் தாயே! ஏழை பங்காளா அரைக்கணம் பிரியச் சகியோமே! ஜலக்கிரீடை சென்று வருமுன் னிருதரம் பார்ப்பீர்களே! எப்படிச் சகிப்பேன்! எங்கு தரிப்பேன்! இறந்துவிடத் துணிகின்றேன்! ஒருவாறு சேயும், பதியும் திரும்பில் எங்ஙன முய்யும்? நாட்கணக்காயின நாதன் சேய் செய்தி, யாதும் புலப்படுகின்றில; இங்ஙனமுய்யின் பிழைப்ப தரிதாய் விடும். நாதன் சென்றவிடம் நோக்கிச் செல்வோம். எவ்வாற்றாயினுமாகுக, இவ் வேடத்தோடேகின் இடையூறுண்டாம். ஆதலின், நம்பதியினுடுப் பணிந்து வழிச்செலவுக்கு வேண்டியன தயாரித்து, இன்றிரவே செல்கின்றேன்! நெடுந்தூரம் நடந்தேன்; பலவூர் கடந்தேன்; ஆங்காங்கு முசாவினேன்; நம் செய்தி யொன்று மெட்டவில்லை. இனி எங்கு செல்வது? யாரைக் கேட்பது? திக்கற்றவளானேனே! அதோ ஒருவர் தலையில் உருமாலும், நீண்ட சட்டையும், கக்கத்தில் புஸ்தகங்களுமாக வருகின்றாரே! அவரைக் கேட்டால் ஏதாகிலும் தெரியுமா? விசாரிப்போம்; ஐயா! இழந்ததைத் தேடிக் கண்டடைந்தவர் எங்கேனு முண்டென்று விசாரித் திருக்கின்றீர்களா?

போதகர்—ஆம்; ஆம். அவர் எனக்கு நன்றாய்த்தெரியும்; அவருடைய காரியமாகவே நான் நாடெங்கும் சுற்றி வருகிறேன்.

வேடந்தாங்கிய அரசகுமாரன். மனந் துணுக்குற்று தயவு செய்து உட்காருங்கள் குழந்தையை மறுபடியும் மீட்டுக்கொண்டாரா? அது உங்களுக்கு நன்றாய்த் தெரியுமா?

போதகர்—அதிலென்ன சந்தேகம்! குழந்தையின் பொருட்டாகவே தமது இரத்தத்தைச் சிந்தினார். அது இன்னும் உமக்குத் தெரியாதா? உம்மையும் சேர்த்துக்கொள்ள விரும்புகின்றார்.

வேட—ஐயோ! என் நாதன் இரத்தம் சிந்தும்படியாகவா நேரிட்டது? சரி, சரி. என் ஜீவியமும் இன்றோடு முடிந்தது. இனி இருந்து என்ன பிரயோசனம்?

போத—அரசகுமாரனே! பயப்படாதேயும். மறுபடியும்மூன்றாம் நாள் உயிரோடெழுந் திருந்தார். உம்மையும் தம்மிடத்திற்

களைழக்கின்றார். என்னையும் உம்மிடத்திற் கனுப்பியதும் அவரே.

வேட—ஐயா ! சந்தோஷ மாயினேன். எங்கிருக்கின்றார்? பெயர் யாது? என்னை எவ்விட மிருப்பதாய்ச் சொன்னார் ? தயவு செய்து சிக்கிரம் சொல்லுங்கள்; என்னை யவரிடம் கொண்டுபோய்ச் சேருங்கள் ! காலதாமதம் செய்யாதீர்கள்.

போத—இருப்பிடம் கூட உமக்குத் தெரியாதா ? அவர் உமக்காகப் பாடுபட்டது கணக்குண்டா ? பரமண்டலத்தில் பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார். அவர்பெயரோ இயேசுக்கிறிஸ்து அவரையே நம்பும் இரட்சிக்கப்படுவீர்.

வேட—: இஃதென்ன வெட்கக்கேடா யிருக்கிறது. நாமெதை க்கேட்கின்றோம் அவர் எதைச் சொல்கின்றார். பயித்தியம் பலவிதம் என்றதுபோல் இது ஒருவகைப் பயித்தியம். நமக்குத்தான் என்னவேலை ? இவரோடும் சற்று சம்பாஷிப்போம்: ஐயா! தாங்கள் சொல்லுகின்றவர் யாவர் ? எந்தவூர்? யாவர் குமாரன் ? அதன்வியரங்களைத் தெளிவாய்த் தெரிய விரும்புகின்றேன்.

போத:—இப்படிக் கேட்போரைக் காணேமே என்றுதான் நான் தேடியலைந்தது ! அவர் இருக்கின்றது பரமண்டலம் ; பிதாவின் ஒரே பேரான குமாரன் அவரே உலகத்தை இரட்சிக்க வந்தார்.

வேட:—பிதா என்றால் பொதுவாக வல்லவா யிருக்கின்றது. அவருடைய நாமம் என்ன ?

போத:—அவரே கர்த்தாதி கர்த்தன், தேவாதி தேவன், ஒப்புவமையற்றவர், திரிகாலமுந்தெளிந்தவர் நமக்காகத் தமது குமாரனை உலகத்துக்கு அனுப்பினவர்.

வேட:—போதுமய்யா போதும் தயவுசெய்து நிறுத்துங்கள், கேட்பதற்கு மாத்திரம் சொல்லுங்கள் குமாரனையும் தகப்பனையும் குறித்தே பேசுகின்றீர்களே தாயில்லையா ?

போத:—தாயார்தான் கன்னி மரியம்மாள்.

வேட:—பிதாவுக்கும் அந்த அம்மாவுக்கும் விவாகம் நடந்து வெவ்வளவு கால மிருக்கும். குழந்தைகளில் தாங்கள் சொல்கின்ற குமாரனைத் தவிர வேறுஆண் பெண் சந்ததிகளுண்டோ? அம்மாள் எங்கேயிருக்கிறார்கள். பிதாவுக்கும் அம்மாளுக்கும் இப்பொழுது நேசந்தானே ? குடும்ப சவரக்ஷணைக்கு வேலையாட்களுளதா ? அம்மாளே அதைப் பார்த்துக்கொள்ளுகிறார்களா ?

போத:—அப்படியல்ல ; அம்மாளை விவாகம் செய்யவில்லை, தச்சர் சாதியில் பிறந்த யோசேப் பென்னு மொருவருக்கு விவாக நிச்சயம் செய்யப்பட்டிருந்தது அந்தக் காலத்தில் கர்த்தரின் நிழலவள் மேற்பட்டு கற்பவதியானாள்.

வேட:—அப்படியா ? ஒரு கம்மியனுக்கு நியமித்திருந்தபெண் அகஸ்மார்த்தாய் கற்பம் தரித்துவிட்டாள். பெண்ணை நீக்கிவிடப் புருடனுக்கு இஷ்டமில்லை. அவன் செய்த தந்திரம், அதிலும்!கம்மியன் உயிர்சக்தி யில்லாத கல்லை மனிதரூபமா யடித்து நட்டு வைத்து உலகத்தையெல்லாம் மயங்கச் செய்பவன், தன் மோக ஸ்திரியைச் சேர்த்துக்கொள்ளச்செய்யுந் தந்திரத்தை, யாவர் கடப்பவர் ஆனாலும் உண்மை எழுதுகின்ற தேசமானதினால் இவ்வளவாவது விளங்கியது ஆரிய தேசமாயிருந்தால் யார்கண்டு பிடிக்கமுடியும், அதிருக்கட்டும் தாங்கள் சொல்கின்ற கிருஸ்து, மனிதன் தானே ?

போத:—மனிதனும் தேவனுமாயிருக்கின்றார்.

வேட:—ஒரே சரீரத்தில் மனிதனும் தேவனுமா யிருக்க முடியுமா ? வலது பக்கம் தேவனும் இடதுபக்கம் மனிதனுமா? இடது பக்கம் தேவனும் வலதுபக்கம் மனிதனுமா ?

போத:—அப்படியல்ல மனுஷீகத்தன்மையும் தெய்வீகத்தன்மையும் உள்ளவர்.

வேட:—தெய்வீகத் தன்மை உள்ளவரென்பதற்கு என்ன சாட்சி.

போத:—ஊமைகளைப் பேசச் செய்தார், சப்பாணிகளை க்க வைத்தார், மரித்தோரை எழுப்பினார்.

வேட:—தெய்வ சக்தி இப்படித்தானிருக்குமோ? பிரிட்டி வைத்திய சாலைகளில் நடக்கின்ற வேலைகள்தானே இது? பாவிகளை ரக்ஷிப்பதற்குத் தானே பாடுபடுவதென்றால், தனக்கு மேலே ஒன்றிருக்கின்ற தென்றதற்கு அதுவே போதுமான சாட்சியல்லவா? தன்னை ரக்ஷித்துக்கொள்ள முடியாமல் என்தேவனே! என்தேவனே ஏன் என்னைக்கைவிட்டீர் என்று அழுது பரதவித்து இறந்ததாய் மாற்கு 15, 34-ல் சொல்லியிருக்கின்றதே இஃதிருக்கட்டும் தாங்கள், பைபில் வாசித்திருக்கின்றீர்களா?

போத:—ஆம் வாசித்திருக்கின்றேன். இப்பொழுதும் வாசிக்கின்றேன் இன்னமும் வாசிப்பேன்.

வேட:—வாசித்திருந்தால் கிருஸ்துவின் தகப்பனுக்காவது தெய்வீகத் தன்மை யிருக்கிறதாவென்று கவனித்தீர்களா?

போத:—ஐயோ! பாவம் பன்றிகளின் முன்னே முத்துகளைப் போடாதீர்கள் என்ற வாக்கியத்தை மறந்து விட்டேனே!

வேட:—ஐயா வருத்தப்படாதேயுங்கள் உங்கள் வேதத்தை நானும் வாசித்திருக்கின்றேன், அதிலுள்ள வாக்கியங்களை கீழே தருகின்றேன். பொதுவாக நின்று நோக்கிற் தெய்வத்தன்மை உளதிலதென வெளியாகும்.

## அவை வருமாறு.

பின்பு தேவன் நமது சாயலாகவும், நமது ரூபத்தின்படியேயும், மனுஷனை யுண்டாக்குவோமாக. (ஆதி-1-26)

பின்பு தேவனாகிய கர்த்தர் இதோ மனுஷன் நன்மைதீமையறியத்தக்கவனாய் நம்மில் ஒருவரைப்போல் ஆனான். (ஆதி-3-22)

தேவன் மனுஷனைச் சிருஷ்டித்த நாளிலே அவனை தேவசாயலாக உண்டாக்கினார். (ஆதி-5-1)

தேவகுமாரர் மனுஷ குமாரத்திகளை அதிக சவுந்தரியமுள்ள வர்களென்று கண்டு அவர்களுக்குள்ளே தங்களுக்குப்பெண்களைத் தெரிந்துகொண்டார்கள். (ஆதி. 6-20)

தாம் பூமியிலே மனுஷனை உண்டாக்கினதற்காகக் கர்த்தர் மனஸ்தாபப்பட்டார். அது அவர் இருதயத்துக்கு விசனமாயிருந் தது. (ஆதி. 6-6)

பின்பு கர்த்தர் சோதோம் குமோராவின் கூக்குரல் பெரிதா யிருப்பதினாலும், அவர்களின் பாபம் மிகவும் கொடியதா யிருப்ப தினாலும், நான் இரங்கிப்போய்என்னிடத்தில் வந்துஎட்டினஅதின் கூக்குரலின்படியே அவர்கள்செய்திருக்கின்றார்களா இல்லையோவெ ன்றுபார்த்து அறிவேன் என்றார். (ஆதி. 18-20-11)

போத:— எங்கள் கிருஸ்து 'மார்க்கம் இங்கு வரவில்லை என் றால், உங்களுக்கு இவ்வுடை, நடை, கல்வி எங்கிருந்துகிடைக்கும்.

வேட:—ஐயா!! அதுவிஷயத்தில் எனக்கு நிரம்பச்சந்தோஷம் எங்கள் தேசமெல்லாம் கிரிஸ்து மார்க்கமானாலும், சம்மதிக்கின் றேன். என் கருத்தும் எப்படியாவது சனசமூகங்கள் கல்வியில் தேர்ச்சியடைந்தால் பின்னால் அறிவு வந்து உண்மையைத் தானே கைப்பற்றிக்கொள்ளு மென்றதுதான். தாங்கள் வந்து வெகுநேர மாய்விட்டது: நானும் நெடுந்தூரப் பிரயாணி, சலாம், போய் வாருங்கள்.

இனி எங்கு செல்வோம். மலைப் பிரதேசங்களில்போய் பார்த் தால் ஏதாகிலும் வெளியாகுமா ? அப்படியே செல்வோம். ஆன தாகுக வனமடர்ந்த காடாயிருக்கின்றதே, மிருககோஷ்டம் செவி யடைக்கின்றதே! அசலமன்றோ வந்துவிட்டது. ஏறியிறங்குவோம் அடிவாரங்கண்டோம். அருணோதயமாயின, கால்கள் நோகின் றதே, முட்கிழித்து உடல் முழுதும் காயம், சுனைநீர்கள் சேராமல் சிரோபாரமா யிருக்கின்றது; சற்று இளைப்பாறுவோம். அதோ ஒரு பாலியன் பரியூர்ந்தெய்துகின்றான். நம்மை நோக்கியே செல லாநின்றான், இப்படியே சயனசாமானை சுருட்டி வைக்கின்றேன்.

அசுவாரூடன் கீழிறங்கி நீயொரு பெண்ணல்லவா? எங்குவந்தாய் எந்த வூர்? யார் துணையுற்றேகினை இங்குறும் நிமித்தம் யாது? சீக்கிரம் சொல்.

வேட:—ஏன் அவைகளெல்லாம் விசாரிக்கின்றாய். நீயார்? உனக்குஎவ்வளவு காலமாய் பயித்தியம் எங்கெங்கு அவிழ்தமுண்டாய் அதோ நித்திரை செய்யு மென்மனைவியைக் கேட்கும் கேள்விகளை என்பாலுபயோகிக்கின்றனை; உசார். நானொரு அரசகுமாரன் மனைவி தாகத்தால் சோபித்திருக்கின்றாள். நான்போய்த் தீர்த்தம்கொண்டு வரும் வரை காத்துக்கொண்டிரு இடையூறுறின்சிரச் சேதமடைவாய் என்றோதிய இவ்வுரை முடியுமுன் மாவேறி மனோவேகமும் பின் இடையுமாறு செலுத்தினள் கொக்கு கீழ்திசை நோக்கிகண்மறைந்துசென்றன. சிலகால மவ்வாறுப்பக்கழிந்தன பல்லாண்டோடின நம்பதி சேய் செய்தி எங்குமுலாவியும், யாதும்புலப்படவில்லை. மீண்டொருநாள் வேறுதேயம் போகக் கருதிக்கிள்ளையூர்ந்து செல்லாநிற்க நெறிமாறி யடர்ந்த வனம்போயினை, பசியின் களை மிகுதி, தாக மேலாடிச் சகிக்க முடியா தயர்ந்து கோடையின் புரமயிர்ப்பற்றி தலைசாய்ந்து செல்லுளி அவ்வனத் துளுவையின் குரல்கேட்டஞ்சி யிவுளியடங்காது நெடுந்தூரமோடி தருவடர்ந்த சோலையிற்றள்ளி விட்டு கிரியேறி யோடாநின்ற பரியூர்ந்து சென்றாள். ஒன்றுமறியாது ஸ்மரணையற்று உயிர் நீப்பென்றய்யுறுமாறு சோபித்திருக்கின்றாள்.

## 3-வது அத்தியாயம்.

பாழும்பேயூரின் ஆவணச் சார்பே பூரணச் சந்திர முகாரவிந்த பாலியன் றலையில் குசைமுடி புனைந்து விலையிடு குறிகாட்டிப் பலகண்டகர் திரண்டு செல்லாநின்றனர். பலர்விரும்பி விலையுசாவினர், பொருத்தமின்றி ஏகினர். மற்றோர் வாடையில் வியாபார தந்திரி என்றொரு போர்ட்டுத் தொங்காநின்றது, அவ்வகத்

துட் சிலர் குழுமியுற்றனர். அதனேருறுங்கால் உள்ளிருந்தொரு வன் றலைநீட்டிச் சேயின் அழகை நோக்கி, இஃதுபருவமுறுங்கால் நம்மெல்லாரையும் ரக்ஷிக்குமென்றவாவுளத்தனுய். விலையாதென வினவா நின்ருன். கொடுப்போன் வராகன் இரண்டாயிரமென் ருன். கொள்வோன் ஆயிரமென்ருன். சில தர்க்கமிட்டொவ்வி முறிச்சிட்டெழுதி பாலியனை நோக்கி நின்னுமம் யாதென்றனர். சற்று நிதானித்து ஒற்றுமைநாளுள்ளான், என்றனன். விக்கிதமுடிந் தது. சேயுமுள்ளே சென்றது. கொண்டோர் தலைவன் திரவியத் தைக் கொட்டி நும்மிலாரிடங் கொடுப்பதென வினவினன். விலை யிட்டார் என்னிடம் உன்னிடமென்றெல்லாருமிறைந்தனர். இப் பொருள் எல்லாரிடமும் கொடுக்க இசையோம். நீங்கள் ஒத்து வந்து யாராவதொருவரிடம் கொடுக்கச் சொன்னுல் கொடுக்கின் ருேம். வீணுய் இரைந்தால் சார்சு செய்யப்படுவீர்கள். இங்கு நிற்கவுங்கூடாது. வெளியே போய் சமாதானஞ்செய்துகொண்டு வாருங்கள் போங்கள். ஒற்றுமையில்லாத தரி தலைபர்களை என்று பிடரியில் நெட்டித் தள்ளி விட்டனர். பின்னர் பலகாலங் கழிந் தன.

தனியறையில் ஓர் காளை யுட்கார்ந்து யோசிக்கின்ருன். என் னகஷ்டம், என்ன துன்பம், யார் யார் சொற்கேட்பது, எத் தனை வேலைசெய்வது, அடிமையுற்ருலும், இப்பாடுபடுவாருண்டா? மாவரைத்தல், துணிநெய்தல், வர்த்தியுண்டாக்கல், அபமடித்தல், சோப்புச்செய்யல், கண்ணுடி வார்த்தல், ஸ்டீல், ஊசி, பென்சில், கத்தி ஆயுதங்கள், எந்திரம், கப்பல், வீடு காத்தல், ஊர் காத்தல், நாடு காத்தல், தேசங் காத்தல், இன்னும் பலவிதமான வேலைகளை யெத்தும் என்னைக் கொண்டே செய்விக்கின்ருர்கள். அதிலும் இப்போதவர்களுக்குள்ளும், ஒத்துமையில்லை ஒருவனென்று சொன்னுல் மற்றவனென்று சொல்கின்ருன். நாம் யார் சொல்லைக் கேட்கின்றது.

ஆ தெய்வமே! ஏன் என்னை இவ்வளவு கஷ்டப்படவிட்டாய்? திருடர் பிடித்து வரும்போது என் பிதா நெடுந் தூரந்தொடர்ந்து வந்தனரே! பல நன்மொழியோதினரே! பாவிகள் ஒவ்வாதுபோயி னரே! மயங்கி மயங்கி வந்தனரே! பின்னெவ்வாருயினரோ! என்

மாதா வனைப் பிரிந்தரைக் கணமும் உயிர் தரியாளே! இது வரை, அவர்கள் கதி எவ்வாருயினவோ! என்ன அருமை! என்ன பெருமை! என்ன செல்வம்! எவ்வாறு வளர்த்தனர்! இன்னுமொருதரம், என் மாதா பிதாவைக்கண்ணுறுவேனு? மடிமீதேறி மழலைமொழி கூறுவேனு? கடைநாள் நம்பிள்ளை உதவுமென்று நினைத்திருப்பார்களே! என் கதி இவ்வாருயிற்றே! என்னை ஏன் பெற்ருர்கள் மலடா யிருந்தாலும் விசார மற்றிருப்பரே! ஐயோ! இவர்கள் கையைவிட்டு எவ்வாறு தப்புவோம். விலை கொண்டோரறியாது போய்விட்டால், பாபமல்லவா தொடரும்? ஆனலும், நம் பெயர்ச் சார்பாலவ்வா றமையாதென வெண்ணுகின்றேன். எவ்வழியாய்த் தப்புவது? ஒன்றும் தென் படவில்லையே! தெய்வமே! என்கதி அதோகதிதானே! என்றேங்கி அயர் வுறுஞ்சமயம் ஒருத்தரவுக் கடிதம் ஒருவன் கொணர்ந்தீந்தான்.

## அவை வருமாறு.

ஒற்றுமை நாளுள்ளானுக்குச் செய்யும் கண்டிப்பான உத்தரவு:—வேடிக்கைச் சாமான்கள் கீழ் நாட்டில் அதிகம் செலவாகின்றதாம்; அதன்பொருட்டு நம்முடைய கம்பெனியி லுள்ளதை ஏற்றிக் கொண்டு சிற்சில ஏவலாளருடன் புறப்பட்டுச் சீக்கிரம் போய் விற்று விற்றுப் பணத்தை அனுப்பிக்கொண்டே யிருப்பதுடன் தேவையான சாமான்களுக்கு எழுதி தருவித்துக் கொள்வாயாக.

**வியாபார தந்திர கம்பெனி,**

**ஏசன்ஸ.**

## 4-வது அத்தியாயம்,

தனியிடத்தொருவ ரசைவாடுகின்றனர், மற்ருேரிருவர் எதிர் நோக்கிச் செல்லா நின்றனர். சென்ருர் நின்ருேரை நோக்கி, ஐயா!

நும்மூர் பெயர் யாதென வினவினர். நன்னாடு தென்னாடு, நந்தே யமறிவன்றேயம்; பெயர் வித்தியாதரன்; நும்பெயர்வினவ அவா வுறுகின்றேன். யானு மன்னுடன்றான். பெயர் விவேகானந்தன். தங்கள் ஜாதியைக் கேட்க விரும்புகின்றேன்.

வித்:—பெயருக்கேற்ற விவேகமிலதே? என்னைக்கண்ணுற்றும், ஜாதியறிந்திலீர்போலும்; என்ஜாதி மானிடச்சாதி.

விவே:—ஈதாரறியார்? யானென்ன பயித்தியக்காரனு? கேள்வியின் அர்த்தம் புலப்படவில்லைபோலும், தெளிந்தோதுக; என்ன வர்ணம்?

வித்—இன்னும் ஓதித்தான் தெளிவீர்போலும்; குறிப்பறிந்தொழுகலேமுறை; நும்பாலஃதில்லை எம்வர்ணமோதப்புகின்; கருப்பு வர்ணம்.

விவே:—யானோதாது நும்மையே வினவினேனெனக் கவலை போலும்; என்ஜாதி பிள்ளைமார்; இனியாகிலும், நும்ஜாதியோது மாறு வேண்டுகின்றேன்.

வித்:—ஜாதிப்பயித்தியம் பிடித்தவர்போலும், ஈதகலுமாறு மருந்தூட்டுகின்றேன். எங்கள் ஜாதி தகப்பன்மார்.

விவே:—ஈதென்ன ஒருநாளுங்கேளாப்பெயராயிருக்கின்றன பரியாசம் செய்கின்றீரா? உலகத்தில் தகப்பன்மா ரென்றொரு ஜாதியுமிருக்குமா? இதை நிரூபிக்க உம்மாலியலுமா? உம்மை யங்கிங் ககலவொட்டேன்; தடுக்கின்றேன்.

வித்:—பிள்ளைமாரென்றொரு ஜாதியுமிருக்குமா? பிள்ளையிருந்தால் தகப்பன் இருக்கவேண்டியது அவசியமல்லவா? இவ்வற்ப யோசனையும் நும புத்திக்கெட்டாதது, ஜாதிப்பயித்தியமென்னும் பித்தேறியதனாலல்லவா? அதற்குத்தக்க வித்தியாமிர்தசஞ்சீவிலேகியமிருக்கின்றன. பின்னுற் றருகின்றேன்; உட்கொண்டீரேல், உடனே நீங்கிவிடும்.

விவே:—ஈதென்ன ஒருநாளுமறியாச் செய்தியா யோதுகின்ருர். அப்படியானால், கடவுளால்ஜாதி, ஜாதியாய்ப் படைக்கப்படவில்லையோ ?

வித்:—அதிலும் சந்தேகமா ? படைத்துத்தா னிருக்கின்ருர் மாட்டுச் சாதி, குதிரைச் சாதி, குரங்குச் சாதி, பாம்புச் சாதி, பல்லிச் சாதி, மனிதச் சாதி என்றின்னும் அளவிடப்படாத ஜாதி பேதங்களுடன்ருன் உண்டாக்கி யிருக்கின்ருர்.

விவே:—அதையெல்லாம் கேட்கவில்லை. மனிதர்களைமாத்திரம் கேட்கின்றேன்.

வித்:—மனித ஜாதியில் வேறு வேறு ஜாதியாய்ப் பிரித்ததற்கு தகுந்த நியாயம் சொல்லுங்கள் ? எந்தச் சாதிக்காவது அவையவ பேதங்களுண்டா ? ஆண், பெண் மாறிக்கூடினால் கரு தரிக்கமாட்டாதா ? உயர்குலத்தா ருண்பதொருவாய், கீழ்குலத்தா ருண்பதொருவாயா ? யோனி பேதங்களுண்டா ? போகமின்றிக் கருதரிப்பதுண்டா ? வித்தை, அவித்தை, உண்டி, உடை, சுத்தமசுத்தம் பழக்கத்தைப் பொருத்ததா? ஜாதியைப் பொருத்ததா? தொழில் வித்தியாசத்தால் ஜாதியை நிரூபிக்கமுடியுமா ? ஜெனரல் டாக்டர் மூலமாயாவதுசரீரசோதனை செய்து ஜாதியைச்சொல்லலாமா? நிறங்கள் மாறுதல்தேசத்தையும் சரீரத்தையும் குறித்ததா? ஜாதியைக்குறித்ததா ? ஒருவருக்கொருவர் அடங்கி நடப்பதற்குப் பணமொன்றிருக் கையில், ஜாதியென்று ஒன்று வேண்டியதவசியமா ? நாகரீகதேசங்களில் ஜாதிப்பிரிவினை யிருக்கின்றதா ? நம்மறிவீனத்தாலிப்படிப் பிரிந்தோ மென்பதைத் தவிர, வேறெக்காரணமாவது சொல்ல வியலுமா ? நன்ருய் யோசித்துப்பாரும் ? உம்மண்டையில் நிற்கின்றவர் யாவர் ?

விவே:—ஐயா ! இனி உங்களிடத்து உண்மையே பேச விரும்புகின்றேன். இவர் ஆரிய மாந்திரவாதி; இவ்வூர்ப்பழய நத்தத்தில் பெரிய தாம்பூரப் பாத்திரத்தில் பல்லாயிரக் கணக்கான தங்க நாணயங்கள் புதைக்கப்பட் டிருக்கின்றதாயும், அதைத் தம்முடைய மந்திர சக்தியினால் எடுத்துத் தருவதாயும், அதன் பூசைச் செலவுக்கும், தன் பிரதி பிரயோஜனத்துக்குமாய் ரூபாய் நூறு

கேட்கின்றார். அதைப்பற்றியோசிப்பதற்காகவே இத்தனியிடத்துக்குவந்தோம்; இச்செலவின் துகையை யிருவரும்போட்டுஅகப்பட்டதை எடுத்துக்கொண்டு நம் ஜனனதேசம் போய்ச் சேர்வோம் என்ன சொல்கின்றீர்.

வித்:—பல்லாயிரக் கணக்கான தொகையை எடுத்து உம்முடைய கையில் கொடுத்துவிட்டு இவ்வற்ப துகையை விரும்பியமந்திரவாதிதான் பயித்தியக்காரனா? அல்லது மந்திரவாதி நம்மைபயித்தியக்காரனென்று நினைக்கின்றானா? என்ற சந்தேகத்தால் புன்னகையுடன் நிற்கின்றேன்.

விவே:—சரி சரி தெரிந்துகொண்டேன் வெட்கக் கேட்டை வெளியே சொல்லாதேயுங்கள். மாந்திரவாதிகளெல்லாம் ஏமாற்றுகின்றார்கள் என் றரிந்துகொண்டேன் சோதிடமாவது நிசமாயிருக்கலாமா வென்றய்யுறுகின்றேன்.

வித்:—சோதிடம் ஆரிய தந்திரமாகிய கோவிலென்னுங்கொப்பத்தில் பேதைமாந்தரென்னும் யானைகளை கவர்ந்திழுத்துத்தள்ளுதற்காய் மேலே தெளித்துவைத்த தீனியேதவிர வேறொன்றுமில்லை என்று சந்தேகமறத் தெளிந்துகொள்வீராக.

விவே:—அப்படியானால் சூரியனுக்கு முன்னே சுக்கிரனும் பின்னே செவ்வாயுமாய்ச் செல்லும்பொழுது நல்ல மழைபெய்யுமென்று சொல்லுகின்றார்கள். அது சரியாகின்றதே! அதற்கென்ன நியாயம்.

வித்:—சூரியன் சுக்கிரன் செவ்வாய் ஒவ்வொன்றேயொழிய அநேகமில்லையே, மலையாளம், கொளும்பு, இமயமலையின்பக்கங்களுக்கெல்லாம் வேறு வேறு சுக்கிரன் செவ்வாய் போயிருக்கமாட்டாதே? அவ்விடங்களிலெல்லாம் ஓயாத மழை பெய்வானேன். சிலவிடங்களில் எப்பொழுது மபூர்வமாகவே இருப்பானேன். ஆராச்சியின் குணமற்றதினால் சோதிடம் மெய்யாய் விளங்கியது மழையின் குணமோ அரைக்கணமாவது பூமியில் பெய்யாமல் இருக்கின்றதே யில்லை ஆங்காங்குள்ள நீர்வளம் சோலைவளங்களினால் மேகங்களை இழுத்துக்கொள்ளுகின்றன. அவ்வள மில்லாநாட்டில்

மழை வரட்சியே காட்டும். கிரகணமாவது கணிதசாஸ்திரத்தின் கணக்கு அறிந்தாரறிவார். பூச்சாயை சந்திரன்மேல் விழும்பொழுது சந்திர கிரகணமும் சந்திரன் சாயை சூரியன்மேல் விழும்பொழுது சூரிய கிரகணமும் உண்டாகின்றன. இதைப்பேதை ஜனங்களுக்கு இராகுகேதுக்கள் சூரிய சந்திரனை விழுங்கிக் கக்கிவிட்டதாகச் சொல்லி நட்சத்திரதோஷ நிவாரணம் செய்கின்றோமென ஏமாற்றிப் பரித்துப் பிழைக்கின்றனர்.

விவே:—ஐயா இனியொருபோதும் தங்களைப் பிரியவேமாட்டேன். எங்குசென்றாலும் கூடவே செல்வோம் நாமிருவருமொரு முறை தேசமெல்லாம் சுற்றிப்பார்த்து வர விரும்புகின்றேன். சமயம் வாய்த்தபொழுது தெரிவித்தால் தயாராயிருக்கிறன்றேன் பின்னையும் சிலநாட் கழிந்தன.

பிரயாணம் ரயில்வே வெகு ஜனக்கூட்டம் சாஸ்திர சம்மந்தமான தர்க்கம் ஒன்றுக்கொன்று தகவலில்லாப் போராட்டம் பிரயாணிகளிலொருவன் எழுந்து நின்று மகா ஜனங்களே! ஈதென்ன ஏக தடபுடல் எல்லோரும் பேசுகின்றீர்களே? யார் வார்த்தையை யார் கேட்கின்றது நம்தேசாசாரமிப்படிக் கெட்டுப்போய்விட்டது. யாராவது ஒருவர் பேசினால் அதை முற்றிலும் கவனித்து ஆராச்சி செய்து இதன்பிழை இன்னதென்றறிந்து பதில் சொல்கின்றதேயில்லை. ஒருவர் பேசும்பொழுது பின்னாற் சில சங்கதிகளைச்சொல்ல எண்ணி அதற்காதரவாய் முன்னாற் சிலதைச் சொல்லவேண்டியதாய் வரும். அங்ஙனமவ்வார்த்தை பயனற்றதாயுமுள அதைக் கவனியாது உடனே தர்க்கம் அதனாற் சண்டை ஒற்றுமையென்றது செத்தேபோய்விட்டது. உபயோகமானவஸ்து இன்னதென்பது கனவிலுங்கூட ஞாபகமில்லை ஆராச்சியின் குணம் அடியோடு நாசம். யார் எதைச்சொன்னாலும் உடனே நம்பிக்கை மறுநிமிஷத்திலேயே முற்றிலும் கைவிட்டு விடுகின்றோம். ஆரிய தந்திரமென்னும் பாதாளத்தி லமிழ்ந்து விட்டோம்.

கண்டதெல்லாம் தெய்வம் சொன்னதெல்லாம் மந்திரம் கட்டுவதெல்லாம் கோவில் சோம்பேறியாய்த் திரிவதே ஞானம். ஆத்மா ஆரியற்குத் தானுள்ளதாம், அவர்கள் சொன்னதே வேதம். தெய்வம்பேதமோ கோடி. சாதிபேதமோ அதற்கிரட்டி ஐயோ பாவம்

ஆரிய தந்திரிகளே இம்மட்டிலாவது தேச விர்த்தியைத் தேடப் படாதா? உம்மோசத்தை வெளியாக்கலாகாதா? தேசம் ஜீணித்து சாம்பலாய்ப் போனபின் யாரை வஞ்சிப்பீர்கள். எங்கிருந்து பிழைப்பீர்கள் தீபைக்கக்கின மூங்கில்போல் நீங்களுஞ்சேர்ந்துதானே அழியவேண்டும் என்ன அறிவு என்ன சக்தி எப்படிப்பிழைப்போம் என்னுட்கரை யேறுவோம் இது யார் செய்த மோசம். ஆ தெய்வமே எங்கள் தேசத்தை வெறுத்தாபோ பன்னாட்டுக்கும் கப்பல் கப்பலாய்ப் போகின்றனையே எங்களை முற்றிலும் கைவிட்டு விடுவாயோ நினைக்க நினைக்க நெருப்பாயெரிகின்றதே அம்மாஉலகை மாதாவே உன் பிள்ளைகளை ஏனிப்படி வாதிக்கின்றாய் துஷ்டப்பிள்ளைகளை சிட்க்ஷிக்க வேண்டிய தவசியமானாலும், பட்டினிபோட்டுக் கொல்லாதே ஓரே முகூர்த்தத்தில் விழுங்கிவிடு இன்னும்நல்லபிள்ளைகளைப் பெற்றுக்கொள்வாய் எல்லாம் மோசம் எல்லாம் வெசாம் எத்தனை தெய்வம் எத்தனை லிங்கம் எங்கெங்கிருக்கின்றது. அக்கினிலிங்கமாம் அதிலிருக்குமதிசயம் விக்கிரகத்தில் சந்தனம் பூசினால் காய்ந்துபோகின்றதாம். இதிருக்குமிடம் இயற்கையாகவே எரிமலை ஓர்வகையான காந்தக்கல்லினாலடித்தது விக்கிரகம்இதில் பூசிய சந்தனம் காய்ந்துவிட்டதாம். கண்டவர்களிதயங் களித்துவிட்டது நமக்கென்னத்துக்குப் பணம் போட்டு விடுங்கள் சாமிக்கே யென்று கொட்டிவிட்டு வருகின்றோம் வாய்வுலிங்கமாம் அதிலுண்டாகும் அதிசயம் லிங்கத்தின் சமீபத்தில் எரிகின்ற விளக்கு வாய்வுலிங்கத்தின் விசேடத்தாலாடுகின்றதாம். என்ன தீக்ஷண்யம் லிங்கத்தி னிருபக்கத்திலும் பொடித் துவாரங்களிட்டிருக்கின்றன. அடிப்பக்கத்தில் மேலேயிருந்து வாய்வு செல்லும்படியான சாயிண்டுத் துவாரமிருக்கின்றன. அதின் வழியாய்க் காற்றுப் பிரவேசித்து உச்சியிலுள்ள சிறுதுவாரத்தின் வழியாயோடுகின்றது எந்த அறிவாளிகளாவது லிங்கத்தின் மேற்புறத்தைச் செவ்வென அடைத்துக்கொண்டு விளக்காடுகின்றதாவென்று பார்த்தீர்களா பின்னை எப்படி விசுவாசித்தீர்கள் ஆரியர் கேட்டதைக் கொடுப்பதைத்தானா விசுவாசித்தீர்கள். அப்பு லிங்கமாம் அதிலுள்ள அதிசயங்கள் சலமூறிக்கொண்டே யிருக்கின்றதாம். மூலஸ்தானத்துக்கு மேல்புறம் தெப்பமொன்றிருக்கின்றது. இரண்டிடங்களுக்கும் சுமார் பத்தடி ஏற்றத் தாட்சியுள்ளது தெப்பத்திலிருந்து

லிங்கத்துக்குத்தண்ணீரூறும்படி முன்னமேசெய்துவைத்ததுஆரிய தந்திரம் இப்பொழுதுள்ள ஸ்தானிகர்முதலாய் மறந்துபோய்விட்டார்கள். சமீபத்தில் இடித்துக் கட்டிய காலத்தில்மேல் பக்கத்துச் சுவரை வாணம்தோண்டி காங்குரெட்டிட்டு பலமாய்க் கட்டியதால்நீரூற்றுநின்றுவிட்டது. என்னலிங்கம் எங்கேபோயிருக்கின்றூர். உடனிருந்துசெலவிட்டுக்கட்டிய மகாபுண்ணியவான்களேதெரியாமல் நின்று விழிக்கும்பொழுதுமற்றோரை நொந்துகொள்வதில் என்னபிரயோசனம் இன்னும் பரங்குன்றமென்றது முன்னேகாளிகோவிலா யிருந்தது அந்த அடையாளமு மிருக்கின்றது. சிலகாலம் விஷ்ணுகோவிலா யிருந்த அடையாளமு மிருக்கின்றது. தற்காலம் சுப்பிரமணியர் முளைத்திருக்கிறூர். இன்னும் எவனைப் புதைத்துக்கொண்டு திண்டாடுகின்றோமோ தெரியவில்லை. இந்தப் பயித்தியங்களெல்லாம் விட்டு எந்தக்காலம் முன்னுக்கு வருவோமோ அறிவாளிகளே கவனியுங்கள்.

ஒரு பிரபல்ஸ்தன் இறந்து புதைத்த இடத்தில் ஆரியர்கள்கூடிப் பெரிய கட்டிடங்களைக் கட்டும்படி ஏமாளியரசர்களை ஏய்த்துக் கம்மியர்களால் விக்கிரகங்களை வார்த்தும் அடிப்பித்தும் வைத்துக் கொண்டு தாங்களே பூசாரிகளா யேற்பட்டும் வரும் காணிக்கைகளையெல்லாம் விழுங்கிவிட்டு நாரிக்கிரகப் பிரவேசராய் வேண்டிய சுகத்துடன் இருக்கின்றூர்கள். நாமோ ஏமாளிகளாய் அரை வயிறும் கால்வயிறுமாய்ச் சாப்பிட்டு மீந்ததை அவர்கள் கையில் கொடுத்துவிட்டுத் தூங்குகின்றோம். எவரோனும் கொஞ்சம் விபரம் தெரிந்தோர் ஐயா இதென்னகல்லை நட்டுவைத்துக்கொண்டு சுவாமி என்கிறீர்களே! கும்பிடப் பணமும் கேட்கின்றீர்களே! சுவாமி என்றூல்எனக்கல்லவாகொடுக்கும். என்னிடத்தில் வாங்கிப்பிழைப்பது என்னை எப்படி ரக்ஷிக்கும் என்று கேட்டால் அவனைப் பயித்தியகாரனுக்கிப் பார்வைக்குத் தான் கல்ப் போலத் தெரியும். அதிலேறியிருக்கின்ற உருவென்ன சாமான்யமானதா பஞ்சாட்சரம், பீஜாட்சரம், அஷ்டாட்சர மின்னு மெத்தனையோ மந்திரமேறி ஜோதி சொரூபமாய்ப் பிரகாசிக்கின்றதாவது தெரியவில்லையா. மந்

திர சக்தியென்ன சாமானியமானதா அப்படியில்லையானால் இத்தனை யபிஷேகமும் இத்தனை நிவேத்தியங்களையும் சாதாரணமான கல் தாங்குமாவென்று சாங்கோபசாங்கமாய்ப் பேசி வாயெடுக்கவொட்டாமல் செய்துவிடுகின்றார்கள். அதிலு மென்போல் வாயாடி உங்களுருவும் மந்திரமும் ஏறியதற்கு இதுதானா சாட்சி, இதை யாரொப்புக் கொள்ளுவார். முன்னேறிய உருவுடன் இன்னு மேற்றிக்கொண்டே நீங்களும் பக்கத்தே யிருங்கள். நானொரு கட்டப்பாரையினா லக்கல்லின் றலையி லோங்கி யடிக்கின்றேன். அதனைத்தடுக்க வக்கல்லுக்குச் சக்தி ஏற்பட்டா லல்லவா சரி? ஒருவேளை இது கலிகாலம் அப்படியெல்லாம் வரமாட்டாதென்பீர்கள் போகட்டு மக்கல்லாவது உடைந்துபோகாமலிருக்குமாவென்று விடாது பிடித்தால் ரிஷிமூலம் நதிமூலங்களை விசாரிக்கப்படாதென்று பழைய கந்தப் புராணங் கூறுகின்றதென்கிறார்கள். இது நிற்கப் புதைக்கப்பட்டவன் மீனாட்சி மகனாகிய உக்ரவீரபாண்டியன் என்ற சுப்பிரமணியன்றானே தனக்கே சந்ததி யில்லாமல் இரண்டு பத்தினிகளைக் கட்டியும் பின்னும் காணாமல் பழைய தந்திரிகள் நட்டுவைத்த காளிகோவி லண்டையே காத்திருந்தும் பாரிக ளிம்சை பொறுக்கமாட்டாமல் சன்யாசம் பூண்டும் படாத பாடெல்லாம்பட்டு இறந்து போனவன்தானே இஃதாரறியார். உயிரோடிருக்கும்பொழுது தன்னை ரட்சித்துக் கொள்ளமாட்டாமல் இத்தனை பாடுபட்டவன். செத்துப் பல்லாண்டகன்றபின் ஆரிய தந்திரிகளாலடித்து வைக்கப்பட்ட கல்லில் நுழைந்துகொண்டு நம்மை ரட்சிப்பானுக்கும் என்ன அறிவு. நாமும் மனுஷ ஜென்மந்தானா நம்மைப்போல் மனிதன்தானே ஆரியன் இப்படியெல்லாம் ஏமாற்றி சுகஜீவியாய் வசிக்கின்றான் அல்லவா என்றால் அவர்களா லென்ன இருக்கின்றது. பாடல் பெற்ற ஸ்தலமல்லவா என்கின்றீர்கள் பாடல்பெற்றதுதானேடோப் யென்றதற்குப் போதுமான சாட்சி உண்மையுள்ளவனை உண்மையுள்ளவன் என்று சாட்சிகளும் ரிக்கார்டும் செய்து வைக்க வேண்டிய தவசியமா? ஐயோ பேதைச் சனங்களே! மூளையைத் தின்றுவிட்டீர்களா ஒவ்வொன்றையும் கவனித்துப்பாருங்களேன். இஃதிருக்கப் பழனியில் மச்சக்காவடி, சர்க்கரைக் காவடிக் கதையைக் கேட்டதில்லையா? காவடி யெடுத்துச் செல்வோன் கொண்டு போயங்கொரு மண்டபமிருக்கின்றது, அதிலிறக்கி வைத்துவிட

வேண்டியது. சுவாமி யுத்தரவானபின் வாவென் றனுப்பிவிட்டுத் திரையைப் போட்டு விடுகின்றார்கள். காவேந்தி வெளியே காத்திருக்கின்றான்.

ஆரிய தந்திரிகள் திரையுட் சென்று காவடியை அவிழ்த்து மணலுக்கு சர்க்கரையும் கரிமீனுக்கு உயிர்மீனும் வைத்து மறுபடியும் கட்டிவிட்டு உத்தரவாய்விட்ட தோடியா? வென்றோலமிட்டுப் பேமா யாண்டியின் றோளில் தூக்கிவைத் தோட்டுகின்றார்கள் நடந்தவேலை யென்னவென்று கவனிப்பாரைக் காணோம் சர்க்கரை இருந்தது மீன் றுள்ளினது கொண்டு வந்த பணத்தைக் கொட்டடா கொட்டென்று கொடுத்துவிட்டு வந்தால் எப்படிப் பிழைப்போம் என்னுள் முன்னுக்கு வருவோம். இன்னும் இராமேசுரமென்னும் பாழாழியின் சரிதம் தெரியுமா ? மந்திரமில்லை, தந்திரமில்லை, சமுத்திரக் கரையின் பக்கமுள்ள தண்ணீர்க் கிடங்குகளுக்கு இராம தீர்த்தம், லக்ஷ்மண தீர்த்தம், அனுமார் தீர்த்தம் என்று கணக்கி லடங்காப் பெயரிட்டு உப்புத்தண்ணீரில் மூழ்கடா மூழ்கு உங்க ளப்பனுக்குள்ளதைக் கொட்டடா கொட்டு உள்ளது உரியதைக் கொடுத்துவிட்டு திரும்பிப் பாராமல் ஓடடா ஓடு என்று வழிப்பறி செய்த சாடையாய் ஜனங்களை ஏமாற்றிக் கூட்டி வந்தவனுக்குப் யாதி தங்களுக்குப் பாதியாய்ப் பங்கிட்டுப் பிழைக்கின்றார்கள். எதைச் சொல்வது, எவரை நோவது ஐயோ ! பாவிகாள் உயிரோடுதா னிருக்கின்றீர்களா ? நடைபிணமா யலைகின்றீர்களா ? எனக்கொன்றுந் தெரியவில்லையே ? இன்னும் ஆகாய லிங்கமென்றொன் றிருக்கின்றது. அங்கு செய்வதோ அரைப் பாவாடை, கால் பாவாடை, முக்கால் பாவாடை, முழுப் பாவாடை என்றேய்த்து ஆயிரக் கணக்காய் அபகரிக்கின்றார்கள் பொருள் கொடுத்தோரடையும் பலனோ காவித்திரை யொன்று கட்டியிருக்கின்றது. திறந்து பார்த்தால் ஆங்காங்கு நட்டுஇருக்கும் கல்லையும் கூட அங்கு காணோம், தனி யாகாயந்தான் இருக்கின்றது. இதைப் பார்க்கவா ஜீவாதாரமா இருந்த இத்தனை பணத்தையும் செலவிடவேண்டும். ஐயோ ! ஏழைச் சனங்களே? ஏக வெளியில் நின்றுகொண்டு யாதொரு செலவில்லாமல் அண்ணாந்து பாருங்களேன்; ஆகாயம் முழுவதும் தெரியுமே; என்ன மதி ! என்னடாகதி ! இது யார் தலைவிதி ! இன்னும் கழுக்குன்ற

மென்றான்றிருக்கின்றதே அதையும் கவனியுங்கள் ஆங்கிரண்டு கழுகுகளுக் கிரைகொடுத்துப் பயிற்று வைத்திருக்கின்றார்கள். அதுவும் வேளைக் கிரமப்படி வந்து தின்றுவிட்டுப் போகின்றது. ஒவ்வொரு வேளைகளில் வராமலும் போகின்றது. இதிலென்ன அதிசயமென்றுபணத்தைக்கொட்டுகின்றீர்கள். கழுகும்ஒருவகை யான் கோழியின் இனந்தானே கோழி வளர்க்கும் வீட்டில் இரை வைக்கும் பெண்களைக்கண்டவுடன் ஓடிவருவதும், காலைக்காலைச் சுற்றுவதும், வைத்தவுடன் தின்பதையும் பார்த்ததில்லையா?

இன்னு மெத்தனை மோசம் எத்தனை தந்திரம் எதற்குத் தப்புவது கோடெல்லா மவர்கள் நாடெல்லாம் அவர் வைத்த கண்ணி. அதிகார ஸ்தான மெல்லா மவர்கள் பார்த்த இடமெல்லாம் படுகுழி. ஐயோ ஏழை ஜனங்கள் எப்படிக் கரையேறும். திதியாம், சிரார்த்தமாம், திவசமாம், நம்முடைய பிதாக்களிறந்து மோட்சலோகத்திற் றூங்குகின்றார்களாம். பசி பொறுக்கமுடியாமல் இவர்களிடத்திற் சொல்லி யனுப்பினார்களாம். அதற்காக நம் பிதுர்கள் இறந்த திதியன்று. ஆரியற்கு அரிசி, நெய், பருப்பு, உளுந்து மற்றும் காய்கறி சாமான்களும் சுமக்கு மட்டும் கொடுத்தால் இறந்தோர் பசிதீர்ந்து திருப்தியாவார்களாம். என்னமதியீனம் யார் சாப்பிடுகின்றது, யார் பசி யடங்குகின்றது நமக்கென்ன உணர்ச்சியில்லையா ? யாராவது சோதித்துப் பார்த்தீர்களா ? ஐயரை ஒரு அரையில் அடைத்து வைத்துக்கொண்டு மேற்படியார் மகனையே திதிக்குத் தலைவனுக்கி மற்றொரு பிராமணனுக்கு வேண்டிய சாப்பாடு போடும்படி செய்து சில வாரங்கள் சென்று அடைபட்டவரைத் திறந்துவிட்டுத் திருப்தியா யிருக்கிறதாவென்று கேட்டாலல்லவா சிரார்த்த மகிமை வெளியாகும். பின்னை எப்படித் தேசத்தில் ஆராச்சியின் குணம் பிறந்து உண்மை வெளியாகும். அறிவாளிகளே! வேதத்தை மற்றோர் பார்க்கப்படாதென்று வைத்த சட்டம் உங்கள் புத்திக்குச் சரியா யிருக்கின்றதா ஆனாலும் இவைகளை யெல்லாம் முற்றிலும் களைந்துவிட வேண்டுமென்றதென் கருத்தன்று. வீண் மயக்கங் கொள்ளாமல் தேசம் நாகரீகமடைந்து முன்னுக்கு வரும் வழியைத்தேடவேண்டுமென்றதே என்னோக்கம். இப்பொழுது நான் சொல்லியவைகளைக் கவனித்துக்கொண்டு வந்த ஆரியர்களெல்லாம் என்னெனன்னமோ நயன பாஷையில் பேசிக்கொண்டு வருகின்றார்கள். என்ன செய்தாலும் செய்யட்டும் உண்மையைத் தான் பேசுவேன். இதோ பரங்குன்றம் ஸ்டேஷன் வந்துவிட்டது அனேகமாய் எல்

லாரும் இறங்கிவிட்டோம். ஊருக்குட் செல்கின்றேன் சின்னே ரம் தாழ்ந்தது. ஆரிய தந்திரம் பலமாய் நடந்தது. பழைய வேலைகள் செய்ய ஆரம்பித்துவிட்டார்கள். சற்று நேரத்தில்ஒரு மனிதன் கைகளிரண்டும் கட்டப்பட்டுச் செல்கின்றான். வாடிய முகத்துட னொருவன் தொடர்ந்து செல்கின்றான். ஆரிய தந்திரி களோ சொர்ணக் கமலத்தில் ஒரு லெட்டர் மடித்துவைத்து பட்டுப் பீதாம்பரத்தால் மூடி விபூதி, பழம், புஷ்பமாலையும் சேர்த்து ஒருவர் கையிலேந்திச் செல்கின்றார். அனேகர் கைகோத்த வண்ணமாய் மனித பாஷையிலோ வேறெப்பாஷையிலோ ஆ - ஓ - கா - கீ என்ற சப்தமுடன் செல்கின்றார். காலம் சென்றது அரசனும் பிரதானிகளும் யானையின்மேல் அவுதா வைத்துத்தாங்கள் கால்நடையாய்ச் சென்று முன்னோர் வைத்திருந்த கமலத்தையும் அவரையும் அவ்வத்தியின்மேலேற்றி ஊர்கோலம்செய்து கீழிறக்கிச் சிம்மாசனம் கொடுத்து அரசன் கீணின்று தானையொதுக்கி வாய்பொத்தி நிசப்தமாயிருக்க ஆசனமுற்றார் லிகிதமுடைத்து வாசிக்குமாறு,

## வெண்பா.

கொடுங்கோலை எந்தியாள் கோமகற்குச் செவ்வேள்
விடுங்காயித மிவ்வெறியன்—நெடுங்காலம்
வீற்றிருந்த குன்றத்தை விட்டோட்டப் பார்க்கின்றான்
ஏற்றிவிடு தீவினுக்கே.

இவ்வசனங் கேட்டு இறைவன் பயந்து கைகால் நடுக்குற்றுக் கட்டுண்ட இப்பாவி என் செய்தான் ஐயோ வென்றலறி யுள்ளம் பிறிட்டு மெய் சோர்ந்து நாவரண்டு சங்கரா, சிவா, குகா என்றயர்ந்த மொழியுடனோதி மந்திரியு மில்லையே என்று சோகித்து திடீரெனச் சாய்ந்தனன். மெய்காப்பாளர் தாங்கி அந்தப் புறம் சேர்த்தனர். குற்றவாளியைச் செயிலிலிட்டனர். கூட்டம் கலைந்தது.

ஒருநாள் அதிகாலையில் அந்தகார வரையின் மேல்மாடியில் மாலை ஏழுமணிக்கு மகாநாடு கூடுகின்ற தென்றொரு விளம்பரம் பிறந்தது. அஃதுணர்ந்த அனேக ஜனங்கள் திரள் திரளாய்ப் போய்க்கொண்டே யிருந்தனர். மாலை மணி ஒன்பதாயிற்று. சபா நாயகரால் வரவேற்கப்பட்டு எல்லாரு மிருந்தனர். அவசரமொழியன் எழுந்து சபைக்கு வந்தனம் கூறி மகா சபையார்களே இப்பொழுது நான் தங்களிடத்தோர் விண்ணப்பம் கேட்கின்றேன். அதாவது நம் தேசமாகிய மனோராச்சியத்தை நெடுங்காலமாய் அரசு புரிந்துவந்த சதாதுவேசிஎன்னும் நமதரசனும் இஷ்டபோகி என்னும் நமதரசியும் வெகு சன விரோதிஎன்னும் மந்திரியும் சர்வ நீதியுமில்லாமல் ராச்சியபாரம் செலுத்திவந்த விசேடத்தால் சனிச் சுற்றில் முப்பது மழைகளும், வியாழவட்டத்தில் மூன்றுபோக மும் விளைந்து நாடெல்லாம் செழித்து வீடெல்லா மிடிந்து ஓடெல்லாம் கையேறி கூடெல்லா மெலிந்து பாடெல்லாங் குறைந்து சோம்பேறிகள் மிகுந்துஎங்கு பார்த்தாலும், மடம், குடும்ப விசாரணையே கிடையாது.

இதைப் பற்றிக் கூடிய சபையார்களெல்லாம் யோசித்துத்திர் மானஞ் செய்யும்படியாய் கேட்டுக் கொள்ளுகின்றேன். எல்லாரும் கொஞ்சநேரம் இஷ்டம்போல் பேச ஆரம்பித்து தத்தமக்குத் தெரிந்த விதமெல்லாம் பேசிக்கொண்டே யிருக்க மணி பதினொன் றாயிற்று. அப்பொழுது மோச நிவாரணியென்னும் ஒரு பெரிய குடும்பஸ்தன் எழுந்து மஹா சபையார்க்கு என தன்பான வந்தனம். எல்லாரும் தயவுசெய்து அடியேன் செய்யும் விண்ணப் பத்திற்குச் செவி சாய்த்தருளுமாறு வேண்டுகின்றேன். மிஸ்டர் நயவஞ்சகப் பட்டரவாள் சொல்லிய பிரகாரம் செய்துவிட்டால் நமது மனோராஷ்ய தேசமானது இன்றோடு முடிந்துபோய்விடும்

நாதனில்லா வீடும் நாடுமே நடவாதென்ற ஆன்றோர் வாக்கியப்படி நம்தேசமெவ்வாறாய்ப் போய்விடுமோ வென்று நினைக்க நினைக்கத் திகிலா யிருக்கின்றது. ஆகையினால் தயவுசெய்து நம்முன்னோர் கால ஏற்பாட்டின்படி திரிகால வர்த்தமானி என்னும் பட்டத்து யானையைச் சிங்காரித்து விடுவோம். அது யாரைத் தூக்கி வந்து சிம்மாசனத்தில் வைக்குமோ அவர்களை அரசிளங் குமரிக்கிப்பருவம் வரும்வரை அரசென ஒப்புக்கொண்டு அடங்கி நடப்பதாகவும் பின்னால் இளங்குமரியின் மணாளனையே அரசாக்கி வந்தவரை மந்திரி ஸ்தானத்தில் வைப்பதாகவும் தீர்மானித்து செய்ய வேண்டிய காரியங்களைச் சீக்கிரம் செய்யுமாறு பிரார்த்திக்கின்றேன். (கரகோசம்) அப்படியே செய்ய நிச்சயித்து யானையைச் சிங்காரித்துப் பூமாலையும் கடசலமுங் கொடுத்தனுப்பிவிட்டு எல்லாரும் தெய்வத்தைத் தியானித்துக்கொண்டு யானையின் வரவை நோக்கி நின்றனர். மறுநாட் பகல் மணி ஒன்பதாயிற்று. கடாசலத்தோடேகிய கஜம் நேர் வடக்காய் சென்று மேற்கே திரும்பி சிறு குன்றின் பாங்கர் அடர்ந்த காட்டில் சோகமாய்ப் படுத்திருந்த ஒருவனை எடுத்து மத்தகத்தின்மேல் வைத்துக்கொண்டு மனோராக்ஷியபுரம் வந்து கீழிறக்கிவிட்டுக் கடாசலத்தைச் சிரசிலபிஷேகித்து நைவிலுற்ற மாலையைக் கழுத்திலிட்டுச் சிம்மாசனமேற்றி வைத்தேகின.

குடிகளெல்லாம் ஏகோபித்து வந்து புது அரசனை வணங்கி பிரபு நாங்களெல்லாம் உமது குடிகள் அதோ பொன்னூஞ்சலிலாடும் பாலகி எங்களரசன் புத்திரி அவ்விளங் குமரியையும் எங்கள் தேசத்தையும் எங்களையும் உமது கையில் கொடுக்கின்றோம். எப்படியாக்கினும் நமது சித்தம்.

இன்னும் பலமுகமன் கூறிய பெரிய மனிதரிற் சிலர் தவிர மற்றோரெல்லாரும் புதுவரசன் வந்த செய்தியைத் தேசமெங்கும் பரவச்செய்யும் முயற்சையி லிருந்தனர். இங்கிருந்தோரில் குணசாந்தன் என்னும் பெரியவரெழுந்து பிரபு தங்களைப் பார்த்தால்

பாவிய சிங்கக் குருளைபோன் றிருக்கின்றீர்கள். தங்கள் வரலாற்றை விசாரிக்கப்புகின் யாருக்கேனும் சஞ்சல முண்டானாலு முண்டாகும். அது நிற்க, இதோ தெரிகின்ற மாடமாளிகைகள் யாவுந் தமதே. போதுமானஏவலாளரு மிருக்கின்றனர். வேண்டியன வற்றை தருவேன் என்று பேசிக்கொண் டிருக்கும்பொழுதே அரசிளங்குமரி சிரித்துக்கொண்டோடிவந்து புதுவரசன்மடிமீதேறி அம்மா ஐயா வெங்கேமோட்டாக்கார் சைக்கிள்வேண்டும்சாப்பிடமாட்டேன் அழுவேன் நீங்களெங்கே போயிருந்தீர்கள் மான்குட்டி பிடித்துக்கொண்டு வந்தீர்களா ஏன் பேசாம லிருக்கின்றீர்கள். என்ன கண்ணீர் விடுகின்றீர்கள் ஐயாவைக் காணோமென்று கவலைப்படுகிறீர்கள் நீங்கள் அழுதால் நானும் அழுவேனென்று அழுதற் காரம்பித்துவிட்டது. உடனே அரசன் எல்லாரையும் அனுப்பிவிட்டு குழந்தையைத் தோளிற் சாய்த்துக்கொண்டே அந்தப்புரமேகி அவசியமில்லாத வேலைக்காரரை நீக்கிவிட்டுப் போசன மருந்திக் குழந்தைக்கு மூட்டு வித்துத் துயிலுணர்த்திவிட்டு தனியறையி லுட்கார்ந்து யோசிக்கலாயினர். இதென்ன பெரியவில்லங்கத்தில் மாட்டிக்கொண்டோம். குழந்தையை இழந்து நாதனைப் பிரிந்து அரசையகற்றி கிரகத்தைத் துறந்து சன்னியாசிக் கோலமாய்ப் புறப்பட்ட நமக்கு பெருங்கவலை மேற்கவலையானபாரமல்லவா ஏறிவிட்டது.

இவர்கள் செயலை யோசிக்கப்புகின் இக்குழந்தையை விட்டுவிட்டு அரசனும் அரசியும் திடீரென இறந்துவிட்டாற்போற் றோன்றுகின்றது. இதெல்லாம் வரவரப் பார்த்துக்கொள்ளலாம். ஆனால் இப்போது நாம் பூண்டிருக்கும் கோலமே நமதன்பனையும் ஆசைக் கண்மணியாகிய நம் சேயையும் காணுதற்கு இது ஒரு நன்னெறி என்று தீர்மானஞ்செய்து சற்றுறங்கி அதிகாலையிலெழுந்து செய்யுங் கடன்களை யந்தரங்கமாய் முடித்து குழந்தையுடன் போசனமருந்தி நல்ல சுயம்பாகியானவளும் சுசிகர உடை நடைவித்துவாராச்சியு முள்ளசிலரை நிறுத்திக்கொண்டு மற்றவரைநீக்கிவிட்டு, நன்மொழியும் மிருதுவான தொனியும் உயர்ந்த வித்தையு

முள்ள ஒருத்திக்குத் தகுந்த சம்பள மேற்படுத்தி சிசுவையவள் வசம் ஒப்பிவைத்து குழந்தை கெட்ட வசனங்கள் பேசிப் பழகு மானால் நீயே சிட்சிக்கப்படுவா யென்று வற்புறுத்திச் சர்வ சாக்கிரதையா யிருக்க வேண்டுமென் றனுப்பிவிட்டு குடும்பத்துக்கு வேண்டியவைகள் தவிர மற்றவைகளைத் தவிர்த்து யானை, குதிரை, பசு, இன்னும் பலவகையான மிருகசாதிகளிலும் அவசியமில்லாததை யகற்றி பொக்கிஷசாலைக் கணக்கர்களை வருவித்து இருப்பை விசாரித்து வீணாபரணங்களை யெல்லாம் விற்றுப் பொக்கிஷத்தில் சேர்த்துவிட்டு மொத்த வரவு செலவு ராயசக்காரர்களைக் கூப்பிட்டுக் கிராம வசூல் ஆதாயஞ் செலவுகளைத் தெரிந்து கொண்டு விபசாயகிகள், வியாபாரிகள், கைத்தொழிலாளிகளை யெல்லாமழைத்து உட்காரவைத்து மகாஜனங்களே யான்சொல்லுவதைக் கவனிப்பாய்க் கேட்டு அங்கீகாரம் செய்யும்படியாய்க் கேட்டுக்கொள்கிறேன். அதாவது இதுமுதல் அவரவர்கள் தங்கள் தங்கள் காரியங்களில் கவலையீனர்களா யிராமல் சாக்கிரதையாய்ச் செய்யவேண்டும். அவசியம் நேரிட்டால் கஜானாவிலிருந்து சொற்பவட்டிக்குப் பணம் கொடுப்போம். கூட்டு வர்த்தகம், தொழிற்சாலைகள், பலதேசப் போக்குவரத்து யந்திரங்கள் ஏற்படுத்தினால் பாதிப்பங்குக்குப் பணம் கஜானாவிலிருந்து கொடுப்போம். வித்தியாசாலைகள் வேண்டிய இடங்களைத் தெரிவித்தால் உடனே கவனிப்போம். நீர்த்துறவுகள், கால்வாய்கள், ஏரிகள் வெட்ட வேண்டிய இடங்களைப் பார்த்து வரும்படி இஞ்சினீர்களை யனுப்புவோம். அவரவர் குறைகளைச் சொல்லிக் கொள்ளப்பிரசில்லாமல் நேரிலிடங் கொடுப்போம். வேண்டிய காரியங்களுக்கு ஒருவர் சிபார்சுமில்லாமல் நேரேவந்து பேசிக்கொள்ளலாம். யான் சொல்லும் காரியங்கள் ஒவ்வொன்றையும் கவனியுங்கள்.

அடக்கியாளரசு படையை நாடும், மயக்கியாளரசு மானியங்கள் விட்டு மண்டபங்கள் கட்டி கற்சிலைகளையுண்டாக்கி அவைகள் தங்களுடன் பேசுவதாய்க் கற்பனை செய்யும் வஞ்சிக்கும் அரசோ நவீன மதங்களேற்படுத்தி எய்த்திழுக்கும் கொடியரசின் குணம் அனுபவத்தில் கண்டிருக்கின்றீர்கள்; நானோ இவைகளில் ஒருவருமல்லேன், ஐக்கியமென்னும் கயிற்றினால் உங்களை ஒருவரோடொருவராய்ப் பிணைத்து கல்வியென்னும் பலத்தாலிழுத்து

இராச விசுவாசமென்னும் தூணில் கட்டிச் செல்வமென்னுந்தழை யில் மேய்த்து, ஆராச்சி யென்னும் நீரருத்துவேன், அரசாங் கச் செலவிலிருந்தே சகல கிராமங்களிலும் வித்தியாசாலைகளும் தொழிற் கல்விச் சாலைகளும் அமைக்கின்றோம். உங்கள் பெண் களில் பிரைமெரி பாசாகாதவர்களுக்கும் ஆண்களில் மெட்ரிகு லேஷன் பாசு செய்யாதவர்களுக்கும் விவாக சம்பந்தங்களுக்கு இடந்தரமாட்டோம், முற்றிலும் படியாதவர்களையும் ஒருதொழி லும் தெரியாதவர்களையும் தேசப்பிரஷ்டம் செய்து விடுவோம், தகுந்த முகாந்தரமன்னியில் பிச்சை எடுப்போரையும் கொடுப் போரையும் தண்டனைக்குள்ளாக்குவோம், தருமமென்றெண்ணி உலகப் பிரயோசன மல்லாத காரியங்களைச்செய்பவர்களின்சொத் துக்களை ஏழைகளுக்குப் பங்கிட்டு கொடுக்கப்படும் உங்களுக்கு நானின்னமென்ன சொல்லப் போகின்றேன்.

ஒன்றுமில்லை, ஆனாலும் கொஞ்சம் கவனியுங்கள், நம்பூமியே தெய்வம், அதுவே நம்தாய், அவளேசகல சுககாரணி, அவளைவிசு வாசித்த உடனே முக்தி. வெறுத்த உடனே நரகம், நம் தாயின், சுகமே நம் சுகம், அவள் செழித்தால் நாமும் செழிப்போம், சுக துக்கங்களெல்லாம் அவளிலிருந்தே உண்டாகின்றது. ஆகையி னால் வீணே ஏய்ப்பாருக் கிடங்கொடாமல் காணாததை நம்பாமல் கண் கண்டதைக் கைவிடாமல் சோம்பேறித்தனத்தை முற்றிலும் களைந்து சுகமா யிருங்களென் றனுப்பிவிட்டு தேச காவலர்களை யழைத்து அவசியமாய்வேண்டிய பட்டாளங்களை மாத்திரம்வைத் துக்கொண்டு மற்றதை உடைத்துவிடும்படி யுத்தரவுசெய்துவிட்டு தேசவிசாரணை ஸ்தானத்தில் போயுட்கார்ந்து,

பியூன் கேசுக ளிருந்தால் கூப்பிடு.

ஆஜர்.

நியாயாதிபதியின் விசாரணை.

நியா:—எந்த ஊர், என்ன பெயர், வியாச்சிய மூலமென்ன, சீக்கிரம் சொல்லுங்கள்.

வாதி:-ஐயா எங்களூர் விபகாரபுரம், பெயர்வயிராக்கியத்தேவன், எங்களூர் சிவன் கோவிலுக்கு நான் தர்மகர்த்தா, இதன் உற்சவச் செலவு, பிராமண போசனம், சர்க்கரைப் பொங்கல், பாலபிஷேகம் முதலியவைகளுக்கு ரூபாய் இரண்டாயிரம் செலவாகும். அதிலுள்ள பரிவட்ட மரியாதை என்னைச் சேர்ந்தது. அதை என் பெரிய தகப்பன் மகன் கலங்காத கண்டத்தேவன், வயதில் பத்து வருடம் பின் பிறந்தவன். தனக்கு வேண்டுமென்று நாலு வருடமாய் விபகாரஞ் செய்து எனக்குச்செலவுரூபாய் இருபதாயிரம் அவனுக்குச் செலவு முப்பதாயிரமாகும். விபகாரம் இன்னும்முடியவில்லை. புதியவரசு வந்திருப்பதாய்க் கேள்விப்பட்டு மறவியாகூடிய மிடுகின்றோம். எங்கள்பேரில் கிருபைசெய்து நியாயமாய்த் தீர்ப்புச் செய்யும்படியாய்ப் பிரார்த்திக்கின்றோம்.

நியா:—ஓய் பிரதிவாதி இவ்வியாச்சியத்தைப் பற்றி நீர் என்ன சொல்கின்றீர்.

பிரதி:—ஐயா வழக்கி லொன்றும் வித்தியாசமில்லை செலவு தொகையில்தான் வித்தியாசமிருக்கின்றது. அதாவது அவருக்குச் செலவு ஐம்பதினாயிர மிருக்கும் இருபதினாயிரமென்று பொய்சொல்லுகின்றார்.

நியா:—நல்ல புத்திசாலித்தனந் தான். சிறிய தகப்பன் மகனும், பெரிய தகப்பன் மகனும் இவ்வளவு ஒற்றுமையாயிருந்தால் தான் கூடிய சீக்கிரம் தேசம் முன்னுக்கு வந்துவிடும் நல்லதிருக்கட்டும். கோட்டில் செலவழிந்த தொருபுற மிருக்க, கோயிலில் செலவழிக்கும் இரண்டாயிர ரூபாயில் பரிவட்ட மரியாதையைத் தவிர வேறேதாகிலும் உங்களுக்குக் கிடைக்குமா ?

வாதி:—ஒன்றும் கிடையாது.

நியா:—பின்னை! யார் கொண்டு போகின்றார்கள்.

வா:தி:—பட்டர்தான் கொண்டுபோவார்.

நியா:—பரிவட்ட மென்றது இன்ன சாமானென்று விசாரித்தாவது நேரிலாவது பார்த்திருக்கின்றீரா.

வாதி:—ஆம் பார்த்திருக்கின்றேன்.

நியா:—எப்படி யிருக்கும்.

வாதி.—சுமார் மூன்றடி நீளமும் ஒரு அடி அகலமும் வலைபோல் பின்னிய ஓர் வகையான பட்டுத் துணி.

நியா:—அதின் கிரையம் என்னபெறும்.

வாதி:—சுமார் ஒரு அணாவாகும்.

நியா:—அந்தத் துணி என்ன பிரயோசனத்துக்காவது ஆகுமா.

வாதி:—ஒரு பிரயோசனத்துக்கும் ஆகாது.

நியா:—இரண்டாயிரரூபாய் சாமானையும் எடுத்துக்கொண்டு ஒரு பிரயோசனத்துக்கும் ஆகாத கந்தையை உங்கள் தலையில் கட்டுவதுபோலப் பாவனை செய்து இருவருக்கும் விரோதமுண்டாக்கிவிட்டு ஜீவாதாரமாயிருந்த லக்ஷக்கணக்கான திரவியத்தைச்செலவிடச் செய்து யாதொரு கஷ்டமுமில்லாமல் சுக ஜீவியாய் இருக்கின்றவர்களுடைய அறிவையும் உங்களறிவையும்சீர் தூக்கிப்பார்த்தால் மேருவுமணுவும்போ லிருக்கின்றதல்லவா வழக்காளிகளே. உங்கள் அகக்கண்ணை கலக்கி விட்டார்களா, அல்லது இருக்கின்றதா, நித்திரை செய்கின்றீர்களா, விழித்திருக்கின்றீர்களா, கொஞ்சம் யோசித்து பதில் சொல்லுங்கள்.

வாதி:—கொஞ்ச நேரம் தலை கவிழ்ந்திருந்து பெருமூச்செறிந்து ஐயோ ஆதியில் ஒன்றையும் விரும்பாமல் என் தம்பி பக்கத்தில் நின்றுகொண்டு தானே யிருந்தான். அவனால் ஒன்றும்சேட்

கவில்லையே. அந்தப் பட்டர்தானே பரிவட்டத்தைக் கொண்டு வந்து அவர் மூத்தவர் மகனைவிட்டதே யாருக்கு முந்திக் கட்டு கிறதென்று கேட்டார். அதன்பின் னல்லவா என்தம்பி தனக்கே கட்டவேண்டுமென்று சொன்னான். நானாவது அவனாவது கையில் வாங்கிப் பார்த்து ஒரு பிரயோசனத்துக்கும் ஆகாத இத்துணியை யாருக்கு முந்திக் கட்டினாலும் அதனால் என்ன பிரயோசனமென்று வாங்கி எறிந்துவிட்டு வாராமல் வீண் விபகாரம் செய்து ஒவ்வொருவருக்கும் கையிலிருந்த ரொக்கமெல்லாம்போய் ரூபாய் இருபத்தையாயிரத்துக்கு மேல் கடனு மிருக்கின்றதே என்ன செய்வோம், எவ்வாறு தீர்ப்போம். எப்படிப் பிழைப்போம், தம்பி நீதானே அந்தத் துணியைக் கட்டிக்கொள்ளய்பா, எனக்கு வேண்டவே வேண்டாம். சமாதானமாய் வீட்டுக்குப் போவோம், வருகின்றனையா வென்று தம்பியின் கையைப் பற்றினன். அண்ணே எனக்கும் வேண்டாம் ஐயோ மயக்க வலைக்காரர் தந்திரத்துள் ஆழ்ந்து கெட்டுப்போனுமே. அவர் தந்திரமறிந்து விலகும் கூர்மையான புத்தி நமக்கில்லாமற் போனதெல்லாம் நம்முடைய படிப்பின் குறைவேயன்றி. வேறல்ல, இனியாகிலும் நம்முடையபிள்ளைகளை நன்றாய்ப் படிக்கவைத்து இவ்விதமான மோசங்களி லகப்பட்டுக்கொள்ளாமல் செய்வோம். புறப்படுங்கள் புத்தி வந்தது பிரபு சமாதானமாய் விட்டோம்.

நியா:—நல்லது போய் வாருங்கள்.

## பியூன் வேறு கேஸ் கூப்பிடு.

### ஆஜர்.

நியா:—நீங்களெந்த ஊர் என்ன வியாச்சியம்.

வாதி:—எங்களூர் திரிகூடியாபுரம், பெயர் ஒத்துவராச்செட்டி, ஊரிலொரு சத்தி கோவிலிருக்கின்றது அதில் பஞ்சாட்சர மரியாதை பரம்பரையாய் எனக்கே உள்ளது இப்பொழுதுஎன்

மைத்துனர் தனக்கு வேண்டுமென்று வாதாடுகின்றார். எங்கள் பரம்பரைக்கு விரோதமில்லாமல் நியாயமாய்த் தீர்ப்புச் செய்யப் பிரார்த்திக்கின்றேன்.

நியா:—பஞ்சாட்சர மென்றால் என்ன ஐந்தெழுத்தா.

வாதி:—இல்லை விபூதி.

நியா:—என்ன காணும் ஒருவேளை ஐந்தெழுத் தென்கின்றீர் மற்றொரு முறை மூன்றெழுத்தாய் உச்சரிக்கின்றீர். நீர் சொல்லுகின்ற சாமான் என்ன கிரையம் பெறும்.

வாதி:—விலை மதிக்க முடியாது.

நியா:—அதை நான் பார்க்கலாமா.

வாதி:—பார்க்கலாம், இதோ சம்படத்தி லிருக்கின்றது திறந்து பாருங்கள்.

நியா:—என்னகாணும் மாட்டுச்சாணத்தினாலுண்டாகும்சாம்பலல்லவா இருக்கின்றது இதில் ஒரு சிமிட்டாதானே உம்முடைய கையில் போடுவான்; ஒரு பைசாவுக்குச் சரணம் வாங்கி வேகவைத்துக் கொண்டாரானால் நீர் கொடுக்கலாமே. இரண்டாயிரம் பேருக்கு இவ்வளவு ஈனக்கிரயமுள்ள வஸ்து வைத்தானை மகா பெரிதாய் நினைத்துக்கொண்டு வீண் விபகாரங்களை வளர்த்தி இவ்வாறாய் அலைந்துவிட்டீர்கள். ஐயோ! என்ன புத்தி விசாலம் ஒற்றுமை எந்தக் கால முங்களிடத்தி லுண்டாகும் என்னை முன்னுக்கு வருவீர்கள்? பொதுப் பணங்களைச் சேகரித்து ஸ்கூல்களை ஸ்தாபித்துப் பிழைக்கும் வழியைத் தேடப்படாதா பிரதிவாதி இந்த விபகாரத்தைப்பற்றி நீர் என்ன சொல்கின்றீர்.

பிரதி:—ஐயா இப்படிச் சாம்பல் ஏங்களூர் சுள்ளைக்கரையில் வண்டிப்பாரம் நாலணாவுக்கு வாங்கலாம் எனக்குத்தேவையான சமயம் வாங்கிக்கொள்கின்றேன். வாதிக்குத்தானே தீர்ப்புச்செய்து விடுங்கள் எனக்கு வேண்டாம்.

நியா:—பிரதிவாதி சம்மதியின்பேரில் வாதிக்கே தீர்ப்புச்செய்திருக்கின்றோம்.

## பியூன் வேறு கேஸ் கூப்பிடு.

## ஆஜர்.

நியா:—நீங்களார் என்னவிபகாரம் பெருங்கூட்டமாய் அனேகரொருமுகமாய் வந்த காரணம் என்ன.

வாதி:—பிரபு ஆசீர்வாதம் நாங்கள் குன்றுடைக் குமரன் வென்றிவேற்கையன் தன்றனைநாளுஞ் சென்றடி பரவும் நன்றறிவுடையார். (வியாச்சியமூலம்) சங்கரன் குமரன் ஐங்கரன்றம்பி செங்கரத்தெழுதிய திருமுகப்பாசுரத்துடன் தெய்வதூஷணம்செய்த யாத்திரை வாசியொருவனைப் பூர்வ இறைவன்பால் ஆஜர் செய்து பாசுர மறைந்தனம் எம்பெருமான் திருமுகங் கேட்டு இறையுளம் நடுங்கி அயர்வுற்றனர். பின்னிரண்டொரு திவசங் கழிந்திறைவனு மிறைவியும் ஈசனடிக்காளாயினர். அக்கேசின் முடிவற்யுமாறு அவாவுடையேம் ஆறுமுகப் பெருமானனுப்பிய திருமுகப் பாசுரம் வருமாறு.

கொடுங்கோலை ஏந்தியாள் கோமகற்குச் செவ்வேள்
விடுங்காயித மிவ்வெறியன்—நெடுங்காலம்
வீற்றிருந்த குன்றத்தை விட்டோட்டப் பார்க்கின்றான்
ஏற்றிவிடு தீயினுக்கே.

நியா:—என்னுங் காணும் நனைந்த கோழி பிடிக்கும் பழைய தந்திரமல்லவா இது முன்னுள்ள ஏமாளி அரசர்களுக்கு உங்கள் முன்னோர்கள் இப்படித்தான் எழுதுகின்றது. தருமிக்குப் பொற்கிளி கொடுத்தது பாணபத்தனுக்காய்ச் சேரர்பிரானுக் கெழுதிய திருமுகம் தொற்றங் குடியார்க் கெழுதிய கைச்சீட்டுமாணி

க்கவாசகன் சொல்லத் திருச்சிற்றம்பலவன் கையெழுத்து என்றிப்படியே இன்னு மனேகம் ஏமாற்றுகளுள அதையெல்லாம்சொல்லப்புகின் வீண்காலம் கழியும் அஃதொழிக என்னையும் பழைய காலத்துப் பாமரசென்று நினைத்தீர்கள். அந்தப்பப்பு இந்தக் காலம்வேகாது. யார் இது கொண்டு வந்தவன் நேரே வா இது யார் கையெழுத்து உண்மையைச் சொல்.

வாதி:—பிரபு நாங்களப்படி வஞ்சகம் செய்வோமா இதுகாங்கேயன் கையெழுத்துத்தான்.

நியா:—உண்மையைப் பேசுங்கள் காங்கேயன் படிக்குங்காலம் இப்படி எழுத்துக்களே கிடையாது அக்காலத்து அக்ஷரங்களின் ரூபங்களே வேறு விதமாயிருக்கும். அஃதறியாவிட்டாலும் முன்னுள்ள கற்சாதனங்கள் தாம்பூரச் சாதனங்களைக் கவனித்தாவது வேலை செய்தீர்களா மகா வஞ்சர்களே இப்பொழுதென்ன சொல்கின்றீர்கள்.

வாதி:—அவர் சொல்ல நாங்கள் தான் எழுதினது.

நியா:—நாங்க ளென்று லெத்தனை பெயர்.

வாதி:—நான் தான் எழுதினவன் மற்றோருபகாரிகள்.

நியா:—இது உன் கையெழுத்துதானு.

வாதி:—ஆம் என் கையெழுத்துத் தான்.

நியா:—அக்குகனை நேரில் சொன்னுரா சொன்னவரைச்சாட்சிக்குக் கொண்டு வரமுடியுமா அல்லது அங்கே போய் விசாரித்தாலாவது பேசுவாரா.

வாதி:—நேரில் சொல்லவில்லை சொர்ப்பனஞ் சாதித்தார்.

நியா:—சரி சரி கனவு கண்டாயாக்கும் கனவு கண்டதை நம்பி நீங்களே யெழுதி அதைக் கொண்டு வந்து பயித்தியகார அரசனிடம் படித்துக்காட்டி திகிலுண்டாக்கி இரத்தாசயம் வெடித்

து இறந்துபோகும்படி செய்துவிட்டீர்கள். அரசன் பிரிவாற்றுமையால் மனைவியும் இறந்துவிட்டதாய்த் தெரிந்துகொண்டேன். உங்களால்கொலை இரண்டு நடந்திருக்கின்றன. ஆகையால் நீதிஸ்தானத்தில் கொலைக்குற்ற முங்கள் பேரில் சாட்டப்பட்டிருக்கின்றது. என்ன நியாயம் சொல்லித் தப்புகின்றீர்கள்.

வாதி:—பிரபு மன்னிக்கவேண்டும் நாங்கள் பரம்பரையாய் இப்படியே செய்கின்றது வழக்கம் பழக்கம் கொடியதென்ற பழமொழிபோல் செய்துவிட்டோம். இப்படி வருமென்று எங்களுக்குத்தெரியாது. இனிஒருபோது மிவ்வாறுசெய்யவேமாட்டோம்.

நியா:—பத்திரமாயிருங்கள் கேசு முடியவில்லை அரசாங்கத்தார் விரும்பும்போது ஆஜராவதாய் தகுந்த ஜாமீன் கொடுத்துவிட்டுச் செல்லுங்கள். ஒய்குமஸ்தா ஜாமீன் புள்ளிகளிடம் கையெழுத்து வாங்கிக்கொண்டு அனுப்பிவிடும்.

## பியூன் வேறு கேஸ் கூப்பிடு.

## ஆஜர்.

நியா:—நீர் யார் எந்தவூர் என்ன கேஸ்.

வாதி:—இறைவனே யான் நெடுந்தூரப்பிரயாணி என்பெயர் விவேகானந்தன் யானும் என் சிநேகிதனும் தேசசஞ்சாரம் செய்ய வெண்ணிப் பரங்குன்றமென்ற பதியிலிரங்கினோம். நிர்நிமித்தியமாய் அனேகர் வந்து என் சிநேகிதனைப்பிடித்துப் பலமாய் அடித்துத் தளையிட்டுக்கொண்டுவந்து இவ்வூர் அரசன் பால்விடுத்தனர் பின்னர் என்ன நடந்ததோ தெரியவில்லை. பிரதிவாதியை வருத்தி நியாயத்தை விசாரித்து முடிவு செய்யும் படியாய்ப்பிரார்த்திக்கின்றேன். என் சிநேகிதரும் தங்கள் காராக்கிரகத்திற்றானிருப்பார் பெயர் வித்தியாதரன்.

நியா:—என்ன சொன்னீர் உம்முடைய சிநேகிதர் பெயரென்ன மறுபடியும் சொல்லும்.

வாதி:—என்சினேகிதர் பெயர் வித்தியாதரன்ருன்.

நியா:—இருதய தோற்றம் ஐயோ ஈதென்ன பாவம் கைகள் நடுங்குகின்றது உடம்பெல்லாம் பதறுகின்றது மயிர்க்கூச்செடுக்கின்றது என்னையறியாது கண்ணீர் தாரை தாரையாய்க்கொட்டுகின்றதே ஏனிப்படிக் கலங்குகின்றது நம் நாயகன் மேற்கொண்ட பெரிய அவாவினல் அறிவு சிதறி மயங்கிவிட்டது நமக்கு ஈதென்ன பயித்தியம் ஒரு பெயர் கொண்டாருலகத்தில் பலருளர் நாம் பயித்தியகாரிபோல் பெயரைக்கேட்டதும் மயங்கிவிட்டோமே ஆனாலு மிருக்கட்டு மின்னும் முற்றிலும் விசாரித்தறிவோம் என்ருலும் வாய்திறந்து பேசவொட்டாது போலிருக்கின்றதே ஈதென்னபிரமை தைரியப் படுத்திக்கொண்டு பேசிப்பார்ப்போம்.

ஓய் விவேகா னந்தனரே நீர் சொல்லுகின்றவர் எந்த ஊர் என்ன பாஷைக்காரர் பெண்ஜாதி பிள்ளைகளுடையவரா அல்லவா அதன் விருத்தாந்தங்களில் தெரிந்தவரையும் சொல்லும்.

வாதி—ஊர் எனக்குத் தெரியாது பாஷை திராவிடம் பெண்ஜாதி பிள்ளைகள் இருந்திழந்தவர் போல் ஒவ்வொருவேளைகளில் கவலைப்படுவார்.

நியா—சரி! சரி!! நாமினி வீண்காலம் போக்கினல் ஸ்மரணையற்று விழுந்து விடுவோம்போ லிருக்கின்றது. ஆகையினல் விசாரணையை இம்மட்டில் நிறுத்தி விடுகின்றேன். பியூன் இம்மனிதனைக் கொண்டுபோய் காராக்கிரகத்தி லுள்ளவருக்குப் பதிலாய் வைத்துவிட்டு அங்குள்ளவரை அரண்மனையின் மேல்மாடியிலோர் தனியறையி லடைத்துவிட்டுச் சீக்கிரம் சாவியைக்கொண்டு வா ஓய் குமஸ்தா மற்றக் கேசுகளுக்கெல்லாம் வாய்தாப் போட்டுவிடும் கச்சேரி முடிந்தது கூட்டம் கலைந்தது.

## 6 வது அத்தியாயம்

ஒரு பாலிய அரசகுமாரன் உயர்ந்த மேல்மாடியின் கட்டடத்துக்குச் செல்கின்ருன் அயர்ந்தயர்ந்து குந்திக் கொள்கின்ருன் மயங்கி மயங்கி ஏதேதோ புலம்புகின்ருன் துக்கமும் சந்தோஷ

மும் ஒரே யிடத்தி லிரா௱தென்று சாஸ்திரங்களெல்லா முறையிடு கின்றதே தற்சமயம் இரண்டு மென்னிட மிருக்கின்றதல்லவா ? என்னறிவு தத்தளிக்கின்றதே நாமேகும் நெறி மேல்மாடிக்குத் தானே அல்லவோ ஈதென்ன விபரீத காலமா யிருக்கின்றது எவ்வளவு தூரமோ வந்துவிட்டோம். இன்னும் படிகளாகத் தானே இருக்கின்றது என்ன மாய்கை, என்ன மயக்கம், என்ன சோகம் இதோ கரையேறிவிட்டேன்கண்டு கொண்டேன் பூட்டைத்திறக்கின்றேன்; உட் பிரவேசிக்கின்றேன்; ஆ ஹா ! என் பதியே பதி என் அன்பே அன்பு என் கண்ணே கண் இக்கோலத்தோடா காணக்காத்திருந்தேன் (சோகம்) திடீரென விழுந்துவிட்டாள்.

வித்—ஈதென்ன விபரீதம். இப்பாலிய குமாரன் சோகித்து விழுவானேன். தொனியுண்டானது இந்தச் சரீரத்திலிருந்து தானோ ?அல்லது வேறு யாராவது மறைவாய் நிற்கின்றார்களா ? சப்தம் சமாதானியின் சப்தமே ரூபம் பாலிய அரசகுமாரன் ரூபமே நாம் பார்ப்பதெல்லாம் உண்மையா சொற்பனங் காண்கின்றோமா ? கண்ணைத் தடவிப் பார்க்கின்றேன். விழி திறந்துதானே யிருக்கின்றது. ஒருவாறு இவன்றான் ஜெகரக்ஷகனோ ? அப்படியானால் சமாதானி வெளியே நிற்கின்றாளோ ? போய்ப்பார்ப்போமா ஒருவரையுங்காணோமே ? துக்கமொரு பக்கம் சந்தோஷமொருபுறம் போராடுகின்றதே என்ன சந்தேகம் எப்படித்தெளிகின்றது. யாரைக்கேட்கின்றது நம்முடைய இல்லந்தானிப்படி மாறிவிட்டதோ பாலியன் அநேகமாய்ச் செகரக்ஷகனாய்த்தானிருப்பான் எழுப்பட்டுவோமா தானே விழிக்கின்றாப் போலிருக்கின்றதே எழுந்து என்ன சொல்கின்றான் என்றுபார்ப்போம்.

எழுந்தேன் எழுந்தேன் கண்டேன் கண்டேன் என்துரையே இவ்வளவுகாலமாய் எங்கு சென்றிருந்தீர்கள் என்னென்ன கஷ்டப்பட்டீர்கள் ஜெகரக்ஷகனைக் கண்டீர்களா ? குழந்தையை எங்கு விட்டு வந்தீர்கள் நன்றாய்ப்படித்திருக்கின்றானா ? எவ்வன திசையடைந்திருப்பானோ ஏன் ஒன்றும் பேசாமலிருக்கின்றீர்கள்

வித்:—என்ன ஆச்சரியம் சமாதானியின் சப்தந்தானே கேட்கின்றது இப்பாலியன் எதிரே நின்றுகொண்டு சமாதானியை

அரைக்குள் வைத்துப்பேசச்செய்விக்கின்ருே? அப்படியுமில்லே யே வாயிலிருந்துதானே தொனியுண்டாகின்றன வார்த்தையாடித்தான் தெளியவேண்டும் ஐயா! பாலிய அரசகுமாரனே நான் மனேயை மைந்தனேப் பிரிந்து மகா கஷ்டப்பட்டவன் என்னேப் பரியாசம் செய்யாதீர்கள் தங்கள் தொனியைப்பார்த்தால் என் மனேவியைக் கண்டிருப்பீர்களென்றே நினேக்கின்றேன். அங்கம் துடிக்கின்றது எப்பொழுது காண்போமோவென்று சித்தப்பிரமை கொள்கின்றது; சீக்கிரத்தில் அவளேக் காட்டாதிருந்தால் என்னுயிர் பிரிந்துவிடுமோ என்னமோவென்று சந்தேகிக்கின்றேன் தயை செய்யுங்கள்.

சமா:—ஓஹோ! இன்னும் நம்மைக்காணுமலல்லவா? மயங்குகின்ருர். ஆனுலுமென்ன காரியம் கைகூடிவிட்டது சற்று நேரம் பரியாசமான வேடிக்கை செய்து பார்ப்போ மென்றெண்ணிக் கொண்டு மலர்ந்த முகத்துடன் நீரிங்கே என் வந்தீர் உம்மையார் உள்ளே விட்டது.

வித்:—ஐயா! காராக்கிரகத்திலிருந்து இங்கு கொண்டுவந்து அடைத்தார்களே தவிர நானுகவரவில்லே.

சமா:—உம்முடைய மனேவி சமாதானி யென்பவள்தானே அவளேநான் மறு விவாஹம் செய்துகொண்டேன் இனிமேல் உமக்கும் அவளுக்கும் என்னசம்பந்தமிருக்கின்றது.

வித்—அப்படி எல்லாம் சொல்லாதீர்கள் எங்கள்குலமுறை மாறிமாறி மணக்கின்ற வழக்கமுமில்லே அவளும் மகா கற்புடையவள் இவ்வார்த்தைகளால் பாவஞ் சம்பவிக்கும்.

சமா:—என்ன குலமுறை எத்தனேயோ பிராமணுளுங்கூட விதவா விவாகம் செய்துவிட்டார்கள் உங்கள் குலம் அதினும் உயர்ந்ததோ.

வித்:—குலமென்றது இப்பொழுது ஆரியதந்திரிகளால் ஏற்பட்டிருக்கும் மறையோர் பறையோர் என்றதல்ல அவரவர் பரம்பரையிலேயே உண்டாகும் நல்லொழுக்கந்தான்.

சமா:—சரி சரி! அதிகமாய்ப் பரிதாபப்படுகின்றீர்கள்; எனக்கும் அதைவிடப்பரிதாபந்தான் உங்கள் மனைவி யிருக்குமிடத்தைக்காட்டுகின்றேன் இட்டுக்கொண்டு போகின்றீர்களா?

வித்:—இதைக்கேட்கவா வேண்டும்.

சமா:—இதோயிருக்கின்றது சாவி எடுத்துக்கொள்ளுங்கள் எதிரிலிருக்கும் அறைக்குள்ளிருக்கின்றாள் திறந்து இட்டுக்கொண்டு போங்கள்.

வித்:—அறையைத் திறக்கின்றேன் கை நடுங்குகின்றதே திறந்துவிட்டேன் இது ஒரு சிறு அறைதானே? எங்குங்காணேமே சமாதானி! சமாதானி!! இல்லை இல்லையிருந்தால் என் சத்தம் கேட்டபின்னும் பேசாமலுமிருப்பாளோ வேறு கள்ள அறையில் இருப்பதாயும் காணேமே? இது ஒரு தனியறைதானே இதோ தொங்குகின்றது என் பூர்வ உடுப்பல்லவா? அதோயிருக்கின்றது சமாதானியின் வஸ்திரமல்லவா? இன்னும் பார்ப்போம் ஏதாகிலுமோரேது உண்டாகும் போலிருக்கின்றதே அவரைத்தானே கேட்போம். ஐயா!! பாலிய அரசகுமாரனே என்னைப்பரியாசஞ் செய்யாதீர்கள் அதிகத்துன்பப்பட்டவன் சகிக்கமாட்டேன்.

சமா:—என் அங்குதானே யிருந்தாள் நீங்கள் வெகு காலமாய் மறந்துவிட்டீர்களென்று கோபமாய் ஒளிந்து கொண்டாள் போலிருக்கின்றது. சற்றிங்கிருந்து வேற்றாள் வாராது கவனித்துக்கொண்டிருங்கள் நான் போய்க்கூட்டிக்கொண்டு வருகின்றேன் உள் நுழைகின்றேன் வெளியே கவனமாயிருங்கள் யாராவது வந்து விடப்போகின்றார்கள் போங்கள் போங்கள் நீங்கள் எப்படிப் பார்த்தீர்கள் இதோ உட்கார்ந்துகொண்டு தானே யிருக்கின்றாள் நான் கூப்பிட்டுப் பார்க்கின்றேன் வரமாட்டாளாம் நீங்கள் வந்தால்தான் வருவாளாம் அவரோடு பேசமாட்டேன் என்கின்றாள் இதோ நான் போகின்றேன். நீங்களிருவரும் பேசிக்கொண்டிருங்கள் பிரிந்தவர் கூடிடில் பேசல்வேண்டுமா?

வித்:—சமாதானி எங்கிருந்து வந்தாய் என்கண்ணே என தன்பே பாவியுன்னைத் தனியே விட்டு விட்டுப்போனேனே எங்

கெங்கெல்லாம் அலேந்தாயோ என்னென்ன கஷ்டப்பட்டாயோ இங்கு நின்ற பாலியன் எங்கே அவன்தான் ஜெகரக்ஷகனே என்னை எவ்வளவு பரியாசஞ் செய்துவிட்டான்.

சமா:—என் நாதா பதராதீர்கள் புத்தியைச் சமாதானப்படுத்துங்கள் நீங்கள் ஜெகரக்ஷகனைக் காணவில்லைப் போயிருக்கின்றதே என் அருமைக் கண்மணியின் கதி எவ்வாறாயிற்றோ ? உட்காருங்கள் கஷ்டமெல்லாம் நீங்குங் காலஞ் சமீபித்து விட்டது. போஜனத்துக் கெழுந்தருளுங்கள் போஜனமாயிற்று; சயனவரைக்குச் செல்வோம் சம்பிரதாயமான வார்த்தைகள் வெகு நேரம் சம்பாஷணை நீ எடுத்திருந்த ஆண்வேடத்தின் சந்தேகம் இன்னும் எனக்கு முற்றிலுந் தெளியவில்லை அப்படியானால் கொஞ்சம் பொறுங்கள் அந்தப் பாலியனைக்கொண்டு வருகின்றேன்.

வித்:—வெளியே போயா நான் எப்படிப்பிரிந்திருப்பேன்.

சமா:—இல்லை ! இல்லை !! இங்கிருந்து கொண்டே நானொரு மந்திரத்தில் வறுத்துகின்றேன் நீங்கள் சற்றே கண்ணை மூடிக் கொள்ளுங்கள். சரி சரி என் கையைப்பிடியாதே யுங்கள் தோளில் கை போடாதேயுங்கள் இதோ வந்து விட்டேன் யார் என் இடுப்பைப் பிடித்துக்கொண்டு யிருக்கின்றது கண்ணைத்திறந்து பாருங்கள் எந்தவூர் ?

வித்:— ஆம் ஆம் இவர் தான் அப்பொழுது இருந்தவர் அடி பாதகி இந்த மாயவித்தைகளெல்லாம் எங்கு கற்றாய்.

சமா:—உங்களிடத்தில் தான்.

வித்:—ஈதெல்லாம் எனக்குத் தெரியாதே.

சமா:—பின்னை யாரெனக்குச் சொல்லிக்கொடுப்பார் என் உடுப்புகளை உங்கள் கையினாலேயே கழற்றுங்கள்.

வித்:—இதோ கழற்றிவிட்டேன் ஓஹோ ! சமாதானி தானேவந்துவிட்டாள் உனக்கு ஆண்வேடம்வெகுபொருந்திக்கையாய்

இருக்கின்றது, நீ ஆணுயிருந்தால் என்னை மணந்து கொள்ள வே மாட்டாய்.

சமா:—நல்ல சமாச்சாரம் ஆணையாண் மணப்பது முண்டோ

வித்:—இல்லை இல்லை வாய்வழுவிச்சொல்லிவிட்டேன் நான் பெண்ணுயிருந்தாலும் என்றதைச்சொல்ல மறந்துவிட்டேன்.

சமா:—சம்பாஷணையால் வெகு நேரம் கழிந்து விட்டது; விடியுஞ்சமயமாகின்றது நாம் இனிமேல் இங்கிருப்பது கூடாது நம் தேசமெப்படிப்போய் விட்டதோ? நாதா புறப்படுங்கள் ஒரு வருமறியாமல் போய் விடுவோம் அங்கு போயிருந்துக்கொண்டு நம் குழந்தையைத்தேட ஆரம்பிப்போம்.

வித்:—பெண்ணே நீ சொல்லுகின்றது சரியல்ல இவ்வரசன் மகளும் சமீபத்தில் மணமுடிக்கும் பருவமாயிருக்கின்முள். சீக்கிரம் விவாகம் முடித்து அவர்களையும் பதிசதியாக்கிவைத்து விட்டு நாம் போகலாம் இத்தேசமும் மகா சீர்கேடான நிலமையிலிருக்கின்றது அதையும் ஒருவாறு ஒழுங்குசெய்து வைக்கலாமென்றெண்ணுகின்றேன். என்ன சொல்கின்ருய்.

சமா:—நாதா தங்கள் சொல்லைத் தடுத்துப்பேச யான் தரமன்று ஆனாலும், இத்தேசமிருக்கும் சீர்கேட்டை என்னுற்சொல்ல முடியாது எத்தனை ஜாதி, எத்தனை மதம், எத்தனை பிரிவு, இதுகளையெல்லாம் ஒழுங்குசெய்ய யாவரால் முடியும் அசாத்தியமான வேலை அப்புறம் தங்கள் சித்தம் என்பாக்கியம்.

வித்:—பெண்ணே அசாத்திய மென்றதொன்று உலகத்தில் கிடைக்கவே கிடையாது முயற்சியினுல் சகலமு முடியும் தன் முயற்சி யென்றொரு புஸ்தகம் ஒருநாளுனக்குக்கொண்டு வந்து கொடுத்தேனல்லவா? அதை வாசித்தாயா?

சமா:—நாதா வாசித்திருக்கின்றேன்; தங்களால் முடியாத காரியம் யாதிருக்கின்றது. அதிலும் நாமிருவரும் சேர்ந்துவிட்டோம் கூடியவரையும் செய்துபார்ப்போம். உலகமாதாவின் சித்

தம்போல் நடப்பன நடக்கின்றது. இச்செய்தியைக் கேள்விப் பட்ட குடிகளெல்லாம் ஏகோபித்து வந்து அரசன் அரசியைவண ங்கி நாங்கள் செய்த தபோ மகிமையே சிலகாலம் சக்கரவர்த்தி னியே வேடந்தாங்கிய அரசனுயிருந்ததும் தற்காலம் சக்கரவர் த்தியே அரசனுய் ஆனதும் என்று பலமுகமன் கூறிச் சந்தோஷ க்கடலிலாழ்ந்து இது செய்தியைத் தேசமெங்கும் பரவச்செய் தனர்.

## 7 வது அத்தியாயம்.

ஒருநாளதிகாலையில் எழுந்து சில சுபகாரியங்களைப் பேசி யபின் ஜெகரக்ஷகன் செய்தியொன்று மெட்டவில்லையேயென்ற கவலையுறும் மனைவியைத்தேற்றி வைத்துவிட்டுச் சற்றிரு யான் போய் காலைக்கடன் கழித்துவிட்டு வருகின்றேனென்றனர். உட னே சமாதானி எழுந்து காலைக்கடன் கழித்தலென்ற வார்த்தை யின் அர்த்தம் என்ன தயவுசெய்து அடியாளுக்கு உத்தரவாக வேண்டு மென்றனள். வித்தியாதரனும் புன்னகைகொண்டு இது கூடவாதெரியாது மலசல விசற்ஜனம் தந்தசுத்தி ஸ்நானம் மெல் லிய உண்டியருந்தல் என்பவைகளே.

சமா:—இவ்வளவு தானு ஆரியர்கள் வேறுவிதமா யல்லவா சொல்கின்றூர்கள் அவர்கள் சொல்லும் கருத்தென்ன ?

வித்:—பெண்ணே ஏன் அந்த மனிதவேட்டைக்காரர் சங் கதிகளை அதிகாலையில் எடுத்தாய் சூரியனை அசுரர்கள் யுத்தஞ் செய்து பிரவேசிக்கவொட்டாமல் தடுக்கின்றூர்களாம்? இவர்கள் அதற்கு மந்திரம் ஜெபித்து விலக்கிவிடுகின்றூர்களாம், என்ன ஞானம் இதையும ஜனங்கள் நம்பிக்கொண்டு தானே அலைகின் றூர்கள் ஆரியரென்ற நாற்றமேயில்லாமல் இம்மந்திரமென்ற வார் த்தையே கிடையாமலிருக்கும்தேசங்கள் அனேகம் இருக்கின் றதே அங்கு சூரியப்பிரகாச முண்டா இல்லையாவென்று யாரா வது கவனித்தார்களா ? கேட்டார்களா ? ஒருவருமில்லை பின்னை எப்படித்தான்ஆராய்ச்சியின் குணம்தேசத்திலுதிக்கும். அவர்கள்

செய்யும் வேலையின் உட்கருத் தென்னவென்றால்; சூரியபகவானே உன்னை நமஸ்கரிக்கின்றோம் உமது பிரகாசத்தினால் ஜனங்களின் முகக்கண் ஒளிகொடுக்கின்றது அதுபோல பேதைஜனங்களின் அகக்கண்களையும் பிரகாசிக்கும்படி செய்துவிடாதேயும் அப்படிச்செய்வீரானால் எங்கள் மோசமெல்லாம் வெளியாய்விடும் அப்புறம் எங்கள் கதி அதோகதியாய்விடுமே. என்றுதான் அவ்வாறு செய்யாதிருக்கும் பொருட்டு வருந்திக் கொண்டிருக்கின்றார்கள்.

சமா:—நாதா எல்லாக்கடனு முடிந்தது தேசவிசாரணைக்குச்செல்வோம்.

வித்:—சந்தோஷம் போகலாம் உன் ஆண்வேடத்தை நோக்குதற்கு எனக்கும் அதிக ஆசைதான்.

சமா:—நான் இன்னும் ஆண்வேடந் தரித்துக்கொள்ளவா? அது கூடவே கூடாது வெட்கமாயிருக்கின்றது. இப்படியேசெல்வோம் பெண்களுக்குச்சுயாதீனம் நம தேசத்திலுண்டாவதற்கு நாம் தானே நடந்து காட்டவேண்டும்.

வித்:—நிரம்பச்சந்தோஷம் புறப்படு. தேசவிசாரணைக்கு வந்துவிட்டோம் இனியென்னசெய்ய யோசிக்கின்றாய்.

சமா:—சற்று கவனியுங்கள், பியூன், சிறையிலிருக்கும்விவேகானந்தரைக் கொண்டுவா. (ஆஜர்) ஓய் விவேகானந்தரே என்பக்கத்திலிருக்கின்றவர் யார்.

விவே:—இவர்தான் தாயே என்கிநேகிதர்.

சமா:—அவரே என்பதியுமானார் சமீபத்தில் வாரும் இவ்வாசனத்திலுட்காரும் உமக்கே நியாயாதிபதி ஸ்தானத்தைக்கொடுக்கின்றோம் செவ்வனே நடத்திவாரும் இதோ அரசமுகருள்ள கணையாழி அணிந்துகொள்ளும் இப்பொழுது நாங்கள்செய்யும் உத்தரவை விளம்பரங்களினாலும் பத்திரிகைகளினாலும் போதகாசிரியர்களாலும் ஸ்கூல் மாஸ்டர்களாலும் சிறுவர்களுக்கும் பெரியவர்களுக்கும் நாடெங்கும் பரவச்செய்யும் உத்தரவு வருமாறு? மோசமில்லாத எவ்வகையான கைத்தொழிலாளிகளையும் ஒவ்வொருவரும் கௌரதையாய் நடத்தவேண்டும் சோம்பேறிகளையும் வேடதாரிகளையும் அரசாங்கத்தார் உத்தரவன்னியில் ஊருக்குள் பிரவேசிக்கவிடப்படாது ஒரு ஜாதிக்குள் மத வித்தியா

சங்களினாலாவது உண்டி உடை அணிவகை களினாலாவது, வித்தியாசங்காட்டாமல் ஒரேதாயின் மக்களைப்போல் நேசிக்கவேண்டும் கொள்ளை, கொலை, முதலிய பெரிய கேசுகள் தவிர, மற்றவைகளெல்லாம் கிராமப்பஞ்சாயத்திலேயே தீர்த்துககொள்ள வேண்டும் பஞ்சாயதது மெம்பர்களை ஆங்காங்குள்ளவர்களே, ஓட்டுக் கொடுத்துத் தெரிந்தெடுத்துக் கொள்ளவேண்டும் தொழிற்சாலை வித்தியாசாலைகளின் பேரில் ஒவ்வொருவரும் கவனம் செலுத்த வேண்டும் ஸ்கூல், பாடங்களில் பொய்க்கதைகளும் பையன்கள் மனம் திகிலுண்டாகும்படியான காணாத செய்கைகளையும் பேய் பிசாசென்று மயங்க வைத்தலையும் போதிக்கவேகூடாது ஆரிய மோச நிவாரணியென்ற புத்தகத்தையும பாடங்களில் சேர்த்துக் கொள்ளவேண்டியது ஆண், பெண், சகலரும் தேகப்பயிற்சிக்கான விளையாட்டுகள் வேலைகள் செய்து பழகவேண்டும் பிரபுஸ்தானங்களிலிருப்பவர்களும் சோம்பேறிகளாய் உண்டுறங்கிக்காலம்போக்காமல் உலகப் பிரயோஜனமான காரியங்களைச் செய்து வரவேண்டும் என்பனவைகளே.

வித்:—பெண்ணே விவேகானந்தன் சாமானியனல்ல, நம்மினும் கெட்டிக்காரன் சரியாய் நடத்திக்கொள்வான் நாம் செல்வோம் வருகின்றனையா ?

சமா:—ஆஹா !! புறப்படுங்கள் தனியரையிலிருக்கின்றோம் நாதா ஜெகரக்ஷகன் கதி எவ்வாறாயிற்றோவென்னும் கவலையால் பாதிக்கப்படுகின்றேன்.

வித்:—பெண்ணே பயப்படாதே மனிதரை மனிதர் சாப்பிடுகின்ற காலம் அனேகமாய் நீங்கிவிட்டது. பிள்ளை எங்குசென்றாலும் பூமியும் மனிதர்களுமாகத்தானே !! இருப்பார்கள் ஆகையினால் அவன் மஹா புத்திசாலி எப்படியாவது வந்துவிடுவான் குழந்தை விஷயத்தில் நீ யொன்றும் கவலைப்படாதே அதோ இரண்டு பெரிய பெண்கள் அனேகம் பெண் குழந்தைகளைவிட்டுக்கொண்டு வருகின்றனர்களே !! நம்மை நோக்கியே வருகின்றாப்போலுமிருக்கின்றன; நான் இங்கே யிருக்கலாமோ போய்விடுகின்றேனா ?

சமா:—நாதா அவ்விதமான பழய ஆசாரங்களைக் கைவிடும் படியாய் நாமே போதிக்கவேண்டிய திருக்க நீங்களே அதைக் கையாடும்படி செய்யவா பார்க்கின்றீர்கள்; இங்குதானேயிருங் கள் வருகின்றவர்களை யான் கவனிக்கின்றேன் வாருங்கள் வாத் திச்சிகளே அரசகுமாரி நன்றாய்ப்படித்திருக்கின்றாளா ?

வாத்தி:—ஆம் தாயே பாஷைத் தேர்ச்சியானதுடன் இருதய க்கவர்ச்சி செய்யும்மெஸ் மெரிசம் என்ற வித்தையையும் சொ ல்லிக்கொடுத்திருக்கின்றோம்.

சமா:—ஓகோ! நீங்களும் மகா சமர்த்திகள் தான் வித்தை யைப்பரிக்ஷிக்கும் பொருட்டாய்ச் சபை கூடச் செய்கின்றேன் எல்லோரும் வந்துவிட்டார்கள் பொதுவாய்ப் பிள்ளைகளை எல்லா ஞ்சோதித்தோம் வெகு தேர்ச்சியா யிருக்கின்றார்கள் எல்லா ரிலும் இனிய வசனியை மெச்சுகின்றேன் இனி மெஸ் மெரிசம் என்ற வித்தையைப் பரிக்ஷிக்கலாமா ? அதற்கு வேண்டிய கரு விகள் என்ன வேண்டும்.

வாத்:—எல்லாம் கொண்டு வந்திருக்கின்றோம்.

சமா:—அப்படியானால் செய்து காட்டுங்கள் சபையிலுள்ள எல்லாரும் பார்க்க விரும்புகின்றனர்.

வாத்திச்சி ஒரு பிரம்பைக் கையிலெடுத்துக்கொண்டு இனி யவசனி எழுந்திரு சபையின் எதிரே வா நீ செய்யும் ஒவ்வொரு வித்தைகளையும் அரசன், அரசிக்கி, நன்றாய்த் தெரியும்படியாய்க் காட்டு. வாத்திச்சி உத்தரவின்படி இனிய வசனி எழுந்து நின்று கொண்டு சபையாரெல்லாரையும் ஒருமுறை சுற்றிப்பார்த்து எல் லாரும் என்னையே கவனியுங்கள் வித்தில்லாத மந்திரம் மேலுமி ல்லை கீழுமில்லை இப்பொழுது நான் செய்யப்போகின்ற வித்தை யாவது முன்காலத்திலே பாண்டிய ராஜனை ஆரிய தந்திரிகளில் ஒருவராகிய மாணிக்கவாசகரென்னும் அமைச்சன் குதிரைவாங் கிக்கொண்டு வருவதாய் ஏமாற்றிப் பணத்தைக் கவர்ந்து கொண் டேகி கோவில், கட்டிவிட்டு அரசன் பணம் கேட்க இவ்வித்தை களால் ஏமாற்றிவிட்டான் அந்த மாதிரி வித்தைதான் இப்பொ

4466.

ழுது நான் செய்யப்போகின்றேன்; ஆரம்பித்து விட்டேன்.

பிரபு !! இதோ பாருங்கள் என்னைக் கவனமாய்ப் பாருங்கள் என் கையிலிருக்கின்ற சிறு புட்டியைத்திறக்கின்றேன்; அதில் என்ன இருக்கிறது.

சபையார்:—நிரம்ப வெட்டுக்கிளிகள் அதாவது விட்டில் பூச்சிகளிருக்கின்றன.

வித்தைக்காரி:—ஏன் பொய் சொல்லுகின்றீர்கள் நன்றாய்க் கவனித்துப்பாருங்கள் நான் நரிகள் கொண்டு வந்திருக்கின்றேன் நீங்கள் ஏன் அப்படிச்சொல்கின்றீர்கள்.

சபை:—ஆம் ! ஆம் அவ்வளவும் நரிகளாகத் தானிருக்கின்றது.

வித்தை:—இல்லை இன்னும் பொய் சொல்கின்றீர்கள் நான் கணக்கிலடங்காத குதிரைகள் கொண்டு வந்திருக்கின்றேன் நீங்களேன் அப்படிச்சொல்கின்றீகள் இதோ திறந்து விடுகின்றேன் பிரியமுள்ளவர்கள் சவாரி செய்யலாம்.

சபை:—ஆம் ! ஆம் ! ஈதென்ன அதிசயம் எத்தனை குதிரைகள் அளவிட முடியாதுபோலிருக்கின்றதே ? வித்தியாதரன் பிரமைகொண்டு இவ்வளவு லக்ஷணமான பரிகளை நான் எங்கும் பார்த்ததில்லையே இளம் பெண்ணே இனிய வசனி இவ்வசுவங்களை விட்டு விடாதே கோடிக்கு மேல் பெறும் போலிருக்கின்றது

வித்தைக்காரி:—பிரபு அப்படியே செய்கின்றேன்; கின்னைகளைப்பந்தி பந்தியாய் கட்டி விடுகின்றேன் ஆற்றில் பிரவாகம் வந்துவிட்டதே என்ன செய்கின்றது எப்படித்தப்புவீர்கள்.

வித்:—ஓ ஹோ !! ஈதென்ன மாயம் பெரு வெள்ளமாகவல்லவா வருகின்றது சமாதானி எழுந்திரு வேறெங்காவது ஓடிவிடுவோம் உடனே ...த்தச்சி எழுந்து பிரபு பயப்படாதீர்கள் தங்கள் கையிலிருக்கும பிரப்பைகொண்டு வித்தைக்காரியைஓங்கி அடியுங்கள்.

வித்:—இதோ அடிக்கின்றேன் ஈதென்ன என்னைத்தானே அடித்துக் கொண்டேன் அப்படியே சபையிலுள்ள எல்லாரும் என்னைத்தான் அடித்தீர்கள் என்னைத்தான் அடித்தீர்கள் என்று சொல்ல ஆரம்பிக்கவே அரசன் திக்பிரமைகொண்டு நிற்கும்பொழுது இனிய வசனி எதிரே வந்து பயப்படாதீர்கள் அதோ நிற்கும் கற்கயம் உங்களை நாடிவருகின்றதல்லவா ? என்ன செய்யுமென்று நினைக்கின்றீர்கள்.

வித்:—திக்கு முக்காடி இனிய வசனி அவ்வத்தியை விரட்டிவிடு விறிடுகின்றதே என்மேல் கையை நீட்டுகின்றதே ஈதென்னவித்தை பிரமை கொள்ளச்செய்கின்றதே.

வித்தை:—பிரபு உங்களை ஒன்றும் செய்யாது அதோயிருக்கின்ற கரும்புக்கட்டுகளை எடுத்துப்போடுங்கள் தின்றுகொண்டிருக்கும் அகஸ்மாத்தாய் பெரியகல்மழையல்லவா வந்துவிட்டது குதிரைகளெல்லாம் இறந்து விடும் போலிருக்கின்றதே பட்டாளத்துக்காகுமென்றல்லவா நினைத்தோம் இனி என்ன செய்கின்றது

வித்:—ஐயோ பாவம் வித்தைக்காரரே இவ்வசுவங்களைக் காக்க வேறுவழியில்லையா ? தேங்காயளவு கல்லாய் விழுகின்றதே எப்படிப்பிழைக்கும்.

வித்தை:— அதோ இருக்கின்ற பெரியமலையைப் பிடுங்கி குடைபோற் பிடித்துக் காத்துக் கொள்கின்றேன் . பயப்படாதீர்கள்; தாங்கள் சப்பாணியாய்ப் போய்விட்டீர்களே ? எப்படி நடப்பீர்கள்.

வித்:— ஐயோ !! வித்தை பார்த்தது போதும் எழுந்திருக்க முடியவில்லையே மாயக்காரரே என்னை நடையுண்டாக்குங்கள்

வித்தை:—என்னுலுங்களுக்கு நடையுண்டாகும் என்றுவிசுவாசித்தால் உங்கள் விசுவாச முங்களை ரக்ஷிக்கும்.

வித்:— அப்படியே விசுவாசிக்கின்றேன் இதோ எழுந்து நடக்கின்றேன்.

வித்தை:— நீங்கள் நடந்து என்ன பிரயோசனம் அம்மா அவர்கள் ஊமையாய்ப்போனார்களே இனியாருடன் பேசுவீர்கள்

வித்:—என் மனைவியா அப்படிப்போனாள் இதோ எதிரேதானே இருக்கின்றாள் கூப்பிட்டுப்பார்க்கின்றேன் சமாதானி! சமாதானி! ஏன் பேசவில்லை ஈதென்ன ஊமைச்சாடை செய்கின்றாய் என்ன விபரீதம் வித்தைக்காரரே என் மனைவியைப் பேசும்படி செய்யுங்கள் நீங்கள் கேட்டதெல்லாம் தருகின்றேன்.

வித்தை:—நீங்களென்னத்தைக் கொடுக்கப் போகின்றீர்கள் அம்மா இறந்தல்லவா போய்விட்டார்கள் இனி என் செய்வீர்கள்.

வித்:—ஈதென்ன பாவம் வேடிக்கை பார்க்கவந்து வில்லங்கத்தில் மாட்டிக்கொண்டாளே சமாதானி! சமாதானி!! ஐயோ மூச்சொன்றுமில்லையே நாடி பேசவில்லையே உள்ளபடியே இறந்துதானே போய்விட்டாள் இனி என்னசெய்வேன் மஹா பாவியாய்ப்போனேனே தெய்வமே !! தெய்வமே என்னுயிர் தரிக்குமா மாயவித்தைக்காரரே மோசஞ்செய்துவிட்டீர்களே ? இனி என்ன செய்வேன் என்று மயங்குகின்றது.

வித்தை:— பிரபு பயப்படவேண்டாம் எடுத்துப் புதைத்துவிடுங்கள் மூன்றும் நாள் எழுப்பித்தருகின்றேன்.

வித்:—இளம் பெண்ணை மூன்று நாள் வரையும் என்னுயிர் தரிக்குமா இப்பொழுதே எழுப்பிவிடவில்லையென்றால் என்கையிலிருக்கும் ஆயுதத்தினால் நானும் இறந்து விடப்போகின்றேன்

வித்தை:—ஏன் இப்படி மயங்கிவிட்டீர்கள் சற்று கவனியுங்கள் டப் டபீர் அம்மா எழுந்திருங்கள் பேசுங்கள் ஐயா பயப்படுகின்றார்கள் வித்தை முடிந்தது எல்லாரும் பாருங்கள்.

வித்:— ஈதென்ன மாய்கை ஒன்றையுங் காணோம் முதல் முதல் வந்தபடிதானே எல்லாரும் நிற்கின்றீர்கள் பரிகளெங்கே யானைகளெங்கே கிரியைக் குடையாய்ப் பிடித்துக்கொண்டு நின்றாயே நன்றாய்ப் பார்த்தேனே பெண்ணே சமாதானி எல்லாம கவனித்தாயா இதைப்பற்றி என்ன சொல்கின்றாய்.

சமா:—ஆம் பிராணநாதா நன்றாய்க் கவனித்தேன் இப்படி வித்தைகளைப் படித்துக்கொண்டு தானே முன்னாளில் ஆரியர்களும் கிருஸ்துவும் உலகத்தை ஏமாற்றி விட்டார்கள் ஆனாலும் ஈதொரு பெரிய அதிசயமாகத்தான் இருக்கின்றது. என்னால் தெளிந்துகொள்ள முடியவில்லை நம் குழந்தை இனிய வசனியைக்கேட்டுத்தான் தெளிய வேண்டுமென்று நினைக்கின்றேன் பெண்ணே அரசகுமாரி சமீபத்தில் வா உட்காரு இதன் விருத்தாந்தங்களை எங்களுக்கு விளங்கும்படி தெளிவாகச்சொல்லு.

இனிய:—அம்மா இது ஒரு மயக்கம் இருதய கவர்ச்சியென்றொரு வித்தை சாமானியர்களும் கற்றுக் கொள்ளலாம். இப்பொழுது நான் செய்து காட்டியதின் விபரம் முதலாவது தங்கள் இருதயத்தைக் கவர்ந்துவிட்டேன் பின்னால் நான் கேட்டதெல்லாம் ஒப்புக்கொள்ளுகின்றீர்கள் இதைத்தவறி இங்கொன்றும் நடந்ததில்லை இவ்வித்தையின் செயல் உலகெங்கும் ஒரு சக்தி அனாதியாய் பரவி நிற்கின்றன அதுவே நம்முடைய இருதயத்திலுமிருக்கின்றது அதைவசப்படுத்தச்சில முறைகளுண்டு அதை தெரிந்துகொண்டால் யாருஞ் செய்யலாம் இந்த சக்தியைத்தான் நம்முன்னோர்கள் பிரமமென்றும் அறிவென்றும் இதை யறிந்துவிட்டால் என்னென்னமோ பெற்றுவிடலாமென் றெண்ணிக்கொண்டு தலைகீழாய்த் தொங்கியும் ஒருகாலில் நின்றும் ஓடியோடியலுத்ததும் இப்பொழுதோ அமேரிக்கர்கள் சொல்லுகின்றது உலகம் நிறைந்த ஒரு இலக்கிற்றிரி அதாவது ஒருபவர் இருக்கின்றதென்று கண்டுபிடித்து வெகு சுளுவாய் வசப்படுத்தி விடுகின்றார்கள். நம்முடைய தேசத்திலும் ஒற்றுமையும் ஆராச்சியின் குணமும் ஏற்பட்டாலல்லவா? இன்னும் அதிசயமான அனேக காரியங்களைக் கண்டு பிடிக்கலாம்.

வித்:—பிரமை தெளிந்து பெண்ணே சமாதானி இவ்வரச குமாரி மகாகெட்டிக்காரியாய் விட்டாள் பருவமடைந்த பெண்ணுமானாளல்லவா? இனி நாம் கவனியாமலிருப்பது கூடாது விவாகாரம்பம் செய்யவேண்டும் பெண்ணின் சம்மதமன்னியில் பெற்றோர்களே வரனை நிச்சயிக்கும் கெட்டவழக்கங்களை உலகத்தார் நிறுத்திவிடும்படியாய் நாமே நடந்துகாட்டவேண்டும் நாளைமுதல் அரசகு

மாரியும் தன் சிநேகிதிகளுடன் விவேகானந்தன் நீதிவிசாரணை செய்யுமிடத்தில் ஒரு முகூர்த்தகாலம் போயிருந்து உலகமிருக்கின்றசெயலும் நியாயஸ்தலங்களில் வருகின்ற விபகாரஙகளும் நியாயாதிபதி சொல்கின்ற தீர்ப்பையும் கவனித்துக்கொண்டு வரவேண்டியது கூடியசீக்கிரத்தில் தகுந்தபதியைத்தெரிந்து சொன்னால்வேண்டிய காரியங்களை தடையில்லாமல் முடித்துவைக்கலாமென்று நினைக்கின்றேன் அதைப்பற்றி நீயென்ன சொல்கின்றாய்.

சமா:—தாங்கள் சொல்வது நிரம்பச்சரி குழந்தையையும் கேட்கின்றேன் அம்மா! இனியவசனி இப்பொழுது பேசிய காரியங்களைக்கவனித்தாயா ?

இனி:—ஆம் தாயே! கவனித்தேன்.

சமா:—வாத்திமைப் பெண்களே உங்களுக்குவேண்டிய சன்மானம் அளிக்கும்படியாய் கஜானாவுக்கு ஆடர் செய்திருக்கின்றோம் பெற்றுக்கொள்ளுங்கள் போய்வருகின்றீர்களா ?

வாத்தி:—வந்தனம் தாயே போய் வருகின்றோம்.

வித்:—பெண்ணே சமாதானி விவேகானந்தன் வருகின்றானே முகம் சந்தோஷக்குறி காட்டுகின்றதே.

விவே—பிரபு வந்தனம் தங்களுத்தரவின் பிரகாரம் நியாய விசாரணை நடத்திவருகின்றேன் தேசம் அனேகமாய் திருந்திவிட்டது தற்சமயம் ஒருஜாதியிலுள்ளவர்கள் மதங்களினாலாவது தொழில்களினாலாவது வித்தியாசங்காட்டாமல் அன்யோன்யமாய் ஒத்துண்டுளேக்கின்றார்கள் தொழிற்சாலைகள் வித்தியாசாலைகள் வெகு ஒழுங்காய் யாவராலும் கவனிக்கப்படுகின்றனசோம்பேறிகளுக்கு சோறாட்டல் முற்றிலும் நின்றுவிட்டது கிராமப் பஞ்சாயத்துகள் வெகுதிட்டமாய் நடந்தேறிவருகின்றன இன்னும் சீர்திருத்தங்களுக்கான மருவுத்தரவையும் ஜனங்கள் எதிர்ப்பார்த்து ஆவலுடன் காத்திருக்கின்றனர்.

வித்—நிரம்பச் சந்தோஷம் இன்னும் சில திருத்தங்கள் செய்யவேண்டியதிருக்கின்றன நாங்களிடும் உத்தரவுகளை நிறைவேற்றுவதில் தாமும் அதிக சிரத்தையுள்ளவராய் இருக்கும்படி கேட்டுக்கொள்ளுகின்றேன்.

உத்தரவு வருமாறு

ஒரே பாஷையைப்பேசும் எல்லாசன சமூகங்களும் மதவித்தியாசங்களினாலாவது தொழில் வித்தியாசங்களினாலாவது உண்டி உடை வித்தியாசங்களினாலாவது வேற்றுமைபாராட்டவேகூடாது சகலரும் எவ்வகையான ஆபரணங்களும் தரித்துக்கொள்ளப்படாது போஜனச்செலவுகளை அதிகப்படுத்தி சத்தான வஸ்துக்களையே உபயோகிக்கவேண்டியது புருடபாரிய பாலகர் வரை அதிகாலையில் தவறாமல் ஸ்நானஞ் செய்யவேண்டும் ஒவ்வொருவரும் சுத்தமான வஸ்திரங்கள் கட்டவேண்டியது அறிவைப்பேதிக்கச்செய்யும் எவ்வகையான வஸ்துக்களையும் உபயோகிக்கப்படாது ஆடவரில்லாமல் குழந்தை பெறுவோர்களையும விலை மாதர்களையும் விசாரணை யன்னியில் தேசப்பிரஷ்டம் செய்துவிடப்படும் அரசாங்கச்சிலவிலேயே சகல பாஷை வல்லுநர்களையும் வைத்துக்கொண்டு எந்தத்தேசத்திலேனும் எந்தப்பாஷையிலேனும் அபூர்வமான பூகோள ககோள கணித ரசாயன கைத்தொழில் முதலியன வரைந்துள்ள சாஸ்திரங்களிருப்பதாய்க் கேள்விப் பட்டவுடனே தருவித்து தேசபாஷையில் மொழிபெயர்த்து ஸ்கூல் பாடங்களாய் ஏற்படுத்தி விடவேண்டியது; வித்தியா வல்லவனாய் மகா புத்திசாலி யாயுள்ள பாலியன் அன்னிய தேச சஞ்சாரஞ் செய்து வரவிரும்பினால் சகல செலவும் அரசாங்கத் திலிருந்தே கொடுத்தனுப்ப வேண்டியது இவ்வுத்தரவுகளை முன் பரவச்செய்த முறைப்படியே தேசமெங்கும் வெளியிடவேண்டியது நியாய விசாரணையில் தராசென நின்று நடத்திவைக்கும் படியாய்க்கேட்டுக்கொள்கின்றோம்.

## 8 வது அத்தியாயம்.

விவேகானந்தன் நியாயஸ்தலத்திலுள்ள சகல வேலையாளர்களையும் கூட்டிவரும்படி செய்து தான் எழுந்து நின்றுகொண்டு சபையார்களே !! நியாயாதிபதி என்னும் இப்பெரும் பாரத்தை

கன் தலையில் தூக்கிவைத்து விட்டார்கள் இப்பளுவான சுமையுடன் நான் செல்லும்பாதையோ செங்குத்தான மலையின்ஏற்றம் அதிலும் பொய்வழக்கென்னும் வழுக்கல், அறியாது விடுதல் என்னும் நித்திரை, லஞ்சமென்னும் பேய், அஜாக்கிரதை என்னும் கடுவாய் தாக்ஷண்யமென்னும் பாம்புகள், இத்தியாதி யாபத்துகளுமுள்ளது.

இவைகளையெல்லாங் கடந்து செல்லவேண்டியவனாயிருக்கின்றேன் ஆகையால் நீங்களும் என்பேரில் கண்ணோக்கமாயிருந்து ஆபத்துகளில் சிக்கிக்கொள்ளாமல் வேண்டிய உதவிசெய்வீர்களென்று நிச்சயமாய் நம்பி உங்களை மன்றாடிக் கேட்டுக்கொள்கின்றேன். உலகமாதாவே உனக்குமகிமையுண்டாகும்படியாய் இவ்வேலையைச் செய்ய வாரம்பிக்கின்றேன். நீயே என்னிருதயத்திலிருந்து நடத்தும்படியாய்ப்பிரார்த்திக்கின்றேன். விசாரணையைத் துவக்குகின்றேன்

## பியூன் கேசுகளிருந்தால் கூப்பிடு.

## ஆஜர்.

நியாயாதி—நீங்களெந்தவூர் என்ன வியகாரம் சீக்கிரம் சொல்லுங்கள்.

வாதிகள்-பிரபு நாங்களிருப்பது குடகு ஆசாரிகள் எங்களை அவ்விடத்திலுள்ள ஆரியர்கள் கோவிலுக்குள் நுழையப்படாதென்று இம்சிக்கின்றார்கள் அதை விசாரித்து நியாயம் கிடைக்கும் படியாய் பிரார்த்திக்கின்றோம்.

நியா—வாருங்கள் ஆரியர்களே! வாதிகள் சொல்லுகின்ற வியகாரம் உண்மைதானா? நீங்களேன் அப்படிச்செய்கின்றீர்கள்.

ஆரி—இது எங்களப்பன் அவாளப்பன் காலத்திலேற்பட்டதா பரம்பரையாய் வழக்கம்.

நியா—இதைத் தவிர வேறு நியாயம் சொல்லமுடியாதோ?

ஆரி—சொல்லமுடியாது,

நியா—நான் சொன்னால் ஒப்புக்கொள்ளுவீர்களா ?

ஆரி—சாஸ்திரசம்பந்தமாய் சொன்னால் ஒப்புக்கொள்வோம்

நியா—நீங்கள் நுழையவேண்டாமென்று சொல்லுகின்றகோவிலையும் உள்ளிருக்கும் விக்கிரகங்களையும் உண்டாக்கியது யாரென்று தெரியுமா ?

ஆரி—அது எங்களுக்குத் தெரியாது.

நியா—யாவரால் உண்டாக்கப்பட்டிருக்குமென்று நினைக்கின்றீர்கள்.

ஆரி—கம்மியர்களாலேதான் உண்டாக்கப்பட்டிருக்குமென்று நினைக்கின்றோம்.

நியா—அப்படியானால் படைத்தவனுக்கில்லாத பாத்தியம் உலகிலுண்டா? பின்னை ஏன் இவர்களைப் பரம்பரையாய் உள்விடாமல் வைத்திருந்தார்களென்று கேட்பீர்களானால் உங்கள் முன்னோர்களின் நோக்கம் இவர்களை உள்ளேவிட்டோமானால் நாமடித்துக் கொடுத்த கல்லைத்தவிர வேறேயொன்றையுங் காணோமே யென்று பேதைச்சனங்களுக்கெல்லா மிந்தக்குட்டைச் சொல்லி நம்முடைய மோசத்தை வெளியாக்கி விடுவார்கள் அப்பால் நம் பிழைப்புக்கே கெடுதல் வந்து விடுமென்று நிச்சயித்தே உங்கள் முன்னோர்கள் அங்குள்ள அரசனை வய்த்து இவ்வாறு செய்துவைத்த தந்திரங்களைத்தவிர வேறு ஏதுக்கள் ஏதாகிலுமுண்டா ? இருந்தாலுஞ் சொல்லுங்கள்,

ஆரி—பிரபு அப்படிசொல்லப்படாது இவர்கள் அடித்த கல்லில் என்ன இருக்கின்றது எல்லாமெங்கள் மந்திரசக்தியினாலேயே ஆடுகின்றது இன்னும் எங்கள் மந்திரத்தைசெபிப்போமானால் உலகத்தை எல்லாம் பஸ்மீகரம் செய்தாலும் செய்வோம் இரக்ஷித்தாலும் இரக்ஷிப்போம்.

நியா—நல்லவேளையில் இன்று சூரியன் உதயமானது தற்காலம் வித்திய விரோதி யரசன் சைனியங்களுக்கும்நமதரசன் சேனை

களுக்கும் போர் நடக்கின்றது தெய்வானுகூலத்தால் நீங்களும் வந்து சேர்ந்தீர்கள் அரசனுத்தரவுப்பிரகாரம் உங்களையங்கனுப்புகின்றேன். தயவுசெய்து உடனே அங்கு சென்று எதிரிகள் சயினியங்களைப் பஸ்மீகரம் செய்துவிட்டு வரும்படியாய் வேண்டிக்கொள்ளுகின்றேன் சீக்கிரம் புறப்படுங்கள்.

ஆரி—அனேகமாய் அப்படியே செய்துவிடுவோம் ஒருவேளை பலிதமாகாமல் போய்விட்டால் யாதாகிலும் கண்டனை தண்டனைகள் எற்படுமோவென்று சந்தேகிக்கின்றோம்.

நியா—யாதொரு சந்தேகமும் வேண்டாம். பலிதமானல் இவ்வரசு உங்களுடையதே பலியாது போனல் பட்டாளத்திலேயே பீரங்கிகளிருக்கின்றது அதன் வாய்வழியே எற்றிப் பொன்னுலகம் அனுப்பி விடுவார்கள் அப்பாலவ் வுலகத்தரசு உங்களுக்கே வாய்க்கும் இருவகையிலும் உங்களுக்கு இலாபமே இருக்கின்றது சீக்கிரம் புறப்படுங்கள். காலதாமதஞ் செய்யாதீர்கள்.

ஆரி—இதென்ன பெருமோசமாயிருக்கின்றது இதற்கென்ன யுக்தி செய்கின்றது சற்று மவுனமாயிருந்து பின்னும் துணிந்து சொல்லுகின்றார்கள். அப்படியெல்லாம் போகமுடியாது முன்னிருந்த பெரிய மந்திரங்களெல்லாம் மறந்துவிட்டது ஆனையினலே வந்த விவகாரத்திற்கு மாத்திரம் பைசல் செய்யும்படியாய்க்கேட்டுக்கொள்கின்றோம்.

நியா:—ஐயோ பாவம் என் அப்படிப்பெரிய மந்திரங்களையெல்லாம் மறந்துவிட்டீர்கள்.

ஆரி:—இந்தக்காலம் என்னத்திற்கு அவ்வளவு பெரியமந்திரமென்று அலக்ஷியமாய் விட்டுவிட்டோம்.

நியா:—அப்படியா? போனல்போகட்டும் சம்பியர்கள் அடித்து வைத்த கற்களையெல்லா மவர்களே இடித்து எடுத்துக்கொள்ளட்டும் உங்கள் மந்திர சக்தியினல் நிறுத்தக்கூடியதை நிறுத்திக்கொள்ளுங்கள்.

ஆரி:—அப்படியானால் விக்கிரகத்தையும் எடுத்துக்கொள்ளுவார்களா?

நியா:—அதிலென்ன சந்தேகம் விக்கிரகமுங்களப்பணடித்தது.

ஆரி:—பிரபு சற்று யோசித்துச்சொல்லுகின்றோம் கொஞ்சநேரம் லீவு கொடுக்கும்படியாய் பிரார்த்திக்கின்றோம்.

நியா:—அப்படியே செய்யுங்கள்.

ஆரி:—அடே சேசு சுப்பு சமென்ன பெருமோசமாயிருக்கின்றது பிழைப்புக்கே மோசமல்லவா வந்துவிட்டது; இத்தனை தொல்லை எதுக்கு அவர்களும் சித்தூர் ஜில்லாவில் கன்னைப்பிராமணரென்று தீர்ப்பு வாங்கித்தானே வைத்திருக்கின்றார்கள் நமக்கென்ன முழுகிப் போய்விட்டது கோவிலுக்கு வா போவென்று சொல்லிச் சமாதானமாய்ப் போனாலென்ன அவர்களும் இரண்டு தேங்காய் பழமாவது கொடுக்கமாட்டார்களா! அகப்பட்டது லாபந்தானே எல்லாரும் அப்படித்தான்நினைக்கின்றோம் ஆசாரியவாள் வாருங்களேன் சமாதானமாய்ப்போவோமே ஏன நாம் ஓர் தேசத்திலுள்ளவர்கள் வீணாய் விபகாரஞ் செய்துகொண்டோம் வேண்டாம வாருங்கள் சமாதானமாய்ப்போவோம் பிரபு சமாதானமாய்ப்போகின்றோம்.

நியா:—மிகுந்த சந்தோஷம் நானும் சமாதானத்தையே விரும்புகின்றேன்; ஆரியர்களே உங்கள் மோசத்தை வெளியிடுங்கள் இன்னும் கையாடி வருவீர்களானால் உலகம் நசித்துப் போகும் அப்பானுங்கள் கதியும் நிஸ்கதியாகவே முடியும் எப்படியாவது பழைய மோசவலையை எறிந்துவிட்டு உலகத்தை ரக்ஷிக்கும்படியான வழியைத் தேடுங்கள் நீங்கள் ஒருவருப்பார் பிழைக்கும் பொருட்டு உலகமுழுவதையும் கெடுத்துவிடலாமா தனித்தனியே கூடி யோசியுங்கள்; நன்மையைக் கடைப்பிடியுங்கள் சரிபோய் வாருங்கள் தங்களுக்கு என்தன்பான வந்தனம்.

**பியூன் வேறு கேசுகளிருந்தால் கூப்பிடு.**

**ஆஜர்.**

நியா:—நீங்களார் எவ்வூர்? என்ன விபகாரம் கொண்டு வந்தீர்கள்.

வாதி:—ஐயா!! நாங்களிந்தத்திராவிட நாட்டிலுள்ள வன்னிய ஜாதியார் எங்களைக்கேரள நாட்டினுட்பிரவேசிக்கப்படாதென்று அன்னாட்டிலுள்ள ஆரியர் தடுக்கின்றனர் அதை நிவர்த்திக்கும்பொருட்டு தாழ்மையாய்க்கேட்டுக்கொள்கின்றோம்.

நியா:—உங்கள் பரம்பரையான குலமுறையின் விபரம் உங்களில் யாருக்காவது தெரியுமா?

வாதி:—தெரியும்.

நியா:—தெரிந்தால் சொல்லுங்கள்.

வாதி:—ஐயா!! முன்காலத்தில் பாஷை வித்தியாசங்களால் பிரிக்கப்பட்ட தேசங்களில தமிழரசு மூன்று அதில்சேரன் அக்கினி குலத்தவனும சோழன், சூரிய குலத்தவனும், பாண்டியன், சந்திர குலத்தவனுமாக ஆண்டுவந்ததில் நாங்கள் சேரனுடைய வங்கிஷத்தார் அது காரணம்பற்றியே எங்களுக்கு நாளதுவரை வன்னி அதாவது தீ. அக்கினி யெனக் குறிப்பறியும்படிக் கான வன்னிய குலத்தவரென்றே அழைக்கப்படுகின்றோம் ஆதியினீற்றிலிருந்த எங்கள் குலத்திறைவனுக்கு ஆண் சந்ததியில்லாது ஒரு பெண் சந்ததியை விட்டிறந்துபோக அப்பெண்ணுக்கு எங்கள் குலத்தவரில் ஆடவரைப்பொருந்த நியமன மிட்டிருக்குங்காலத்தில் ஆரியதந்திர மேனாடி உலகமெல்லாங் கெட்டுவருஞ்சமயமாயிருந்தபடியால் மணங்குறித்த பெண்ணை ஒரு ஆரியன் வசம்பண்ணி மணந்துகொண்டான் அக்காலத்திலிருந்த எங்கள் சந்ததியார் பெரும் பொறுமைகொண்டு வாதிட்டனர் உலகெலாம் ஆரிய தந்திரத்தில் ஆழ்ந்துகிடந்ததினால் எங்கள் கை இளைத்துத்தோற்றுப்போனோம். மேலாடியவர்கள் எங்களைச் சென்னதேசத்திலுங்கூடக் குடியிருக்கவொட்டாமல் துரத்தி எங்கள் பாஷையையும் மாற்றி வேறச்சரங்களும் ஏற்படுத்திவிட்டார்கள் இன்னும் தங்கள் சொந்ததேசமல்லவென்றகுறிப்பறியும்படி. தங்கள் பெந்துவுக்குறித்த சந்ததிகளுக்குச் சர்வபாத்தியதையுமில்லாமலே

அரசு வகித்து வருகின்றார்கள் எங்களை யுட்பிரவேசிக்க வொட்டாது தடுக்குங்காரணமும் இன்னு மொருவேளை வேருன்றிவிட்டால் பழைய ஞாபகம் வந்து ஒருவாறு நம்மைத் துடர்வார்களென்ற நோக்கமேயன்றி வேறு க்ருத்துளதா யறியோம் சர்வநீதியும் பொருந்திய தங்கள் காலத்திலாவது எங்களுரிமையைப் பெறலாமென்று வழக்காடுகின்றோம் அதாவது எங்களுக்கு அரசுப்பாத்தியம் வேண்டியதில்லை இந்நாட்டா ரிவர்களென்ற ஒரே பாத்தியந்தான்வேண்டும் இதுபற்றி ஏழைகள் பேரில கிருபை செய்யும்படியாய் மன்றாடுகின்றோம்.

நியா:—உங்களுக்குள் எல்லாரும் ஒற்றுமையாயிருக்கின்றீர்களா?

வாதி:—இல்லை பலபிரிவு பட்டுத்தானிக்கோலமானது.

நியா—உங்களினத்தை ஒற்றுமை செய்துகொள்ள ஏலாத நீங்கள், எவ்வளவோ காலத்துக்கு முன்னிழந்த பாத்தியதையை எப்படியடைய முடியும்; முதலாவது உங்களினத்தாரிவ்விடத்திலெங்கெங்கிருக்கிறார்களோ, அவர்களையெல்லாம் ஒருங்கே சேர்த்து வீணான ஆரியதந்திர விக்கிரகாராதனை, (கோவிலிடித்தல்) சோம்பேறிகளுக்கன்னமிடல் முதலிய வீண் செலவுகளை யொழித்துப்பொதுப் பண்டு சேர்த்து அங்கங்கே வித்தியாசாலைகள் தொழிற்சாலைகளமைத்துப் பெரும் பணந்தேடிப் பாஷையொற்றுமைகாட்டி முன்னுக்கு வருவார்களானால், இந்த அற்பப் பாத்தியதை எதற்குதவுமென்று நீங்களே வெறுத்து மேலான காரியங்களிலிச்சை வைத்து இஷ்டசித்தி பெறுவீர்களென்று நிச்சயமாய் நம்புகின்றேன்; இன்னுமொன்று சொல்கின்றேன் யூகித்துக்கேளுங்கள். உங்கள் ஜென்ன தேசத்திலேயே நங்குலப்பெயரொழியா ளாயமிட்டு ஒரு வகுப்பா ரிருக்கின்றார்களே !! அவர்கள் உங்களுக்குத்தெரியுமா ?

வாதி—தெரியாது.

நியா—நான் சொல்லி வருகின்றேன்; பொதுநின்று நோக்கு

ங்கள் தீயரென்றிருக்கின்றார்களே! அவர்கள் யாவர்? அப்பெயர் அவர்களுக்கு வந்த காரணம் என்ன? தீ-வன்னி, (அக்கினி) தீய ரென்றால், வன்னியரென்ற பெயரல்லவா? மருவிநிற்கின்றது.

வாதி—தாங்கள் சொல்லுகின்றவர்கள் பனையேறிகளல்லவா நாங்கள் வேறு அவர்கள் வேறு.

நியா—உங்கள் குலவரசன் கொடியு மாலையுமின்ன தென்று தெரியுமா?

வாதி—தெரியும், பனைக்கொடியும், பனைமாலையுமே.

நியா—அப்படிச்செய்து கொண்ட காரணம் என்ன?

வாதி—அவ்விருத்தாந்த மெங்களுக்கு விளங்கவில்லை.

நியா—ஆதியிலின்னாட்டில், பயிரிடுந்தொழில்தெரியாது, அக் கால முங்கள் முன்னோர்களா லுணவுப்பொருளாய் ஏற்படுத்தப் பட்டது, தென்னை, வாழை, அமுத உற்பத்தி முதலியவைகளே அதுகாரணம் பற்றியே, நாளதுவரை உங்கள் முன்னோர் புதைக் கப்பட்ட இடத்தில் பூசனைப்பொருள்களாயுபயோகப்படுத்துவது தேங்காய், வாழைப்பழம், முதலியதைச் சகசமாயும், அமுதம், சைவாகமிகளாலருவருக்கப்பட்டதால் தேனாவது சுத்தசலமாவது உபயோகிக்கிறார்கள். முற்காலம் மதுவுற்பத்தி செய்வதே தேசா சாரம். அதிற்பேறு பெற்றவன் சேரனும், பாண்டியனும். ஆனாலு ஞ்சேரன் பனையைமாத்திரம் வைத்துக்கொண்டான். பாண்டியன் தென்னை விருட்சத்தை அதிகமாயுபயோகப்படுத்தியதால் தென் னவனென்னும் பெயரும் பெற்றுத்தன்னாட்டில் வழங்கும் நாண யங்களிலெல்லாம் தன் குலவிருக்ஷத்தை யமைத்திருக்கின்றான். அஃதோதப்புகின் விரியும். நீங்களும் பிழைக்க வழிதேட முயலு வீரேல், உஙகள் பெயர்ச் சார்பினையடைந்தும், நும் முற்பிதாக் கள் தொழிலைக்கைவிடாது வரும். உங்கள் ஜெனனதேச வாசி களையுமொன்றுபடுத்தி மேலே கூறிய வித்தியாசாலைகளேற்படுத் திப் பொதுப் பண்டுகளுள்ளவராய்ப் பெருஞ் ஜனத்தொகையாய் உயர்நடையாளராய் வருவீரேல், உலகசுகமெல்லாம் உஙகள் கை

வசம் வழியவந்துசேரும். ஆகையினால் இப்போதாரம்பித்தவின் வாதங்களையொழித்து உங்களின்த்தை ஒற்றுமைப்படுத்துவதே கருமமாயெழும்புங்கள். க்ஷேமகாலம் சீக்கிரம் வந்துவிடும். இப்பொழுது நீங்கள் கொண்டுவந்த வியாச்சியம் தள்ளிவிடப்பட்டது.

## வேறு கேசுகளிருந்தால் கூப்பிடு.

## ஆஜர்.

நியா—நீர்யார்? எந்தவூர்? என்ன விபகாரம்.

வாதி:—யானிருப்பது பாம்பே. என் பெயர் கோபால்ஜீ. எனக்கு ஆதிசிவன் செட்டியாரிடம் வரவேண்டிய ரூபாய் ஒரு லக்ஷத்து எண்பதினாயிரம் ஆ. கோர்ட்டில் பிரியாதுசெய்து தீர்ப்பாக்கி வைத்திருக்கின்றேன். சப்தி செய்ய எவ்வகைப்பட்ட சொத்துங்கிடையாது. வாரண்டில் பிடித்துக்கொண்டு வந்திருக்கின்றேன். இங்கு நல்ல நியாயம் கிடைக்கிறதென்று கேள்வி. ஏதாகிலுமொருவாறு தீர்த்துவிட்டால், அகப்பட்டதைப் பெற்றுக்கொண்டு போகலாமென்று பிரியாது செய்துகொண்டேன். ரிக்கார்டுகளுமித்துடன் தாக்கல் செய்திருக்கிறது.

நியா:—ஆர்காணும் செட்டியாரே!! இங்கே வாரும். எதிரி கேட்கும் வியாஜ்ஜியத்தைப்பற்றி என்ன நியாயம் சொல்கின்றீர்.

செட்:—சிவ, சிவ, சிவ, சிவா, அப்படிப்பெரிய இழவு வழக்குகள், எத்தனையோ இருக்கின்றது. எனக்கொரு இழவுந்தெரியாது. அதோ நிற்கின்ற சோமாசுபட்டர் மகன்தான் காரியஸ்தன் அந்த இழவு கொடுப்பானைக்கூப்பிட்டுக்கினு கட்டியழுங்கோ!! சிவ, சிவ, சிவ, சிவா, நான் போயித்து வருவனு. சிவ சிவ சிவ, சிவா.

நியா:—ஐயோ பயித்தியக்காரப்பேதைச் சனங்கள் அந்தப் பாவிகள் கையில் சிக்கிக்கொள்ள, இக்கதியாக்கி விட்டார்கள். ஆர்காணும் காரியஸ்தர்!! இதைப்பற்றி என்ன நியாயம் சொல்கின்றீர்.

கா—ஐயா எங்கள் முதலாளியினுடைய சொந்த முதல் ஒரு லக்ஷ ரூபாயுள்ளது. இவருக்குக் கடைகள், பாம்பே, கல்கட்டா, கொழும்பு, கண்டி, கம்பளை, மதுரை, சென்னை, பினங்கு, சிங்கப்பூர், ரெங்கோன், ஆவா, மாண்டலே, இவைகளில் எட்டாபீசும் இன்னும் அனேகம், பிராஞ்சாபீஸ்களுமுண்டு. இதுகளிலொன்றுவது, இவருக்குத்தெரியாது. இவருடைய முயற்சிகளெல்லாம் கோயில கட்டுவதே. அளவிடப்படாத தருமத்தைத்தேடிக்கொண்டார். இராமேஸ்வரம், மதுரை, சிதம்பரம், திரு ஆனைக்கா, ஸ்ரீரங்கம், சுழிகை, கதிர்காமம், பழனி, சீர்காழி, காசி, கன்னியாகுமரி, கருவூர், திருவண்ணாமலை, குற்றாலம், பாபவினாசம், நெல்வேலி, செந்தூர், கழுக்குன்றம், வாதவூர், கருவை நல்லூர், தென்காசி, கொடிமுடி, புவனம், சுவாமிமலை, பரங்குன்றம், முதலான ஸ்தலங்களில் எட்டாபீசாகவும் இதனுள் அநேக ஸ்தலங்களையும் ஒன்றரைக்கோடி ரூபாய் செலவிட்டுக்கட்டி முடித்திருக்கின்றார். கணக்கில்லாத அன்னசத்திரங்கள் கட்டி பிராமணபோஜன புண்ணிய கைங்கரியஞ்செய்து மிருக்கின்றார். மோக்ஷ சாம்பிராஜ்ஜியத்தில் பாதி இவருக்கென்றுதான் ஆரியவேதம் முறையிடுகின்றது

நியா—நல்லது மனிதர்கள் பார்க்கக்கூடாத வேதத்தில் சொல்லியபடி மோக்ஷசாம்பராஜ்ஜியத்தில்பாதிக்குச்சொந்தமானவன் வாரண்டில் பிடிபட்டிருக்கிறானே, இதிலும் முக்கால் முழுவாசிக்கு சொந்தமென்று வொருக்கால் ஆரியவேதம் முறையிடுகின்றதோ.

காரி:— இதற்கெல்லாமா, வேதத்திலிருக்கும்; உலகத்தில் கஷ்டப்படுவதெல்லாம், மோக்ஷம் பின்னால் கிடைக்குமென்ற அறிகுறிதானே? அஃதிருக்கட்டும்; அவரைப்போன்ற புண்ணியவான்களுக்கல்லவா அதுதெரியும். இவ்வியாச்சிய விஷயத்தைப்பற்றி, நாங்கள் யோசித்திருந்தது இரண்டு கோடி ரூபாய்க்கு இன்சால்வெண்டு கொடுத்துவிட்டு பெரியசெட்டியாரைப் புதுச்சேரிக்கனுப்பிவிடலாமென்று யோசித்திருந்தோம். அதற்குள்ளிந்தப் பாவி, வாரண்டில் பிடித்துக்கொண்டான். என்ன கதியடைவானோ! சர்வபரனுக்குத்தான் தெரியும். செட்டியாரவர்களோ, மகாஞானி, சிவபக்தியில் சிறந்தவர், தங்கள் பார்வையிலேயே தெரியவில்லையா ?

நியா:—நன்றாய்த்தெரிகிறது. முழுப்பயித்தியக்காரனென்று நீரே உங்களினத்தாருக்கு உதவியாயிருந்து, இத்தன் தந்திரமுஞ்செய்துவிட்டவர்போல் தோன்றுகின்றது. செட்டியார் இன்னும் உம்மைத்தான் கட்டியழச் சொல்கின்றார். உம்மை இன்னது செய்கிறதென்று எனக்குப் புலப்படவில்லை. நீர்போம் செட்டியாரே !! இங்கே வாரும்; உமக்கு மூளை யிருக்கின்றதா ? இல்லையா? உலகத்தில் கால் பங்கு ஜனம் தொழில் கிடையாமல் வருந்தி பட்டினியால் சீவன் விடும் இக்காலத்தில், கோடிக்கணக்கான பணங்களைச்செலவிட்டு எத்தனை கோவிலை, இடித்தீர்கள் ? காட்டில் கிடைக்கும் கல்லைத் தூக்கி ஒன்றின் மேலொன்று யடுக்கி, உள்ளே ஒரு கல்லை நட்டுவைத்தால், எப்பிரயோசனம், என்ன தருமம்? ஐயோ பாவிகாள் !! நீங்கள் செய்த கொடிய பாவத்தின் பலனை உடனேயடைந்து விட்டீர்களல்லவா ? தொழிலில்லாமல் பட்டினியாலிறந்த ஜனங்களின் பாவம் உங்களையல்லவா சேர்ந்துவிட்டது. நம்தாய் இரக்கமுற்று நாம் பிழைக்கவேண்டி தன் சரீரத்திலுள்ள சத்தியாகிய பொருளை உங்களிடத்தில் கொடுத்தால், அதைக்கொண்டு ஒருவரையொருவர் காப்பாற்றி தாய் கொடுத்த முதலையும் விருத்தி செய்வதல்லவா நல்லபிள்ளைப்பேறு ? ஐயோ அறிவில்லாப் பேதைகளே" வீணாய்ச் செலவிட்ட இந்தப் பணத்தைக்கொண்டு எத்தனை கல்விச்சாலைகள் வைக்கலாம். எத்தனை தொழிற்சாலைகளமைக்கலாம். எத்தனை கோடி சனம் பிழைக்கும்; முதலழியுமா ? நம் தேசத்தைத் தரித்திரம் எட்டிப்பார்க்குமா !! இதற்குள் இந்திரலோகம் போற் செழித்து எத்தனை தேசம் நம்மை பார்த்துப் பிழைக்கும். அறிவு முதிர்ந்த இக்காலத்திலும் பழைய கந்தல் புராணங்களைப்பார்த்தா தருமஞ்செய்கிறது ! அறிவாளிகளே !! பதினெண்புராணங்களையும் சோதித்துப் பார்த்தீர்களா ? ஒன்றுக்கொன்று சம்பந்த மிருக்கின்றதா ? ஒன்று சொன்னதுபோல் மற்றொன்றிலிருக்கின்றதா ? ஒரே புராணத்திலாவது முன் சொன்னதற்குப் பின்சொல்கின்றது ஒற்றுமையாயிருக்கின்றதா ? இதையெல்லாம் யோசிக்கப்புகின், ஒருவரிருந்தவிடம் மற்றவருக்குத்தெரியாமல் அவரவரிஷ்டம் போலச் சொல்லி பேதைச்சனங்களை ஏமாற்றி இருக்கின்றார்களா? உலகரக்ஷிப்புக்கான ஏதுக்கள் ஏதாகிலு மிருக்கின்றதா ? என்னென்னத்தைச்

சொல்கின்றது ஓய் கோபால்ஜீ ! இவரையும், யாரையோ கூப்பிடு கின்றீரே அவரையும் சேர்த்துக்கொண்டு போய் ஜெயிலில்போட்டு இன்னும் கொஞ்சம் பாக்கி யிருக்கின்றதையும் ஆறுமாதத் திற்குள் கொடுத்து அனுப்பிவிடும். போம்போம் நல்லநபர் பார்த் துக் கடன் கொடுத்தீர். கேஸ் தள்ளுபடி.

## வேறு கேசைக் கூப்பிடு.

### ஆஜர்.

நியா:—நீங்களார் ? எந்தவூர் ? என்ன விபகாரம் ?

வாதி:—ஐயா! நாங்கள் கோவைசியர், இருக்கின்றது அமுத புரி. நெடுங்காலமாக மாணிக்கம் விற்கின்ற திருவிழாவை நாங்களே நடத்திவந்தோம். தற்சமயம் காவைசியர்கள் தாங்கள் தான் உரித்தானவர்கள் என்றும், திருநாள், தங்களுடைய தென்றும் வாதிக்கின்றார்கள். கிருபைசெய்து எங்களிலுள்ள நியாயத்தைக் கண்டுபிடித்து தீர்ப்புச் செய்யும்படியாய்ப் பிரார்த்திக்கின்றோம்.

நியா:—பிரதிவாதிகளே !! இதற்கென்ன சமாதானம் சொல் லுகின்றீர்கள் ?

பிரபு ! ஆதிகாலத்தில் மனிதரில் வித்தியாசம்இல்லாமல் எல் லாமொன்று யிருந்ததை, பின் ஆரியர்களால் பாஷா வித்தியாச மேற்படுத்தப்பட்டு தமிழரெல்லாம் ஓரே ஜாதியாயும், அதிலும் அரசுரிமையுற்றவரைப் பாண்டியர்களென்றும் மற்றெல்லாரையும் பொதுஜனங்களாய் மதித்து விவசாயம், வியாபாரம்கைத்தொழில் ஓதி வைத்தல் முதலிய சகல கிருத்தியங்களும் எங்கள் பாஷையி லேயேயிருந்தன. நாங்கள் மற்றெல்லாப் பாஷைகளையு மெதிர்பார்ப்பதே கிடையாது; பின்னுமெங்கள் தேசத்தில் ஆரிய நச்சுமரங் கள் பலமாய் வேரூன்றி எங்களரசர்களை மயக்கி ஓதி வைத்துக் கொண்டிருந்தவரை தங்கள் வகுப்பில் சேர்த்துக்கொண்டு அவர் களை வேதியரென்றும், வியாபாரஞ்செய்பவரை, வைசியரென்றும் விபசாயம் செய்பவரை சூத்திரரென்றும், பிரித்துவிட்டார்கள் அந்தக்காலத்திலும் கொள்வன கொடுப்பன உண்பன குடிப்பன;

இவைகளில் வித்தியாசம் பாராட்டாமலே யிருந்தோம்; இப்பரு வத்தில் எங்களரசன் வேட்டை போயிருந்த விடத்தில் உழுவை யாலறை யுண்டிறந்து போக உதவியாய்ச் சென்றிருந்த போகஸ் திரீயின் மக்கள் கிரீடமுதலிய ஆபரணங்களைக் கவர்ந்துகொண் டனர், பின்னர் சிலகாலந்தாழ்ந்து இளங்குமாரன் காளையாய்ப் பட்டாபிஷேகமடையும் பருவமெய்த மகுடாபரணமுதலியவைக் காணாமல் எல்லாரும் மயக்கமுற்றிருக்கும் சமயம் எங்கள் குலத் திலேயே பிறந்து எங்கள் பாஷையையே பேசும் சொக்கலிங்கப் பெருமானே மாணிக்கம் விற்றதாகச்சொல்வது பூர்வகதை, தற் சமயம் எங்கள் எதிரிகளாயமைந்திருக்கும் கோவைசியர் சுயதே சம் தெலுங்கு நாடு. பேசும் பாஷை தெலுங்கு, எங்கள் தேசத் திற்கு இவர்கள் வந்தது வடுகராஜ்ஜியமேற்பட்ட காலத்தில் அத ற்கு எத்தனை ஆயிரம் வருடங்களுக்கோ முன்னில் ஏற்பட்டதிக் கதை தற்காலம் எங்கள் பாஷை யொற்றுமை பாதாழத்திலமிழ்ந் திவிட்டதினாலும் இச்சமயமுள்ள ஆரியர்களாலேவப்பட்டு எதிரி களிவ் வியாச்சியங்கொண்டு வந்திருக்கின்றார்கள். தெய்வீகத்தன் மையுள்ள தங்களுக்கு என்ன நியாயம் புலப்படுகின்றதோ; அதை ச்சொன்னால் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

நியா—வாதிகளே !! நீங்கள் என்ன சொல்கின்றீர்கள் ? மனி தசாதியில் பாஷை வித்தியாசமேது? யார் யார் எதைக்கையாடி வந்தார்களோ, அதையவர்கள் வசம் ஒப்பி வைக்கவேண்டியது தானே ? என்றதைத்தவிர வேறெதைச்சொல்லமுடியும். மாணிக் கம் விற்று விளையாடுகின்றதினால் யாருக்காவது பிரயோசனம் உண்டா !! இவ்விஷயம் தற்கால நாகரீகத்துக்கேற்றதா ? மானி டராய்ச்செனித்தவர்கள் அறிவை விருத்திசெய்து கொள்வதே சரி யென்று நம்முன்னோர்களில் அறிவாளிகளான எல்லோரும் கதறு கின்றார்களே ! சாஸ்திரத்தைச்சுட்டுச் சதுர்மறையைப்பொய்யாக் கிச் சூஸதிரத்தைக் கண்டு சுகம் பெறுவதெக்காலம்” என்றோதி யுள்ளனரே. சூஸ்திரமென்றது அறிவைத்தவிர வேறென்ன சூஸ் திரமிருக்கின்றது ? அதை விருத்திசெய்வதற்குக்கல்வியைத் தவிர வேறெந்த மந்திரமிருக்கின்றது 'தொட்டனைத்தூறு மணற்கேணி மாந்தர்க்குக் கற்றனைத்தூறு மறிவு” இவைகளையெல்லாம் யோ சித்து வீண்காலம் போக்காமல் ஆரிய தந்திரத்திலாழாமல் செய்

யவேண்டியதைச் சீக்கிரம் செய்யுங்கள். இச்சமயம் நீங் ண்டுவந்த வியாச்சியம் யாருக்குத் தேவையா யிருக்கின்றதோ ஆழ்ந்து யோசித்து விருப்பமுள்ளோர் சொல்லுங்கள்.

கோ-நா—பிரபு !! தங்கள் போதனுக்கினியால் எங்களிலிருந்த அறியாமை யென்னுஞ் சருகு பஸ்பமாய்விட்டது. இவ்வீண் வேடிக்கைகளெல்லாமெங்களுக்கு வேண்டாம். தேவையுள்ளோர் வைத்துக்கொள்ளட்டும். நாங்களுமெங்கள் பிள்ளைகளும் படித்து முன்னுக்கு வரப்போகின்றோம்.

நியா—நானும் அதையே விரும்புகின்றேன். சீக்கிரம்போய்ச் செய்ய வேண்டியதைச்செய்யுங்கள். கேசின் முடிவான ராசிநாமாவை ஒப்புக்கொள்ளுகிறோம்.

## வேறு கேஸ் கூப்பிடு.

## ஆஜர்.

நியா—எந்தவூர் என்ன வழக்கு ?

வாதி—பிரபு !! வந்தனம். என்னூர் வேதாந்தபுரம், அதோ நிற்கின்றவர் என் பத்தா என்னுடன் நிற்கின்றவர்கள் என்குழந்தைகளும் விருத்தாப்பியமான மாமன், மாமியாருமே. என்பதியோ, எங்களைவிட்டு சன்னியாசியாய்ப் போய்விட்டார். மறுபடியும் கண்டு நானு மிவர்களும் தொடர்ந்து வந்திருக்கின்றோம் ஏழைகள் பேரில் கிருபைசெய்து பதியைச் சதியோடு சேர்த்து வைக்கும்படியாய்ப் பிரார்த்திக்கின்றோம்.

நியா—சன்னியாசியாரே வாரும், உட்காரும், உம்முடைய விருத்தாந்தமென்ன ? உண்மையைப் பேசும்.

சன்—இறைவனே !! நான் உலகத்தை நீங்கினவன்; மோக்ஷத்தை விரும்பினவன்; சிவச்சின்னமணிந்தவன்; ஜடாமுடி புனைந்தவன்; எனக்கும் வாதிகளுக்கும் என்ன சம்பந்தமிருக்கின்றது; யாதொன்றுமில்லை ஆனாலும் நியாயவாயிலாய்ச் சாஸதிர சம்பந்தமாய்த்தாங்கள் சொல்வதை யொப்புக் கொள்கின்றேன்.

நியா—நீர்பேசிய முதல் வார்த்தையே பொய்யல்லவா ? உல

இ கந்தை நீங்கினவர் ஒரு அங்குலமாவது உயரவல்லவா திரியல்வேண்டும் ? நீர் நடக்கின்றதும் பூமியில்; இருக்கின்றதும் பூமியில்; படுக்கின்றதும் பூமியில்; புசிக்கின்றது மின்னுஞ் செய்வன வெல்லாம் பூமியிலேயே வைத்துக்கொண்டீர்; அப்பால் நீங்கினது யாதோ எனச்சொன்றுந் தெரியவில்லையே ? ஈரக்கந்தையில் சுற்றித் தலையிலொரு சுமை வைத்திருக்கின்றீரே, அது தான் சடாமுடியோ என்ன ஞானம். சவரகர் சிரைத்தெரிந்த மயிரைப்பொருக்கி வந்து பால் பசைகளா லொட்டி நீட்டி விட்டுக்காவிக் கந்தையுட் சுருட்டிச் சுமந்துகொண்டு திரியும்படி மடாதிபதிகளுபதேசம் பெற்ற இந்தக்கோலத்தைத்தான்; சடாமகுடமென்கின்றீரோ? கழுத்தில் ஒருவகையான மாலை இலந்தைக் கொட்டைகளைச் சாஞ்சாமாய்க் கோர்த்துத்தொங்க விட்டிருக்கின்றீரே !! இதுவொரு சின்னமாக்கும். வெள்ளை வஸதிரத்தைக் காவிக்கறகளால் நனைத்து அழுக்காக்கி இந்திரிய ஒழுக்கல் முதலிய ஆபாசங்கள் பட்டாலுந்தோன்ருதிருக்கும்படி யணிந்திருக்கின்றீரே !! இதுவொரு குறியாக்கும் ? உமக்கு உபதேசஞ்செய்த மடம் வெகுகாலத்தின் முன்னரே இதைக்கையாடி யிருக்கலா மல்லவா ? அவரைப் பார்த்து இக்கோலங்களால் பசியமருமா ? மனச்சமாதான முண்டாகுமா ? ஆயுள் விருத்திக்குமா ? சரீரபலமேற்படுமா ? அப்படி யேற்படுமானல், அக்குறிகள் எவ்வளவு காலத்துட்காட்டும். உங்களுக்காவது இவைகளெல்லாம் சித்தியாய்விட்டதா வென்று கேட்டீரா ?

சன்—கேட்கவில்லை.

வியா—அது போகட்டும் நீரிவ் வேடம் புனைந்து எவ்வளவு காலமாகின்றது ?

சன்—சுமார் ஐந்து வருடமிருக்கும்.

வியா—எதாகிலுமோர் வகைக்குணக்குறிகள் கண்டதுண்டா

சன்—அப்படி ஒன்றையுங் காணேம்

வியா—பின்னை எனிப்படி யலைகின்றீர் ?

சன்—பூர்வ ஜென்மாந்திரவிதி.

நியா— அப்படியா, பூர்வ ஜென்மம் எந்த ராஜதானியில் எந்தஜில்லாவில் எந்தவூரில் பிறந்திருந்தீர் ? வீட்டின் நெம்பர் என்ன அங்கு என்னென்ன காரியம் செய்தீர் ? பாக்கியுள்ளதையா இப்பொழுது செய்கின்றீர் ?

சன்—அதுவும் ஒன்றும் தெரியவில்லை? தெரியாதிருந்தாலும் முன் ஜென்மம இருக்கத்தானே வேண்டும் ?

நியா—ஆம்: அவசியம் இருக்கத்தான் வேண்டும் அதோ நிற்கின்ற உம்முடைய தாயுந்தகப்பனுமே உமக்கு முன் ஜென்மம். அந்த விதையின் பலமே இந்தமரம். விதை நிலங்களில் ஏதாவது மேக நீர்ச் சம்பந்தமான துர்வியாதிகள் ஏற்பட்டிருந்தால் இந்தச் செனமத்திலும் தொடர்ந்துகொண்டே வரும்; அதுவே முன் ஜென்மத்தொடர்ச்சி.

சன்—முன் ஜென்மந்தா னிப்படியாய் விட்டதே !! இப்பொழுது செய்கின்ற நன்மை தீமையின் தொடர்ச்சி பின் ஜென்மத்திற்காவது பலன் தராதா வென்றையுறுகின்றேன்,

நியா—அவசியம் தொடர்ந்து தான் வரும்; நீர்செய்த பலன்கள் உம்முடைய பின் ஜென்மமாகி அதோ நிற்கின்ற உமது பிள்ளைகளுக்கே பலன் தரும்,

சன்—முன்பின் செனனமில்லாவிட்டாலும் போகட்டும் மோக்ஷ லோகமாவது சேரவேண்டாமா ?

நியா—அவசியம் சேரவேண்டியது தான், ஒவ்வொருவரும் தேடும்பொருள் இன்னதென்று முதலாவது தெரிந்து கொள்ளவேண்டும் அப்புறம் அவ்வஸ்து எவ்விடத்திலுள்ளதென்று விசாரிக்க வேண்டும், இருக்குமிடமறிந்தபிற்பாடு தேடுமுயற்சியில் பிரவேசிக்கவேண்டும் இவ்விசாரமின்றித் தேடப்புகின் எவ்வூருக்கோ செல்கின்றேன் என்ற பிரயாணி கதையாயல்லவா முடியும்; அஃதிருக்கட்டும் நீர்தேடுகின்ற மோக்ஷமென்றது என்ன !! அது எவ்விடத்திலுள்ளது; இவ்வளவு காலமாய்த் தேடுகின்றீரே ? ஒரு நாளாவது கண்டதுண்டா ?

சன்—நான் தேடுகின்ற வஸ்து முத்தி. அது இவ்விடங்களி லுள்ளதல்ல, பரமண்டலத்திலிருக்கின்றது.

நியா—அப்படியா; அன்னிய மண்டலத்திலா இருக்கின்றது நம்முடைய மண்டலத்திலுங்கூட இல்லையா? அங்கேயார் போய் வந்து, உமக்கு யார் மூலமாய்க் கேள்வி; கடிதாசிப்போக்கு வரத்துண்டா? அல்லது நீரே நேரில் பார்த்திருக்கின்றீரா? பின்னை எவ்வகை நியாயத்தைக்கொண்டு தேடுகின்றீர்?

சன்—அப்படியானால் மோக்ஷ நரகமுண்டென்று எல்லாப்புராணங்களுமுறையிடுகின்றனவே?

நியா—புராணங்கள் உம்மைப்போல் ஒருமனிதன் எழுதிவைத்தது தானே? அந்தரத்திலிருந்து விழுந்ததா? சுருதியானது யுக்திக்கும் அனுபவத்திற்கும் ஒத்திருந்தாலல்லவா சரி!!

சன்—அப்படியானால் மோக்ஷநரகம் இல்லையென்று சொல்லுகின்றீர்கள்?

நியா—அறிவிலிகளல்லவா!! அவ்வாறுரைப்பார்; நீர் வேதாந்தம் வாசித்திருக்கின்றீரா?

சன்—ஆம் தத்துவ விசாரணைகளும் செய்திருக்கின்றேன்.

நியா—ஒருவேளை வாசித்துமிருக்கலாம்; அதன் சாரங்களைக் கவர்ந்துக் கொள்ளும் சக்தியில்லாமல் இக்கதியாய் விட்டீர் போலும். வேதாந்தங்களில் சொல்லுகிற தாவது, தத்துவ ஆராய்ச்சி செய்து அதனதன் குணங்குறிகளுடன் அறிந்து தத்துவங்களாற் செய்யப்பட்டதை யானென் றபிமானியாததே முக்தி யென்றும். அபிமானித்துழல்வதே நரகமென்றும் அறிந்திலீர்போலும்.

சன்—நன்றாய் அறிந்திருக்கின்றேன். இவ்வார்த்தைகளெல்லாம் முற்றிலும் பாடந்தான். அப்படியானால் இவைகளையெல்லாம் படைத்த தெய்வமில்லையோ.

நியா—தெய்வமில்லையென்று பயித்தியக்காரனும் சொல்லமாட்டானே தெய்வமில்லையென்றால் நாமெங்கே யிருப்போம் நமது

புசிப்போம் எங்கே வளருவோம் நம்முடைய சுகமெங்கே துக்கமெங்கே மரணமெங்கே அடங்குவதெங்கே எல்லாம் தெய்வத்தினிடத் திருந்தல்லவா செய்யவேண்டும் தெய்வமில்லையே லொன்றுமில்லை தெய்வத்தன்மையாவது தனக்கன்னியமென்ற தொன்றில்லாமல் ஆதியந்தமற்றதாய் வேண்டுதல் வேண்டாமை யில்லாததாய் பெருமை சிறுமை கொள்ளாததாய் நம்மை யென்றும் பிரியாததாய் அளவிடப்படாததாய் எல்லாங் கொடுப்பதுவாய் எதையும் விரும்பாததாய் நிமித்தகாரணமற்றதாய் ஒப்புவமை இல்லாததாய் எண்ணிலடங்காச் சிருஷ்டி கர்த்தாவாய் அனைத்துயிர்க்குந் தாயாய் அங்கிங்கெனாததாய் நினைத்த விடமெல்லாம் பார்க்கக்கூடியதாய் நிர்மல சொரூபமாய் பாட்டுற்றவனையும் பாடல்பெற்றவனையும் பெற்றவளாய் நாம் கண்ணுறங்கினும் காப்பவளாய் அநாதியாயிருக்கும் நம் தாயை மறந்துவிட்டு ஆரிய தந்திரத்திலாழ்ந்து அறிவுகுன்றி அகக்கண்குருடராய் ஆராய்ச்சியற்றவராய் உள்ளதைமறந்தவராய் இல்லாததைத் தேடுபவராய் கண்கண்ட பகத்தைக் கை நழுவவிட்டு ஒருவரும் ஒருநாளும் காணக்கூடாததையே விரும்பி கானலை நீரென ஓடிய மான்போலவேயும் அறிவிலிகளானோமே மகாபாவிகள் செய்துவைத்தமோசவலையிற்சிக்கிக்கொண்டோமே இவ்வலையைப்பீறி என்னாள் வெளிப்படுவோமோ நம் தாயையே தாயென்று யெந்தநாளில் காண்போமோ கமரிலோடும வளமுதை எக்காலமருந்துவோமோ பாவிகாள் கெடுத்தவன்தான் கெடுத்தான் தான்பிழைக்கும்பொருட்டு நீங்களும் சேர்ந்து கூத்தாடுகின்றீர்களே யாதுகாரணம்பற்றி இஃதெனக்கொன்றும் விளங்கவில்லையே என்செய்வேன் எவ்வாறு தெளிவேன் தெய்வமே நீதான் வெளியாக்கவேண்டும்.

சன்—தாங்கள் சொல்வதை யோசிக்குமிடத்துப்பூமியைத்தான் தெய்வமென்று சொல்கின்றாற்போலிருக்கின்றது. பூமியும் மழையை எதிர்பார்க்கின்றவொரு வஸ்து தானே ஒன்றையும் விரும்பாததென்று சொல்வது பிழையல்லவா.

நியா—எதிர் பார்க்கக்கூடிய தென்பது நமதாராய்ச்சியின் குறைவுபூதியங்களைந்தும் நிமிஷமாவது ஒன்றையொன்றுபிரியாமல் சேடித்துக் கொண்டேயிருக்கும் சிநேகத்தை பேதங்களாற் சிற்

சில இடங்களில் பூதிய ஏற்றத் தாழ்ச்சியுண்டாகின்றதே தவிர ஒன்றையொன்று எதிர்ப்பார்ப்பதும் மேல் கீழென்றதும் கிடையாது. பூதியங்களைந்தும் நம்தாயின் அவயவங்களே தவிர வேறொன்றல்ல,

சன்—அப்படியானல் இவ்வளவு காலமும் யான்பட்டபாடு விருதாவாய்ப்போய்விட்டதே! இனிப்பிழைக்கும் வழியையும் நீங்களே சொல்லும்படியாய்ப் பிரார்த்திக்கின்றேன்.

நியா—இனிநீர் செய்யவேண்டியது உம்முடைய குடும்பத்தில் போய்ச்சேர்ந்து விபசாயம் வியாபாரம கைத்தொழில் எதையோ உம்மாலியன்றதைச் செய்து சோம்பேறியாயிராமல் பிள்ளைகளுக்கு வித்தியாப்பியாசம் செய்துவைதது உம்மாலேற்பட்ட பின் ஜென்மங்களுக்கு அனுகூலமுண்டாகும்படி செய்துவையும்.

சன்:— பிரபு என் குடும்ப சவரக்ஷணைக்குப் போய் வருகின்றேன் அகக்கண் திறந்துவிட்டது. இனி ஆரியககண்ணிகளில் சிக்கமாட்டேன் போய்வருகிறேன்.

கேசு ராசியாய் முடித்துவிட்டோம்.

## பியூன் வேறு கேஸ்கூப்பிடு

## ஆஜர்.

நியா:— நீங்கள் யார்? எந்தவூர்? என்னபெயர்? வியாச்சியமூலமென்ன?

வாதி:— ஐயா! எங்களூர் அவிவேகபுரம். யானவ்வூர் பிரதிநிதி பெயர் ஒழியா விபகாரி, சிலநாளைக்குமுன் எங்களூரில் கொள்ளையடித்து விட்டார்கள், நபர் அகப்படவில்லை. தேடித்திரிந்தோம் இப்பொழுது தங்கள் வாக்குமூலங்களிளுலேயே கள்ளர்களென்று ஒப்புக்கொண்டவர்களை அரசன் ஆணையால் தடுத்துக்கொண்டு வந்திருக்கின்றோம். நியாயம் விசாரித்துக் கொள்ளைப்பொருள்கிடைக்கும்படியாய்ப் பிரார்த்திக்கின்றோம்.

நியா:— பிரதிவாதிகளே! வாதி உங்கள்பேரில் கொண்டுவந்தி

ருக்கின்ற வியாச்சியத்திற்கு என்ன முகாந்தரம் சொல்லுகின்றீர்கள்.

பிரதி:— பிரபு! நாங்கள் தன்னைமறந்தாரூரென்னும் குக்கிராமத்தில் வசிக்கின்றவர்கள். நல்ல விபசாயிகள், களவு செய்யவே மாட்டோம். யாது காரணத்தினாலேயோ ஒழியா விபகாரி எங்களை அரசனுனை யிட்டழைத்து வந்திருக்கின்றார்.

நியா:—நீங்களே, நாங்கள்தான் கள்ளர்களென்று ஒப்புக்கொண்டதாய் வாதி சொல்லுகின்றாரே, அதற்கென்ன நியாயம் சொல்லுகின்றீர்கள்.

பிரதி:— ஐயா! கள்ளர்கள் என்றது எங்கள் ஜாதியின்பெயர்.

நியா:— அப்பெயர் ஏற்பட்டதற்கு என்ன காரணம்.

பிரதி:— கள்ளர்களென்றால் மதுரையாரென்று அருத்தம்

சாட்சி கள் மதுரை சதுர அகராதி.

நியா:— மதுரை யாரென்றால் பாண்டியர்களல்லவா?

பிரதி:— ஆம்! அதிலென்ன சந்தேகம், நாங்கள் தான் பாண்டியர்கள்.

நியா:— நீங்கள் பாண்டியர்களென்பதற்கு என்ன ஆதாரம்.

பிரதி:— பாண்-கள். சதுர அகராதி. பாண்டி. கள்ளி விளி வேற்றுமை பெண்.

பாண்டியன்—கள்ளன் இவ்வாதாரங்களாலறிக.

வேம்பன்—பாண்டியன். வேம்பன்— அம்-கள்

அம்-அழகு-நீர்-தொழிற்பெயர் விகுதி.

நியா:— அவ்வாறாயின் மதுரைக்கே, கள் என்ற பெயர்வந்ததற்கு என்ன காரணம்.

பிரதி:— இத்தேசத்தின் புராதன வழக்கம் பயிரிடுந்தொழில் தெரியாது. அக்காலத்தில் கற்பகப்பாளையில் வயிர வாளால் சீவி மாணிக்கக் கட்டைகளா லிடிக்கி சொர்னகலசங்கட்டி முத்துச்சுண்ணாம்பிட்டிறக்கி அதை அரசமாளிகைகளிலும், யாகாதி கிருத்

தியங்கள் செய்யுமிடங்களிலும் மரகதக் கிண்ணங்களில் வார்த்து உண்டாடுவதை எப்புராணங்கள் கூறுதொழிந்தது! அம்மது உற்பத்திசெய்தலே ஆதியில் பழக்கம். அதிலும் முதல் முதல் உற்பத்தியாகிய இடமாயும் எங்களெல்லாருக்கும் அதுவே ராஜதானியாயிருந்ததினாலேயும் காரணப்பெயராக நாளதுவரை மதுரை என்றழைக்கப்படுகின்றது.

நியா:— உங்களை இந்திரனும் அகலிகையும் செய்த சோரப்புணர்ச்சியினால் பிறந்தவர்களென்றும் அதிலுற்பத்தியானவர்கள் மூன்று பிள்ளைகளென்றும், அதாவது, நீங்களொன்று மறவரொன்று அகம்படியாரொன்றென்று கர்ணபரம்பரையாய்க் கேள்விப்பட்டிருக்கின்றேனே.

பிரதி:— நீங்கள் கேள்விப்பட்ட வார்த்தைகள் எங்களைத் தன்னை மறந்து போகும்படியாய் ஆரிய தந்திரிகளாலேற்படுத்திவைத்த பொய்க்கதை. (அக்கதைவருமாறு) கௌதமரிஷியை ஒரு நாளிரவு நாலாஞ்சாமத்தில் ஸ்நானத்துக்குப் போகும்படியாய் இந்திரனானவன் சேவலாய் நின்று கூவ, ரிஷிசென்றுவிட கௌதமன் ரூபத்துடன் இந்திரன் சென்று அகலிகையைப் போகித்துக் கொண்டிருக்கும்பொழுது தடாகம் சென்ற ரிஷி கங்கை நித்திரையிலிருப்பதைக்கண்டு திரும்பிவந்து கபாடத்தைத்தட்ட இந்திரன் பூனையுருவங்கொண்டோட ரிஷி கண்டு இந்திரனையும் அகலிகையையும் சபித்துக் குழந்தைகள் காட்டிய குணபேதங்களால் அவரவருக்குப் பெயரிட்டதாய்ச் சொல்வதே ஆரியகற்பிதநூலின் முறை. இக்கற்பிதநூல் இயற்றியவருக்குத் தானுமூளையுள்ளது. நமக்கு அறிவில்லையா? இதையோசிக்கப்புகின் அகலிகை கௌதமனுடன் அதற்குமுன் எவ்வளவுகாலமோ போகித்திருப்பாள். குழந்தை யென்றொன்றும் பிறந்ததாகக்காணவில்லை. கொஞ்சநேரத்துக்குள் மூன்று குழந்தைகள் திடீர் திடீரென்று பிறந்தால் சந்தேகித்திருக்கமாட்டாளா? போகிப்பவனை நீயாரென்று விசாரிக்கமாட்டாளா? இது நம்பத் தக்கதா? ரிஷிபிண்டம் இராத்தங்காதென்ற போலி நியாயத்தைக்கொண்டு தடுக்கப்பார்க்கின்றீர்கள். அப்படியே இருக்கட்டும். அறிவாளிகளே!! கவனியுங்கள் ரிஷிசென்ற நேரமும் திரும்பியநேரமும் உங்கள் ஞாப

சுத்திலிருக்கலாம். இதற்குள் போகிப்பது எவ்வளவு நேரம். கெர்ப்பவுற்பத்தியாகிப் பிரசவிப்ப தெவ்வளவுநேரம். பிறந்த சேயையும் கற்பாதானத்தையும் கழுவ எவ்வளவுநேரம். மறுபடி போகிக்கப் பின்னும் பிறக்கப் பின்னும் போகிக்கப் பின்னும் பிறக்க நேரமிருக்கின்றதா? பாவிகள் சொல்லிவைத்த கட்டுக்கதைகளை யோசுதத்தால் நம்மையுமொரு மானிட ஜென்மமாகத் தங்களிருதயத்தில் நினைத்திருப்பதாய் என்யோசனைக்குக் கொஞ்சநேரமும் எட்டவில்லை. நியாயாதிபதிகளும் கவனித்திருப்பார்கள்.

நியா:—அப்படியானல் நீங்களாரென்று சொல்கின்றீர்கள்.

பிரதி:— நியாயஸ்தலத்தில வந்து சிக்கிக்கொண்டதனுலும் எங்களை விடுவிக்கும்பொருட்டும் எங்கள் மனதில் நினைத்திருந்தது சரியோ அல்லவோ? என்றதைத் தெரிந்துகொள்ளும் பொருட்டும் வெளியிடுகின்றேன். அறிவாளிகளே! பாரபக்ஷமன்னியில்கவனித்து நியாயத்தை வெளியிடுங்கள். ஐயா! எங்கள் பாஷை உலகந்தோன்றிய காலந்தொட்டுள்ளது. தென்தேசத்தை ஆண்ட எங்கள் முன்னோர்களாகிய சந்திரன், சிவன், விஷ்ணு, எமன் வருணன், இந்திரன் முதலிய பல அரசர்களுமாம். அதை யோதப்புகின் நூல்விரியும். ஆதலின் அதுநிற்க எங்கள் முன்னோர்கள் அரசு புரியுங்கால் மதுரையே தலைநகராகவும் இன்னும் பற்பல இடங்களில் சிற்றரசர்களாயிருந்த செம்பிநாடன், ஈச்சங்குநாடன, மாரநாடன், அம்புநாடன், புரமலைநாடன், மேல்மலைநாடன் தொண்டநாடன், மலைநாடன், வல்லம்புநாடன் என்று இன்னும்பலவகையான கிராமங்களின் பெயரையே மகுடப்பெயராகவைத்து மலைப்பிரதேசங்களிலும் சம பூமிகளிலும் ஆங்காங்கே இருந்து பிரிவினையில்லாமல் ஒற்றுமையாய் வாழ்நது வருங்காலத்தில், ஆரியவெட்டி விருக்ஷங்கள் முளைத்து எங்களில் மலைப்பிரதேசங்களிலுள்ளவர்களைத் தேவர்களென்றும், எங்களை இராக்கதிர் குலமென்றும் இதற்கிடையே மலைப்பிரதேசங்களுக்கும் சம பூமிக்கும்போக்கு வரத்தாயிருந்தவர்களை இடையரென்றும் இருவருக்கும் பொதுவரென்றும் பிரித்துவிட்டு ஒழியாத போர் மூட்டிவிட்டார்கள். அப்பழைய பகையின்னும் ஒழிந்த பாடாயில்லை. இன்னும் எங்கள் இனத்தாரில் சிலரை பாணர்களென்றும், மற்றும் சிலரை ஈழவர்களென்றும், சாலியர்களென்றும்

பிரித்துவிட்டார்கள்.

அதற்குச் சாக்ஷிகள்

சதுரகராதி. பாண்—கள்,

பாணர்—கள்ளர் ஈழம்—கள்

ஈழவர்—கள்ளர் சாவி—கள்

சாவியர்—கள்ளர்

இதற்கிடையே மகமதியக்கடுவாய்கள் சிலரை விழுங்கிவிட்டது. இவ்வகையாய்ப் பிரிந்து ஒருவரையொருவர் மறந்து தேசத்தை யிழுந்து பாஷையின் பலத்தைக் குறைத்து இக்கதியில் வந்துவிட்டோம். இனியாகிலும் நாங்கள் ஒருவரை யொருவர் சந்தித்து ஒற்றுமைபட்டுக் கீழ்நோக்கிப் பாயும் எங்கள் பாஷையைத் தாங்கி எடுத்து மேல் நோக்கவிட்டு சிரேஷ்டம் பெறுவோமோ? அல்லது, இன்னுங்கெட்டு குட்டிச்சுவருய் நாங்களும் எங்கள் பாஷையும் இருந்தவிடந் தெரியாமல் போய்விடுவோமோ? ஐயோ! பாஷாபிமானிகளே தூங்குகின்றீர்களா? உலகந்தோன்றிய நாளுக்கு முன்தோன்றிய உயர்தரப்பாஷை இக்கதியாய் விட்டதே! பிரபு! எங்கள் விருத்தாந்தங்களைச் சொல்லிவிட்டேன் எவ்வாறு தீர்ப்புச்செய்தாலும் அரசராக்கினை சிரமேற்கொண்டு நடக்கின்றோம்.

நியா:—பிரதிவாதிகளே! உங்களில் பிரிவினை யுண்டானதற்கு முதலாவது காரணம் கல்வியில்லாமையே. இரண்டாவது காரணம், ஆராய்ச்சியின்குணங்கெட்டு ஒற்றுமைகுறைந்துவிட்டதே. ஆகையினால், கூடிய சீக்கிரத்தில் உங்கள் பாஷையிலிருக்கும்ஜாதிப்பிரிவினை சமையப்பிரிவினைகளை அடியோடே அறுக்கும் கல்விப் பயிரினை வளர்த்து வருவீர்களானால் அது பலன் தருங்காலத்தில் எல்லாச்சேமமும் உங்கள் பாஷை அடையும். இப்பொழுது நேரிட்ட வியாச்சியத்தில் போதுமான சாட்சி யில்லாமையினால் கேசைத்தள்ளிவிட்டோம்.

பியூன் வேறுகேஸ் கூப்பிடு

ஆஜர்.

நியா:— என்ன கேஸ் சீக்கிரம் சொல்லும்.

வாதி:— பிரபு என் பெயர் உடனிருந்தமுக்கி விஷ்ணுகோவில் தர்மகர்த்தா. நேற்றிரவு திருப்பூசை முடித்து திருவாபரணமிட்டு திருச்சயனஞ் சாதித்து திருத்தாளிட்டு முடியும்வரையிருந்து சென்றேன். காலையிற் போய்பார்த்தேன். கபாடம் சேதிக்கப்பட்டிருந்தது ஆபரணங்களொன்றையுங்காணோம். பெருமாள் குப்புறத்தள்ளுண்டு கிடக்கின்றார். திருப்பணியின் கிரயம் ரூபா அன்பதினாயிரம் பெறும். கும்பாபிஷேகச்செலவு ரூபா எழுபத்தையாயிரம் செல்லும். இப்படி ஆபத்து நேரிட்ட காலங்களில் சமஸ்தானத்திலிருந்தே பரம்பரையாய்க் கொடுக்கின்ற வழக்கம் அதுபோலுத்தரவாகும்படியாய்க் கேட்டுக்கொள்கின்றேன்.

நியா:— சுவாமிக்கு ஏன் நகை செய்து போட்டீர்கள்.

வாதி:— அலங்காரத்திற்காக.

நியா:— நகை யில்லையென்றால் அலங்காரமில்லையோ அப்படியானால் அலங்கரித்த வஸ்து பெரிதா அலங்கரிப்பைப் பெற்றுக் கொண்டது பெரிதா.

வாதி:— அதுவிஷயம் எனக்கொன்றுந்தெரியாது.

நியா:— பெருமாளுக்கு என்ன வரும்படியுள்ளது.

வாதி:— ஒருலக்ஷ ரூபாயிருக்கும்,

நியா:— தாபர சொத்திலிருந்தா? சங்கமசொத்திலிருந்தா ?

வாதி:— தாபர சொத்திலிருந்துதான்.

நியா:— அதற்கு என்ன செலவு.

வாதி— சுவாமி பூசையும் பிராமண போஜன புண்ணிய காரிய கைங்கிரியமும் நடக்கின்றது.

நியா:— போஜனம் சாப்பிடுகின்றவர்கள் என்ன வேலை செய்கின்றவர்கள்.

வாதி— பிராமணாள் என்ன வேலை செய்வார்கள் சாப்பிட்டுவிட்டு சொஸ்தமாய்ப் படுத்து தூங்குவார்கள்.

நியா— இந்தச் சொத்து யாவரால் பெருமாளுக்கு விடப்பட்டது.

வாதி— சமஸ்தானத்திலிருந்துதான் விடப்பட்டது.

நியா— தீர்ப்பு எழுதுகின்றேன், சாய்ந்துகிடக்கும் விக்கிரகத்தை ஒரு ஆள் விட்டுப்பழையபடி எடுத்து நாட்டி விடுவோம் இதுமுதல் தெய்வத்தை அடைத்து வைக்கவும். திரந்துவிடவுங்கூடாது சேவிக்க வருவோர்க்கு யாதொரு தடையுமில்லாமல் கதவுகளை எடுத்தெரிந்துவிடவேண்டியது. பக்திமான்கள் இஷ்டம்போல் தொழுது கொள்வார்கள் அப்படியல்லாமல் பூசிக்க வந்தவரொருவர பூசிப்பவரொருவராயிருந்தால் வந்தவரிருதயவிசுவாசம எவவாறு வெளியாகும ஆகையினுல் வீண்மயக்கச்செலவுகளை யொழித்துப் பெருமாளின் பெயரால் ஒரு தொழிற்சாலை ஏற்படுத்தி ஏழை ஜனங்களுக்கு கூலியுடன் பலதேசங்களும் விரும்பும் விநோதச்சாமான்கள் செய்யும்படியாய் பயிற்றுவிக்கவேண்டியது வரவு செலவு கணக்குகளை அரச அதிகாரிகள் விரும்பும்போதெல்லாம் ஆஜர் செய்யவேண்டியது. விமோசனப்பெருமாள் தொழிற்சாலை யென்று நாமகரணமிட்டு நடத்தி வரவேண்டியது; மற்றுங்காரியங்களுக்கு ராஜாங்கத்தாரிடத்தில் பெருமாளே நேரில் கேட்டுப் பெற்றுக்கொள்வாராகவும். தீர்ப்புச்செய்து அரசாங்க முகர் வைத்து விட்டோம.

## வேறு கேசு கூப்பிடு

## ஆஜர்.

நியா:— நீங்களார் என்ன விபகாரம் சீக்கிரம் சொல்லுங்கள்

வாதி:— ஐயா !! நாங்களிந்த நாட்டார் எங்கள் முன்னோர்களால் கட்டப்பட்ட கோவிலுக்குள் எங்களைப் பிரவேசிக்கப்படாதென்று தடுக்கின்றார்கள், சுயம்புலிங்க தரிசனம் செய்யாததினுல் மிகுந்த பரிதாபப் படுகின்றோம். தங்கள் கிருபையினுல் கிடைக்குமென்று கேள்விப்பட்டு இவ்வியாச்சியம் கொண்டுவந்திருக்கின்றோம். ஏழைகள் பேரில் கிருபைசெய்து அங்கீகாரம் செய்யும்படியாய்க் கேட்டுக்கொள்கின்றோம்.

நியா—வாதிகளே யான் சொல்லுவதைக் கவனமாய்க்கேட்டுப்போது நின்று தே.......................தே

சத்திற்கு ஒருபெயர். இதே தேசத்தின் பரம்பரையாரும் பாண்டியன் சந்ததியாரும் நீங்கள் தான் என்றதற்கு நீங்கள் பேசும் பாஷையே போதுமான சாட்சி தேசத்தின் பெயரை உங்கள் நல்லறிவாலல்லவா பிரகாசிக்கச் செய்யவேண்டும் கிட்டாதாயின் வெட்டெனமற, என்ற நீதிவாக்கியத்தை ஆராய்ச்சிசெய்யாமலும் நாம் விரும்புகின்ற வஸ்து இன்னது அதன் பிரயோசனம் இன்னதென்று தெரிந்துகொள்ளாமலும், வீணேதேட வாரம்பிக்கின்றீர்கள். அதைப்பற்றிக் கொஞ்சம் யோசிப்போம். நீங்களுட்பிரவேசிக்க விரும்புகின்ற இடம், நம்முன்னோர் குடியிருந்த வீடு, இதற்குச்சாட்சியும் வேண்டுமா?

அதன்பெயராலேயே கரதலா மலகம்போற்றெளிவாகின்றது. கோ-இல்- அதாவது அரசமாளிகை, அதனுள்ளிருக்கும் வஸ்து, சிவன், பார்வதி, உயிரோடாவது, இருக்கின்றார்களா? இல்லை, சமாதிக்குள்ளிருப்பதாய் ஐதீகம். எங்கேனுமிருக்கட்டும், அவர்களார்? உங்கள் பாட்டன் பாட்டி, இந்தச்சூட்சத்தை ரகசியமாய் வைத்திருப்பது ஆரியதந்திரம்; நீங்களும் சென்றால், நம்பாட்டன் பாட்டியைப்புதைத்த இடம் தானே! இதுவெனக்கண்டுகொண்டு பேதைச் சனங்களிடம் சொல்லி காபுராச் செய்துவிட்டால் நம்முடைய வரும்படி கெட்டுப்போகுமென்று தான்; ஆரியருக்கோ வடுகாரசு காலத்தே விடாது தடுத்து மேலவாயிலையும் அடைத்தது.

வாதி—அப்படிப்புதைக்கப்பட்டது வாஸ்தவமானாலும் அவ்விடத்தில் சுயம்புலிங்கமாய் முளைத்துவருவானேன்.

நியா—முளைத்ததென்றதே கிடையாது; ஒருவாறு முளைத்ததாகவே வைத்துக்கொள்வோம்; சுயம்புலிங்கமென்றாது என்ன? யோசித்துப்பாருங்கள் சுமார் ஒன்று இரண்டு அடி உயரத்தில் முளைத்த சிறு கல், இந்தச் சிறு கல்லைப்பார்ப்பதற்கு இத்தனையாவலுற்று இவ்வளவு பணம் செலவிடலாமா? இதைவிடப்பெரிய அளவிடப்படாத உயர மகிமையான கற்கள் முளைத்திருக்கின்றதைப்பார்க்கவில்லையா? சோலை மலை, சதுரகிரி, பொதிகாசலமுதலியதைப்போய்ப்பாருங்களேன்,

வாதி—அவைகளெல்லாம் தெய்வசந்நிதியா? அந்த மாமர

பூசிக்கின்றார்கள்.

நியா—இவைகளையெல்லாம் நீங்கள்தான் தெய்வமென்று வைத்துக்கொண்டீர்களா? இயற்கையாகவே அமைந்ததா, அஃ திருக்கட்டும் பூஜிக்கப்படுவது என்ற வார்த்தையின் அர்த்தமெ ன்ன? "காப்பாற்றப்படுவது" தெய்வமென்றால் நம்மையல்லவா காப்பாற்றவேண்டும். நம்மால் காப்பாற்றப்படுவது நமக்குத்தெய் வமாகுமா?

வாதி—பெரிய கோபுரங்களும், பல கற்றூணமைந்த கட்டி டச்சிறப்பையாவது, பார்க்கப்படாதா.

நியா—நீங்களும் விவேகிகளாய்க் கல்வி வல்லுனராயிருந்தா ல் ஆக்ரா, ருஷியா, ஐரோப்பா, முதலிய தேசங்களைச் சுற்றிப் பார்த்தால் அவ்விடமிருக்கும் கட்டிடங்களில், வசிக்கும் மனித ரொதுக்கிடத்தின் மதிப்புக் கதிகம் பெருமென்று உங்களுக்கே வெளியாகும்.

வாதி—நீங்கள் சொல்வது உண்மையானாலும் பேதைச்சனங் களுக்குக் கோவிலென்றொன்றிருந்தாலல்லவா தெய்வ பக்தியுண் டாகும்.

நியா—நீங்களவ்வளவு சுத்தப் பயித்தியக்காரர்களல்ல, நிலா க்காட்டிச்சோறூட்டும் பருவம்கடந்து விட்டது வயது முதிர்ந்து போயிற்று, எத்தனையோ, படிப்பாளிகள், வந்து விட்டார்கள். ஆராய்ச்சியின் குணம் வந்து விட்டது. தெய்வ பக்திக்குக் கல்வி யாலயங்காரண மல்லாது கல்லாலயம், காரணமாகாது, நீங்கள் நல்ல சந்ததியார் இயற்கையிலேயே விபசாரம், பொய், களவு குடிவெறி மாறி மாறி மணமக்களாகல் பாலிய விவாக முதலிய துற்கிருத்தியங்கள் உங்களில் பரம்பரையாயில்லாதது தெய்வத்து க்கு நன்றாய்த்தெரியுமாகையினால் உங்கள் பேரிலிறக்கமுற்றே ஆரி யதந்திரமென்னும் பாதாள கேபியிலடைபடாமல் விலக்கி விட் டிருக்கின்றது; உன்னதபதவியிலிருந்த உங்கள் பாஷையுந் தேச மும் பாதாளம்புக வழிதேடுகின்றது. அறிவன் தேசத்தில் அறி வன் சந்ததியில் பிறந்தவர்களானதால் உங்களுடன் இவ்வளவு தூரம் வாதாடுகின்றேன். ஒரு ஜனசமுகம முன்னுக்கு வரவே

ண்டுமானால் ஒற்றுமையே பலத்த அஸ்திபாரங்களாகவும், கல்வியே அதன் மேற்கட்டிய கட்டிடங்களாகவும், செல்வமே அதில் வசிக்கும் தம்பதிகளாகவும், அதினாலடையுஞ்சுகமே சந்ததிகளாகவும், எழும்பும்படிக்கான வேலைகள் செய்யவேண்டும்.

முதலாவது உங்கள் குடும்பத்தை ஒற்றுமைப்படுத்துங்கள். அதாவது நாம் தாயாதிப் பங்கிட்டுக்கொள்ளவே படாதென்று சத்தியம் செய்துகொள்ளுங்கள், அப்பால் முன் விலகிய ஞாதிகளை ஒற்றுமைப் படுத்துங்கள். எல்லாரும் சேர்ந்து நம் சந்ததியில் பிறந்தபிள்ளைகளில் ஆண்கள் மெற்றிக்கிலேசனுக்குக் கீழேயும், பெண்கள் பிரைமெரி வகுப்புக்குக் கீழேயும், போகாமல் கட்டாயம் படிக்க வேண்டுமென்று உறுதி செய்து கொள்ளுங்கள். அப்பாலுங்களினத்தாரை ஒற்றுமைப் படுத்துங்கள். ஜனசமூகத்துக்கு ஒரு தலைவனை ஏற்படுத்துங்கள். ஆங்காங்கேயுள்ள பொதுப்பண்டின் பணத்தை ஒருமுகமாக்குங்கள். அதைக்கொண்டு வர்த்தகவிர்த்தி கைத்தொழில் முயற்சி செய்யுங்கள். அதில்மிகுந்த ஆதாயத்தால்சிறுகிராமங்களில்பிரைமெரிப்பாடசாலையும், சற்றுப்பெரிதில் லோயர் சக்கண்டிறேரியும் தாலூகா ஒப்பானதில் ஐஸ்கூலும் ஜில்லா ஒப்பானதில் காலேஜும் வைத்துப் பண்டுப்பணத்தை வேறெந்த வழியிலும் செலவிடாமல் ஆங்காங்கே பாங்கிகளேற்படுத்தி முதலைப்பெருக்கி உங்கள் விபசாயிகளுக்கும், வியாபாரிகளுக்கும், கைத்தொழிலாளர்களுக்கும், சொற்பவட்டிக்குக்கொடுத்து தொழிலை விருத்தி செய்யுங்கள்.

பின்னும் நாட்டின்பேதம் மதபேதமென்ற படுகுழியையூடிவிட்டு எல்லாரும் ஒற்றுமையாகும்படி செய்யுங்கள். சகல கிராமங்களிலும் பொதுப் பண்டுக்குப் பணம் சேருங்கள். கைத்தொழில் கற்கும்படி பல பல தேசங்களுக்கு அனேக மாணவர்களை அனுப்புங்கள். கற்று வந்தோரைக்கொண்டு சகலருக்கும் கைத்தொழில் சொல்லிக்கொடுக்கும்படி ஆங்காங்கு கலாசாலைகளேற்படுத்துங்கள். கூட்டு வர்த்தகத்தைக் கையாடுங்கள். முக்கியமாய் புகையிலை, பாக்கு, ஏலம், காப்பி, கற்பகக்கட்டி, பருத்தி, முதலிய இந்நாட்டு விளை பொருள் வர்த்தகம், பெரும்பாலுமுங்களிடத்திலேயே இருக்கின்றது. ஒற்றுமைக்குறைவினாலும் கூட்டுவர்த்தகம் செய்முறை தெரியாமையினாலும் போதுமான லாபம்

ஒருபோதும் கண்டதே கிடையாது. நாகரீக தேசங்கள் செய்யுமுயற்சிகளில் இப்படித் தலைமுறை தலைமுறையாய் இவ்வளவு பயனற்றதாய்ப் போனதாவென்று எப்பொழுதாவது கேள்விப்பட்டிருக்கிறீர்களா? கூட்டுவர்த்தகத்தின் முறையோ. பங்கொன்றுக்கு ரூபாய் பத்து வீதமாய் ஒவ்வொரு வியாபாரங்களிலும் கூட்டுச்சேர்ந்து அவ்வவர் சக்திக்குத் தக்கதாய் எத்தனை பங்கு வேண்டுமோ அத்தனை பங்கெடுத்துக் கொண்டு கொள் முதலாகும் ஸ்தானங்களிலும், விற்பனையாகுமிடங்களிலும், நல்ல அறிவாளிகளும் கல்வியிற்றேர்ந்தவர்களாயும் ஏஜண்டாக நியமித்துப்பெரும் பணம் சேர்த்துப் பூமிகளைச் சுதந்தரம் செய்து விவசாயத்தையும் கை தூக்கி வரியோரெளியோரென்றெண்ணாமல் ஒத்துழைத்து வரவேண்டும். இன்னுமுங்களினத் தவரிலனேகர் பற்பல இடங்களில் செட்டிகளென்றும், கவண்டரென்றும், முதலிகளென்றும், கிராமணிகளென்றும், தீயரென்றும், மூக்கந்தரென்றும், வன்னியரென்றும், கள்ளரென்றும், ஈழவர்களென்றும், சாணார்களென்றும், பாவிகள் செய்யும் இம்சைக்குப்பயந்து ஒளித்துக் கொண்டிருக்கிறார்கள். சிற்சிலர் மறந்தே போய்விட்டார்கள்: நீங்களும் கற்று அறிவாளிகளாகி செல்வத்தைத் தேடுமுயற்சியைக்கண்டு பிடிப்பதுபோல் உங்களினத்தைத் தேடும் முயற்சியையும் கண்டுபிடியுங்கள். கடாசியாயுங்கள் பாஷையே ஜாதியாக முடியும். இன்னுமொரு குறை யுங்கள் தேசாசாரமாயுற்பத்தியாயிருக்கின்றது.

அதையேன் விலக்கப்படாதென்றால் வழக்கமென்கிறீர்கள். நிர்வாணமாயிருந்தது வழக்கமானால் நாகரீக மடைந்த பின்னும் வஸ்திரம் கட்டப்படாதா? அந்தக்குறையையும் எடுத்துக்காட்டுகிறேன். உங்கள் புத்திக்கு ஒப்புக்கொண்டால் வைத்துக்கொள்ளுங்கள் இல்லையென்றால் தள்ளிவிடுங்கள். அதாவது உங்களில் ஆண் பெண் எவர்கள் சரீரத்திலும் எப்பொழுதும் துளையிடுதலென்ற கெட்ட வழக்கங்களை முற்றிலும் நீக்கிவிடவேண்டியது (கவனியுங்கள்) நமது சரீரமானது இளம்பயிர்போலிருக்கின்றது அப்பயிர் முளைத்து வரும்பொழுதே சிறு முள்களினால் அனேக இடங்களில் துவாரமிட்டு வைத்தால் அது வளர்ந்து பலன்தருஞ்சமயத்தில் எவ்வித பலனைக் கொடுக்குமென்று யோசித்தும்

பாருங்கள்: அது போலவே நம்முடைய சிசுக்களை அறியாப்பருவத்தில் காதுகளிலும் மூக்குகளிலும் வேறு சில யிடங்களிலும் துவாரமிட்டு வளர்ப்போமானால் அது வளர்ந்து தன் பலனாகிய அறிவைக்கொடுக்கும் பொழுது எவ்வாறு யிருக்குமென்று நீங்களே யூகித்துக்கொள்ளலாம். இது நிற்க ஒவ்வொரு குடும்பமும், நகையினாலும கலியாண வீண் செலவென்னும் பெரிய ஆபத்திலும் சிக்கிக் கொண்டிருக்கின்றது. ஐயோ பாபிகளா!! நாகரீக தேசங்களைக் கவனிக்கப்படாதா? இப்படித்தானா மணக்கோலம் நடக்கின்றது? வாணவேடிக்கை ஆயிரம், மேளக்கச்சேரி ஆயிரம். பாட்டுக்கச்சேரி ஆயிரம். பல்லக்குப் பிரவேசம் ஆயிரம். பட்டணப்பிரவேசம் ஆயிரம். இப்படி ஆயிரமாயிரமாய்ச் செலவிட்டால் தானா மணமகனும், மணமகளும, சுகமடைவார்கள். இதுநிற்க நகையைக்கவனியுங்கள். ரூபாய் நூறுமுதல் ஐம்பதினாயிரம் வரையுமிருக்கின்றது. நாகரீகதேசங்களில் நகையிட்டா அழகுண்டாக்குகின்றார்கள்: நகையிடாமல் உடையணிந்த நாகரீக தேசப்பெண்ணொன்றையும உங்களில் பெருந்தொகையான நகையணிந்த ஒரு பெண்ணையும் சோடியாய் நிறுத்தி இதில் யாரழகு பிரகாசிக்கிறதென்று பார்த்தால் தெற்றென விளங்கும். இப்படி அழகைக் கெடுக்கும் ஆபரணங்களினால் வரும் கெடுதலைக் கவனிப்போம். ரூபாய் நூறு முதல் ஐம்பதினாயிரம் வரையுமுள்ளதை சராசரி சராசரி ஆயிரமாக்கிக்கொள்வோம். மணமகன், வயது பதினெட்டு ஜீவியகாலம் அறுபது. மீதிநின்றது வருடம் நாற்பத்திரண்டு இதன் வட்டியும் முதலும் ஒரு லக்ஷத்து இருபத்தெண்ணாயிரமாகிறது.

இப்படியே ஒவ்வொரு குடும்பத்திலும் பின் சந்ததியின் பலத்தை குறைத்துக் கொண்டே போனால் எப்படி முன்னுக்கு வருவீர்கள். ஆனால் இன்னுமொரு கேள்வி கேட்பீர்கள். எல்லாருமிப்படி வட்டிக்கு கொடுக்க நினைத்தால், யாவர் வாங்குவார்களென்று இது ஒரு நல்ல கேள்வி தான், ஒருவரும் வாங்கமாட்டார்கள். அது உண்மை தான். அப்பால் என்ன செய்கின்றதென்றால் அனேகங்கூட்டுகள் சேர்ந்து எந்திர வண்டிகள், கப்பல்கள், ஜின்கள், மில்கள், சர்க்கரை, ஆலைகள் ஒர்க்ஷாபீசுகள், நிசவுயந்திரங்கள், ரப்பர்த்தோட்டங்கள், தேயிலைத்தோட்டங்கள், முதலிய

இன்னுமனேகர் தொழில்கள் செய்யலாம். அதனு லேழைகட்கு ஜீவனமும், பணக்காரருக்குப் பணமும் அதோடு தருமமுஞ்சேரும். இப்வடியே பெரும் பணஞ் சேர்ந்தால், என்ன செய்கின்றதென்று கேட்பீர்கள். நல்ல சம்பளம் கொடுத்து நம்மைக் காத்துக் கொள்ளும் சேவகர்களமைத்து நிற்சலனமாய்ச் சகல காரியங்களையுஞ் செய்யலாம். பின்னுஞ் சேர்ந்தாலன்னியரையுங்காக்கலாம். பின்னும் சேர்ந்தால் ஆகாயத்தில் பறக்கலாம் அந்தரத்தில் கோட்டை கட்டலாம். இதிலிருந்து யூகித்துக்கொள்ளாத உங்களுக்கு நான் இன்னுமெவ்வளவு தூரம் சொன்னாலும் பிரயோசனமாகுமா? வீணே உங்களுடன் பேசிக்கொண்டேயிருந்து விட்டேன் இப்பொழுது என்காரியம் பார்க்கவாரம்பிக்கின்றேன்.

## தீர்ப்பு எழுதுகின்றேன்.

நீங்கள் கொண்டுவந்த வியாச்சியமாவது, விட்டில்களானது விளக்கைச்சுற்றிக் கட்டிய திரையின்மீது கொண்டு வந்த வியாச்சியம் போலிருக்கின்றது. ஆகையினுல் செலவு தொகையுடன் தள்ளிவிட்டோம்.

## வேறு கேசு கூப்பிடு.

நியா—எந்தவூர் என்ன கேஸ் சீக்கிரம் சொல்லும்.

வாதி—ஊர் அதர்மபுரம். பெயர் பெரிய மடாதிபதி. கேஸ் என் கையிருப்பு ஒரு லக்ஷ ரூபாய்க்கு, வயிரக் கற்களிருந்தது, தாசி சவுந்தரம் மடத்துக்கு வரத்துப்போக்காயிருந்தாள். பின் சிலகாலமாய் அங்கேயே யிருந்து விட்டாள். நல்ல வேதாந்தியாய் இருக்கின்ருளென்று பெட்டிச் சாவியை அவள் வசம் ஒப்பிவைத்திருந்தேன். இரவில் பெட்டியிலிருந்த ரொக்கத்தையும், இன்னும் சில நகை தொகைகளையும் எடுத்துக்கொண்டு சின்னப்பண்டாரச் சன்னதியைக் கூட்டிக் கொண்டோடிப் போய் விட்டாள். தருமதுரைகள் கிருபைசெய்து வாரண்டு பிறப்பித்து இருவரையும் பிடித்துத் துன்மார்க்கனைத் தண்டித்து, தருமச்சொத்தை என் வசம் சேர்க்கும்படியாய்ப் பிரார்த்திக்கின்றேன்.

நியா—நல்ல வழக்கு வந்தது, உம்முடைய பெயருக்கேற்க நடந்துகொண்டீர் போலும், உங்கள் மடத்துக்கு எவ்வளவு சொ

த்திருக்கும்.

வாதி—ஏறக்குறைய இருபது லக்ஷரூபாய்ச்சொத்திருக்கும்

நியா—அதிலிருந்து எவ்வளவு வரும்படி கிடைக்கும்.

வாதி—சுமார் ஒன்றரை லக்ஷ ரூபாய் வரும்படி கிடைக்கும்

நியா—இந்தச் சொத்துக்க ளெல்லாம் யாவராலுங்களுக்கு க்கொடுக்கப்பட்டது.

வாதி—பூர்வ சமஸ்தானத்தி லுள்ள அரசர்களாலே தான்.

நியா—யாது காரணம் பற்றி உங்களுக்கு அவ்வளவு சொத்தைக்கொடுத்தார்கள்.

வாதி—வித்தியாப்பியாசம் செய்து வைப்பதற்காகவே.

நியா—அப்படிச்செய்து வருகின்றீர்களா ?

வாதி—ஆம் தாசி சவுந்தரமெல்லாம் வேதாந்தம் வாசித்துக்கொண்டிருந்தவள் தானே இப்படிச்செய்துவிட்டாள்

## தீர்ப் பெழுது கின்றேன்.

நியா— வரும்படியின் கணக்குகள் எல்லாம் அரசாங்கத்தார் வசம் ஒப்பிவைக்க வேண்டியது. மட அதிபதியின் போசனச்செலவும், ஒரு வேலைக்காரன் சம்பளமுந், தவிர யாதொரு வீண்செலவும், இருக்கப்படாது. இது முதல் ஒரு வித்தியாசாலை ஏற்படுத்தி படிக்கும் மாணவர்களுக்குப் போசனமுதல் யாதொரு செலவுமில்லாமல் பயிற்சிசெய்து வரவேண்டியது விவேகாதிபதி ஐஸ்கூல் என்று நாமகரணமிட்டு அதன் பெயருக்குத் தக்க பிரகாசமுண்டாகும்படி. நடததி வரும்படியாய்க் கண்டிப்பான உத்தரவுடன் தீர்ப்புச் செய்கின்றோம். அரசாங்கமுகர்.

வேறு கேஸ் கூப்பிடு ஆஜர்.

நியா—என்ன கேஸ் சீக்கிரம் சொல்லும் ?

வாதி—ஐயா ! நான் மேற்கேயிருந்து வந்த வியாபாரி. கீழ்நாட்டில் வேடிக்கைச் சாமான்கள் அனேகமாய் விற்பனையாகுமென்று எங்கள் கம்பெனியார் எவ்வகையாலோ தெரிந்து சாமானுடன் என்னையும் அனுப்பினார்கள். உங்கள் தேசத்தில் ஒன்றும் செலவாகவில்லை, நான் மறுபடியும் ஊர் போய்ச்சேரவேண்டியவன் செலவுக்கோ யாதொன்றுமில்லை, ஆகையால், அரசாங்கத்தாரே

சாமான்களை ஒப்புக்கொண்டு என் செலவுக்கு வேண்டிய தொகைகளைக் கொடுத்தனுப்பும் படியாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

நியா—நீர் எங்கேயிறங்கி யிருக்கின்றீர் ?

வாதி— இவ்வூருக்கு வடபாகத்திலுள்ள 264 நெம்பர் கட்டிடம் முசாபர்ப்பங்களாவில்.

நியா—உம்முடைய பாஷை பெயர் யாது ?

வாதி—பாஷை தமிழ் ஒற்றுமை நாளுள்ளானென்று கூப்பிடுகின்றது.

நியா— அப்படியானால் வேறு பெயரும் ஒன்றுண்டோ.

வாதி—ஆம் அதைச் சொல்லமுடியாது.

நியா—உமக்கு விவாகம் ஆகியிருக்கின்றதா ?

வாதி—இல்லை செய்து கொள்ளவு மாட்டேன்

நியா—தாய் தகப்பன் இருக்கின்றார்களா ?

வாதி—இருப்பார்கள் அதன் விபரம் நன்றாய்த்தெரியாது.

நியா—ஏன் கண்ணீர் வடிக்கின்றீர்.

வாதி—அதைப்பற்றி ஒன்றும் சொல்லமுடியாது.

நியா—அஃதிருக்கட்டும் இப்பொழுது நீர் கொண்டு வந்திருக்கும் வியாச்சியத்திற்கு பைசல் சொல்ல எனக்கு அதிகாரமில்லை மேலே எழுதி உத்தரவைத் தெரிந்து கொண்டு நீரிருக்குமிடத்திற்கு ஆடர் செய்கின்றேன். அதன் பிரகாரம் நடந்து கொள்ளலாம் போய் வாரும் இவ்வாறு நிகழும் சமையத்து எவ்வன பாலியஸ்திரீகளில் ஒருத்தி என்னிருதயங் கவர்ந்து கொள்ளப்பட்டதே எனப்புலம்பித் திடீரெனக்கீழே சாய்ந்தாள் உடனிருந்தபெண்கள் மரியாதையுடன் தூக்கிக் கொண்டு போய்விட்டார்கள். கச்சேரியு முடிந்தது சபையுங்கலைந்து விட்டது;

## 9 வது அத்தியாயம்.

உயர்ந்த மேல் மாடியின் மேல் ஒரு பெண் சோகித்துப் படுத்திருக்கின்றாள் திடீரெனப் பதறி எழுவாள் மறுபடியும் அயர்ந்து விழுவாள் வேதனை பொறுக்காமல் அழுவாள் பாங்கிகள் அடர்ந்த குழுவாள் படுக்கையை விட்டு நழுவாள் தோனியரொருவரை

யும் தழுவாள் உயிர்ப்புறஞ்சுவாசமிசன்கைமழுவாள் மெய்யவன்கிரணத்துற்றபுளுவாள் சேடியர் கண்டிக்கமுடியாத பளுவாள் சொன்னதைமாறிமாறிச்சொல்லும் வழுவாள் அடி தோழிகளே நான் கண்டமுகமென்னமதியா அதுவே என்பதியா காட்டிமறைந்தது நீங்கள் செய்தசதியா இப்பாடுபடவைத்ததென்விதியா என்கண்ணிலிருந்தோடூருவதுநதியா அழைக்கின்றேமென்றேய்ப்பது துதியா என்னைச்சோதிக்கவிதுததியா அடி என்னுயிர்ப்பாங்கி! நான் சொல்வதைக்கேட்கவிரும்பு நீ புன்னகை கொள்வது குரும்பு நீங்களெல்லாமெனக்கொரு துரும்பு அன்புடையளாகியென்பக்கந் திரும்பு அவரிளமுருவற்பல்முல்லை அரும்பு கண்களிரண்டும் பறக்கமுடியாத சுரும்பு வசனத்தின்சுவையோ கணுவிலாத கரும்பு என்விசயத்தவர் மனம் இரும்பு சகியே இனி எப்பொழுதும் விடியவேமாட்டாதோ யுகாந்தகாலமென்றது இன்றுதான்வந்துவிட்டதோ அவர் பேசிய உதாரமும் வார்த்தைகளின் சாரமும், அதிலடங்கியபொருள்களும், யாவர் மனதைத்தான் கவராது தீர்க்கமான மனமும், சிரித்த முகக்குறியும், பார்வைக்கடங்காத மார்பும், பயந்தார்கள் வார்த்தையில் வரும் சோர்பும், பதில்மொழிவருகின்றசார்பும், நீங்கள் கவனித்தீர்களா இல்லையா?

அதைச்சொல்லமுடியாது அதன் விபரம் நன்றாய்த்தெரியாது என்ன வசனம், என்ன சாதுரியம், என்ன அழகு, என்ன வசிகரம்; என்ன கெம்பீரம், என்ன உதாரம், இதோ வந்துவிட்டாரே நீங்களப்புறம் போய்விடுங்கள் நான் தனியே சில சங்கதிகள் பேசவேண்டியதிருக்கிறது இஃதென்ன மாயம் ஐயோ!! கண்ணுக்கெட்டியதுகைக்கெட்டவில்லையே! உடை நழுவுகின்றதே சுவாச மயருகின்றதே ஆவிபோய்விடும்போலிருக்கின்றதே என்ன செய்வேன் இக்கனியை யாவர் தருவார் எவரைக் கேட்பது மயக்கமாய் வருகின்றதே என்னை விட்டு விடுங்கள் படுக்கையில் சாயுங்கள் மெல்லென விடுங்கள் ஐயோ!! அம்மா தெய்வமேகதி;

பாங்கிகள்

அடியே சொர்னம் இனி என்னடி செய்கின்றது கமலாபாய் சிரிக்கின்றாள் அவளுக்கு வேடிக்கையாயிருக்கின்றது குழந்தை மறுபடியும் சோகித்துவிட்டதே இனி எப்படி தேற்றுகின்றது சூரியனும் உதயமாகிவிட்டதே இதுசங்கதியை நமதரசிக்குத் தெரிவிக்க வேண்டுமல்லவா நீங்களிங்குதானே இருங்கள் நான் போய்வருகின்றேன் பெரியகாரியத்தில் கவலைவைத்தொரு பெண் சென்று திரு

புகின்றாள் பதி எதிர்நோக்கிவருகின்றார்.

சமாதானி எங்குபோய்வருகின்றாய் நாதா நானெங்குபோவேன் அந்தப் புறத்தோரதிசயம் என்ன அதிசயம் ஒருநாளுமில்லாதது இனியவசனி என்னவோ ஒருவகையா யிருக்கின்றாள் ஓஹோ இருக்க வேண்டியதவசியந்தானே பருவம் வந்துவிட்டதல்லவா நியாயஸ்தலத்தில் நேற்று ஏதாகிலும் அதிசயம நடந்திருக்குமோ நேற்று விசாரணை ரிக்காடுகளை எடு இது மடாதிபதி கேஸ் இதிலொன்றுமவ்வகையதிசயங்கள் தோன்றற்கிடமில்லை. இது ஒரு வியாபாரி கேஸ் ஒருவாறு யோசிக்கப்புகின் இதிலனேக மதிசயங்களடங்கியிருக்கின்றதே சமாதானி இந்த வாக்குமூலத்தைக் கொஞ்சநேரம் கவனித்துப்பார்.

நாதா இதிலுள்ள வார்த்தைகள் என்னிருதயத்தைப் பேதிக்கும்படி செய்கின்றது இம்மொழியறைந்தோனைக்காண என்மனம்துரிதமாகின்றது. (**264**) நம்பர் கட்டிடத்திற்கு நாமே போய்வருவோமாவென்றவாவுறுகின்றேன் என்ன சொல்கின்றீர்கள்.

பெண்ணே சமாதானி அவசரப்படாதே விவேகானந்தனைக்கொண்டு எல்லாம் செய்விக்கலாம் நீ யிங்குதானே இரு நான் வெளியே போய்வருகின்றேன்.

காலஞ்சென்றது.

ஒரு பாலியகுமாரன் அநேக வேடிக்கைச் சாமான்களைப் பல கூலியாள் தலைமீதேற்றிக்கொண்டு அரசமாளிகையை நோக்கிச்செல்கின்றான் கோயிலை அடுத்துவிட்டான் அரசனும், அரசியும், தூரமாய்வரும்பொழுதே பார்த்து சம்பாசிக்கின்றார்கள் பெண்ணே வருகின்றவன் நா.ப. யோசித்தபடியல்லவென்றே நினைக்கின்றேன் மகாதிடகாத்திரனைப் போர் வீரனைப்போலல்லவா இருக்கின்றான் வீரகெம்பீரபுருஷனையிருக்கின்றானே இவனைப்பார்த்த பருவகன்னிகை சகிக்கவாசெய்வாள் ஆனால் மங்களம் முடிந்தது நாம் எண்ணியகாரியம் இவ்விசயத்திலிருந்து வெளியாகமாட்டாதென்றே நினைக்கின்றேன் ஆனாலும் வரவரத் தெளிந்துகொள்வோம்

வியா— இவ்வேடிக்கைச் சாமான்களால் தங்களைக்கண்டுகொள்ளும்படியாகவே கொண்டுவந்தேன் சிலகாரியங்களுமுண்டு அதுகை

கூடும்படியாய்க் கிருபைசெய்யவேண்டியது என்னை வரும்படியாய் உத்தரவாகியே வந்திருக்கின்றேன்.

வித்—உமக்கு விவாகமாயிருக்கின்றதா ?

வியா—இன்னுமில்லை அதுவிஷயம் முடியாத காரியம்.

வித்—ஏனப்படிச்சொல்கின்றீர்? நேற்றுமப்படியே பேசியிருக்கின்றீர்.

வியா—அது விஷயங்களைப்பற்றி அதிகமாய்ப்பேச எனக்கிஷ்டமில்லை, தங்களைப்பார்த்தது முதல் என் மனம் மிகுந்த சஞ்சலப்படுகின்றது. அதனாற்றான், உங்கள் முகம் பாராமற் கவிழ்ந்து கொண்டே இருக்கின்றேன்.

வித்—உம்முடைய தாய் தகப்பன் இருக்கின்றார்களா? ஏன் கண்ணீர் வடிக்கின்றீர், சமாதானமாயிரும் சென்ற காரியங்களைப்பற்றி, விசனப்படாதீர், வருவது வந்துதானே தீரும்.

வியா—இவரைப் பார்த்தால் முற்றிலும், என்பிதாவைப்போலவே இருக்கின்றது ஆனால், பருவம் முதிர்ந்து காட்டுகின்றது. நாமுட் பிரவேசிக்கும்பொழுதோர் பெண்ணிருந்தெழுந்து போனாளே! அவளை என்தாயென்றே நிச்சயமாய்ச்சொல்வேன் ஆனால் அவர்கள் இவ்விடத்திற்கு எண்ணமாய் வருவார்கள்? வரவே மாட்டார்கள். உலகத்தில் கொஞ்சம் குறைய ஒருவரைப் போலொருவரை அனேகமாய்ப் பார்க்கலாம், அதிலும் நமக்குப் பெற்றோரைக் காணுமவா மிகுதியால் இவ்வாறு சிந்திக்கின்றோம். நாம் இப்படியே மனோராஜ்யஞ் செய்து கொண்டிருப்பதிலென்ன பிரயோசனம்.

எதையாவது கேட்டுத்தானே தெளியவேண்டும், துணிந்து கேட்போமா! கேட்டால் என்னதான் செய்து விடுவார்கள், பிரபு!! நானொருகாரியம் கேட்கின்றேன் தயவு செய்து போதிய விடையளிக்குமாறு வேண்டுகின்றேன்.

அதாவது தங்கள் சென்ன தேசம் இதுதானா ?

வித்—இல்லை நெடுந்தூரமிருக்கின்றது.

வியா—இங்கு என்ன காரியமாய் வந்திருக்கின்றீர்கள் ?

வித்—ஏதோ பல விஷயங்களாயிருக்கும்.

வியா—தனியாக வந்திருக்கின்றீர்களா? வேறு யாராவது கூட வந்திருக்கின்றார்களா?

வித்—ஒண்டியாயில்லை, சதிபதியாகவே வந்திருக்கின்றோம்.

வியா—உங்களுக்குச் சந்ததி உண்டா இல்லையா?

வித்—உண்டும்.

வியா—இருந்தால் தங்களுடனே கூட்டி வந்திருக்கின்றீர்களா,

வித்—கூட்டிவரவில்லை, உன்பெயரென்ன, ஜெகரக்ஷகனா?

வியா—ஆம் என் பிதாவே தங்கள் பாததெரிசனை கிடைக்க இவ்வளவு காலம் கடந்துவிட்டதே, என்று திடீரென விழுந்து வணங்கினான், மறைவிலிருந்த சமாதானியும் வந்து விழுந்து, ஒருவரோடொருவர் கட்டிக்கொண்டு அழுது தேறி, அவர்களடைந்த துக்கமும் சந்தோஷமும் இன்னவிதமாயிருக்குமென்று படிப்பவர்களே! அறிந்து கொள்ளவேண்டியதே தவிர கதாரூபமாய் எழுத முடியாது. சந்தோசமாய்ச்சிலகாலம் கழிந்தது.

கன்னிகாமாடத்தின் தடாகத்தண்டை ஒருபாலியன் உலாவிக்கொண்டிருக்கின்றான் சிலபெண்களுடன் ஒருபருவகன்னிகை ஸ்நானம் செய்கின்றாள் மாது நோக்குகளில் இருவர்பார்வையும், ஒன்றையொன்றிழுத்து ஆடவனைப் பெண்ணினிருதயத்தும், பெண்ணை ஆடவனிருதயத்தும், அடைத்துவிட்டன இருவரும் தங்களைமறந்து அயர்ந்துபோயினர் ஆங்காங்குள்ள ஏவலாளர்களால் ஓரேஇடத்திற்கே கொண்டுபோகப்பட்டனர்.

வித்தியாதரன் புன்னகையுடனே வந்து பெண்ணே சமாதானி இப்பொழுது நடந்திருக்கும் சமாசாரங்களை விசாரித்தாயா?

சமா—ஆம் எல்லாம் தெரிந்துகொண்டேன் பழம், நழுவிப்பாலில்தான் விழுந்திருக்கின்றன இனி காரியத்தை நடத்துவதற்கு யாது தடை.

வித்—யாதொரு தடையுமில்லை விவேகானந்தனுக்கு மணக்கோலபிரகாரஞ்செய்ய உத்தரவிடுகின்றேன்.

உத்தரவு வருமாறு.

நம் தேசத்திலுள்ள சகல சனங்களும் கொண்டாடும்படியான திருமணப்பிரகாரம் ஜௌமியஸு கார்த்திகைமீ 16உ புதன்கிழ

மை (1-12-09) ல் உலகமாதாவின் கிருபையை முன்னிட்டு ஜெகரக்ஷகனுக்கும், இனிபவசனிக்கும், விவாகமகோற்சவம் நடக்கப்போகிறபடியால் தாங்கள் அனைவரும் வந்திருந்து பாஷையொற்றுமையாகிவிட்டோம் சாதிமதபேதப்படுகுழியினின்று கரையேறிவிட்டோம் என்றதைக்காட்டும்பொருட்டும், அரசமாளிகையில் ஒரு பந்தியிலிருந்து விருந்துண்டு தம்பதிகளை ஆசீர்வதிக்குமாறு வேண்டிக்கொள்ளுகின்றேன்.

இங்ஙனம் தங்களன்புள்ள

வித்தியாதரன்.

திருமணப்பிரசுரம் உலகெங்கும் பரந்தது நாடெல்லாம் சமாதானம் ஊரெல்லாம் ஒற்றுமை வீடெல்லாம் சந்தோஷம் இச்சந்தோச சமாசாரத்தை கேட்ட பிரபுக்களிலனேகர் வித்தியாசாலைகள் தொழிற் சாலைகளுக்கு வேண்டிய திரவியங்களை அனுப்பியும், தங்கள் தங்கள் கிராமங்களில் வேண்டியமட்டிலும் போனகஞ்செய்து சாதிமதவித்தியாசக்கட்டறுந்த சந்தோசத்தினால் யாவருமொன்றாயிருந்து போசனமருந்திக் குறித்தகாலவரையில் விழாவுற்சவமாய் உலகெங்கும் நடந்துகொண்டிருந்தன காலமும் வந்துவிட்டது.

எல்லோரும் மணமகனகம் வந்து சூழ்ந்தனர் போசனம் செய்தாயிற்று.

மணமகனும், மணமகளும், புஸ்பாலங்கிருதராய் சபையின்நடுவிலமைத்த மேடையின் மேல் எழுந்தருளியாயினர்.

வித்தியாதரன் எழுந்து ஆவலுடன் வந்து கூடிய மகாசனங்களே ஜெகரக்ஷகனையும், இனியவசனியையும், கவனித்துப் பார்த்தீர்களா? ஏதாகிலும் ஆபரணம் அணிந்திருக்கின்றார்களா? அழகு குறைந்துவிட்டதா? மேலிட்டிருக்கின்றதா? வென்று கவனியுங்கள்.

கற்றோர்க்குக் கல்விநலனே கலனல்லால்
மற்றோரணிகலன் வேண்டாவே—முற்றும்
முழுமணிப்பூணுக்குப் பூண்வேண்டாயாரே
அழகுக்கழகு செய்வார்.

தருமைத் தந்தையாகிய ஸ்ரீ [illegible]
என்று நம [illegible] திருவாயமலர்ந்தருளிய

வாக்கியம் இன்று நிறைவேறியது போலும்,

நீங்களும் என்னைப்பின்றுடர்ந்து உங்களில் ஐசுவரியவான்கள் முதலில் இதைக்கையாடுவீர்களானால் ஏழைச்சனங்கள் உடனே உங்கள்பின்றுடரும் உலகம் இரக்ஷிக்கப்படும் அந்தப்புண்ணியம் ஐசுவரியவான்களையே சேரும் அதோநிற்கின்ற மணமகனையும் மணமகளையும் பொருந்திவாழும்படியாய் நம்தாயாகிய உலகமாதாவைப்பிரார்த்தித்து கரகோசத்துடன் நீடூழிவாழ்க! நீடூழிவாழ்க!! என்றோதுங்கள் மங்களம் முடிந்தது சுபம்! சுபம்!! சுபம்!!!

## இராஜவாழ்த்து.

தனுவுடையரசரெல்லாந் தாளிணைபணிந்துபோற்ற
மனுநெறிமுறைதப்பாமல் மாநிலமுழுதுங்காக்கும்
சனுவுடையரசன்சார்சுச் சக்கரவர்த்திசெங்கோல்
பனிமதிரவிநாளுள்ள வரையிலும்பாரில்வாழி.

இந்நிலமுழுதும்போற்ற விந்தியாவடங்கலுக்கும்
பொன்னவிர்மகுடந்தாங்கிப் புரந்தருள்சக்கிரவர்த்தி
மன்னவர்பெருமான்சார்சு மகராஜன்வலக்கைகொண்ட
தன்னிகரிலாதசெங்கோல் சகத்தில்நீடூழிவாழி.

மிக்கநன்னெறியினிந்த மேதினிபுரக்குமெட்டுத்
திக்கில்வாழரசரெல்லாந் திறைகொடுத்துவந்துபோற்ற
தக்கசீர்படைத்தகோமான் சார்செனுஞ்சக்கிரவர்த்தி
மக்களுஞ்சுற்றஞ்சூழ வாழிநீடூழிவாழி.

தந்தைதாயெனவேநம்மைத் தயவுடன்பரித்துகாக்குஞ்
சிந்தையான்கருணைவாய்ந்த சியார்செனுஞ்சக்கரவர்த்தி
தந்தித்தேவிருமேரிச் சக்கரவர்த்தினியும்பெற்ற
மைந்தரும்புவியின்மீது மகிழ்ந்துநீடூழிவாழி.

வித்தியாதரன் முற்றிற்று.

## 1913-ஸு மேமீ 9உ வெள்ளிக்கிழமை வெளியான சுதேசமித்திரன் பத்திரிகைப்பிரசுரம்.

### மதபோதனையைப்பற்றி எச்சரிக்கை.

மேற்கண்ட விஷயத்தைப்பற்றி ஒங்கோல்நாயன சாஸ்திரிகள் ஆங்கிலப்பத்திரிகைக்கு பின்வருமாறு எழுதுகிறார்.

(1) மதம் மனிதர்களுக்குப்பரமவிரோதி

(2) அது சுயபுத்தியைக்கெடுக்கிறது

(3) அது, பொய்யாக நடித்தலை அங்கீகரிக்கிறது. அது அவிவேகமான பழக்கங்களுக்கு இணங்கும்படி செய்கின்றது.

(4) அது, எந்த விஷயத்தையும் எளிதில் நம்பும்படிசெய்கிறது.

(5) அது, மனிதர்களைச் சோம்பேறிகளாகச்செய்கிறது.

(6) அது உலக சம்பந்தமானவைகளில் அக்கரைகொள்ளாமல் அசட்டை உண்டாகும்படி செய்கிறது. அது மதவித்தியாசத்தையும் சாதி வித்தியாசத்தையும், உண்டாக்குகிறது.

(7) அது, ஜனங்களிடத்தில் விசுவாசத்தை உண்டுபண்ணாமல் வெறுப்பைக் காட்டும்படி செய்கிறது.

(8) அது ஜனங்களை ஹிம்சை செய்யும்படி ஏவுகிறது. ஆகையால் மதபோதகர்களே, ஆசாரியர்களே, மதபோதனையைப்பற்றி எச்சரிக்கையாயிருங்கள்,

(a) சிறுவர்களுக்காவது, மற்றவர்களுக்காவது, மதத்தை போதனை செய்யாதேயுங்கள்.

(b) பகுத்தறியும் சக்தியை உபயோகிக்கும்படி மாணாக்கர்களுக்கும், மற்றஜனங்களுக்கும், போதனைசெய்யுங்கள்.

(c) காரணகாரியங்களுக்குச் சம்மந்தம் இருக்கிறது என்பதைப் போதியுங்கள்.

(d) நற்செய்கைகளைச் செய்யவேண்டியதற்கும், கெட்டசெய்கைகளை செய்யக்கூடாததற்கும் காரணத்தைப்போதிக்கவேண்டும்.